Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

රූපා 12/00

දිනමුරසු වාරමලර් ஜன.02-08,2000

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 338



## வருக புத்தாண்டே!

புத்தாண்டே வருக...!
புத்தாயிரமாண்டே புதுமையுடன் வருக...!
இத்தனை நாள் பட்ட துயர்
அத்தனையும் பறந்தோட
புத்தம் புது உலகை
புதுப் பொலிவுடன் துலக்க
புத்தாண்டே வருக...!
புத்தாயிரமாண்டே புதுமையுடன் வருக!

தினமுரசு வாசகர்களுக்கும் முகவர்களுக்கும், விளம்பரதாரர்களுக்கும், அச்சகத்தாருக்கும் முரசின் புத்தாயிரமாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்

தேர்தல் படிப்பினைகள்



"சிம்ரான் என்ன பெரிய கட்டழகியா?"

# சீறிப் பாய்கிறார் கௌசல்யா

# முரசம்

## வருக புதிய மில்லேனியம்!

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

வாழ்த்துக்கள்!
நாம
புதிய மில்லேனியத்துள்
பிரவேசிக்கிறோம்!

புத்தாயிரமாம் ஆண்டு
என்பது
மனித குலத்தின் ஒரு
நெடுங்காலப் பயணத்தை
நிறைவு செய்து கொண்டு
அடுத்ததோர்
நெடும் பயணத்துக்கான
மங்கலகரமான
ஆரம்பமாக
மலர்ந்துள்ளது.

இத் தருணங்கள்
பிரமிப்பானவை.

இப்படியானதோர்
காலச் சந்தியைக்
காணக் கொடுத்து வைத்தவர்களில்
நாமும் அடங்கியிருப்பதில்
மகிழ்ச்சி கொள்வோம்!

உலகம்
புத்தாயிரமாம் ஆண்டை
வரவேற்க
எத்தனையோ
ஆயத்தங்களுடன்
காத்திருக்கிறது.

பாரிய கொண்டாட்டங்களையும்
பிரார்த்தனைகளையும்
ஏற்பாடு செய்துள்ள
அதேவேளையில்
உற்பத்தியாளர்களோ
பல்வேறு புதிய வகை தொகையான
புதிய பொருட்களை
அறிமுகப்படுத்தி
உலகை
நவீனமயப்படுத்தி
விடுவதற்காகக்
காத்திருக்கிறார்கள்.

எதிர்கால உலகத்தில்
விரியப்போகும்
புதிய விடயங்களுக்காக
நாம் எதிர்பார்ப்புடன்
காத்திருக்கிறோம்.

அறிவியல் துறையில்
பாரிய புரட்சியையும்
மருத்துவத்திலும்
தொழில் நுட்பத்திலும்
பெரும் பெரும்
முன்னேற்றங்களையும்
நாம் இப்போதே
எதிர்வுகூறக் கூடியதாய்
இருக்கிறது.

இந்த நூற்றாண்டின்
இறுதித் தருணத்தில்
எட்டிப் பிடித்த
புதிய சாதனைகள்
இதற்கான
நம்பிக்கை ஊட்டுகின்றன.

இப் புத்தாயிரமாண்டில்
பிரவேசிக்கும் தருணத்தில்
நாம்
கடந்த காலத்தையும்
திரும்பிப் பார்ப்பது
கடமை.

முன்னைய ஆயிரமாம் ஆண்டில்
மனிதகுலம் வாழ்ந்த
வாழ்நிலையை
மனதிருத்திப் பார்த்தால்
எத்துணை பாரிய
மாற்றத்தை நாம்
கடந்து வந்துள்ளோம் என
வியக்க வைக்கிறது.

அத்தனைக்கும் நாம்
எம் முன்னோரின் உழைப்புக்கு
நன்றிசொல்லக் கடமைப்பட்டுள்ளோம்!

அவர்கள் கடந்த
நெடும் பயணம்
இலகுவானதாக
இருக்கவில்லை.

இரண்டு பெரும்
உலகமா யுத்தங்களைத்தான்
அண்மைய நூற்றாண்டுகளில்
நாம் கண்டோம்.

ஆனால்
வாழ்க்கை பூராவும்
யுத்தமாக இருந்த
கடந்த மில்லேனியத்தின்
ஆரம்ப காலங்களை
நாமறியோம்.

இயற்கைக்கு எதிரான யுத்தம்;
காலநிலைக்கு எதிரான யுத்தம்;
நோய்களுக்கு எதிரான யுத்தம்;
மடமைக்கு எதிரான யுத்தம்
என்று வாழ்க்கைக்கான
நீண்ட யுத்தத்தை
நடத்தி வந்த எம் முன்னோர்,
மனிதர்களுக்கிடையேயான
யுத்தத்தையும் நடத்தத்
தவறவில்லை.

இப்பெரும்
போராட்டத்தின் விளைவாகக்
கிடைத்த வாழ்வை
இன்று நாம் அனுபவிக்கிறோம்.

அடுத்த ஆயிரமாம் ஆண்டில்
கால்பதிக்கும் இந்த
மகிழ்ச்சிகரமான தருணத்தில்
சில வேதனைகளையும் சேர்த்தே நாம்
எடுத்துச் செல்கிறோம்.

இன்னும் இது
போர் ஓயாத உலகாகவே
இருக்கிறது.
வறுமை மாறாத
உலகாகவே இருக்கிறது.
பழைய நோய்களுக்கு
விடைகொடுத்து விட்டாலும்
எயிட்ஸ் போன்ற
புதிய நோய்களின்
மரணப்படுக்கையையும்
நாம் காவிச் செல்கிறோம்.

நாம் எதிர்கொள்ள வேண்டிய
சவால்களையும்
ஏற்றுக்கொண்டே
புதிய மில்லேனியத்துள்
நம்பிக்கையுடன்
கால்பதிப்போம்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# ஆன்மீகம்

## மந்திரங்கள்

கிரியைகள் மூலம் கடவுள் அருளைப் பெறுவது சைவ சமயத்தில் ஒரு வழி. கிரியைகளுக்குப் பிரதானமானது மந்திரங்கள்.

சைவக் கோவில்களில் கிரியைகள் நடைபெறும்போது மந்திரங்கள் பிரதான இடத்தைப் பெறுகின்றன. அபிஷேகம், அலங்காரம், நைவேத்தியம், தூப தீபம் முதலானவற்றுடன் உரிய மந்திரங்கள் சொல்லப்பட வேண்டும். இம்மந்திரங்களை உருவாக்கித் தந்தவர்கள் முன்னாளில் வாழ்ந்த ஞானிகள். அனுபவரீதியாக ஒவ்வொரு சொல்லாகப் பொறுக்கி எடுத்துப் புனிதமாக வரிசையாகக் கோர்க்கப்பட்ட சொற்கள், அவற்றுக்குரிய சரியான உச்சரிப்புடன் ஓதப்படவேண்டும்.

இம்மந்திரங்கள் எம்மில் பலருக்குப் புரியாத சமஸ்கிருத சுலோகங்களாகவிருப்பினும், அதில் தொகுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வார்த்தையும் அர்த்தம் பொதிந்தவை. வழிபடும் மூர்த்திக்குரிய மந்திரத்தை உரிய முறையில் ஓதும்போது மூர்த்திக்கு ஓர் அதிர்வு ஏற்படுகிறது. அந்த அதிர்வே ஓர் அலைபோல மிதந்து வழிபடும் எம் உள் உணர்வுகளை அதிர்வடைய வைக்கிறது. அப்போதுதான் எம்முள்ளத்தில் பக்தி வெள்ளம் பாய்கிறது.

மந்திர உச்சாடனம் உரிய அதிர்வினை ஏற்படுத்தத் தவறுமானால் அம் மந்திரத்தால் எப்பயனும் ஏற்படாது. மாறாக எதிர்விளைவுகளையே தரும்.

சமஸ்கிருத சுலோகங்கள் மட்டுமல்ல, தேவார திருவாசகங்களையும் உரிய முறையில் ஓதினால்தான் உரிய பயன் பெறலாம்.

ஞானேந்திரம்.



## நோன்பு நோற்போம்

நோன்பு என்பது தூய்மையானது. அது அல்லாஹ்வுக்கு மிகப் பிரியமானது. ரமழான் மாதத்தில் நாம் நோன்பு நோற்பதன் மூலம் அல்லாஹ்வை பூரணமாக நெருங்க முடியும்.

இன்னும் அல்லாஹ் அவன் சிருஷ்டிக்கு வழங்கவிருக்கும் வெகுமதிகளை நோன்பின் மூலம் பெற முடியும். அதற்காக நான்கு விஷயங்களை நாம் கடைப்பிடிக்க வேண்டும்.

அவைகள் 'லாஇலாஹ இல்லல்லாஹ்' என்ற கலிமாவை நாளும் நாவினால் மொழிவது, அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடுவதும், அவனிடம் மறுவுலக வாழ்வுக்காக சொர்க்கத்தை கேட்பதும், நரகத்தை விட்டும் பாதுகாப்புத் தேடுவதுமாகும்.

ஏந்தல் நபி (ஸல்) அவர்கள் எடுத்தியம்பியுள்ளார்கள்: "ஷைத்தான் மனிதனின் உடலில் இரத்தம் போன்று ஊடுருவிச் சென்று கொண்டிருக்கிறான். அவனுடைய வழிகளை நோன்பிருந்து பசித்திருப்பதன் மூலம் தடை செய்யுங்கள்!" என்று.

ஆதாரம்: தர்கீப்

எனவே இதய சுத்தி பெற இன்ப ரமழானில் நோன்பு நோற்போம்.

எம்.சி.கலீல், கல்முனை-05.

## கவிதைப் போட்டி இல.335

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**



### மை-யல்

இதழ்களுக்கு
கை மையிட,
இதயம் எங்கோ
பறந்திட,
இளம் மங்கை
இவள்
எண்ணத்தில்
இருப்பதை
கண்ணாடிக்குள்
காண்கிறாளோ...?

கே. சுப்ரமணியம்-
ஹோப், ஹேவா எட்டை.

### ஓர் அநாதை

பிறந்தபோது மழைக்காலம்
உறவுகளோ மாக்கோலம்
தலையெழுத்தோ அலங்கோலம்
முகத்திரையில் அலங்காரம்
சூடிடத்தான் மணக்கோலம்
ஏற்றிடுமா இவ்வுலகம்?

மாத்தளை தியாகு.

### தோற்றம்!

பெண்ணே நீ
அழகு படுத்த வேண்டியது
முகத்தோற்றத்தையல்ல;
அகத்தோற்றத்தையே!

அ. யாழினி- மட்டக்களப்பு.

### வேண்டுமா இது?

பேரிகை போரென்று முழங்குதடி...
முகாரிகள் எங்கும் ஒலிக்குதடி...
காரிகையே உனை அழகூட்ட
தூரிகை வர்ணங்களா தீட்டுகிறாய்?

ம. திருவரசுராசா- வவுனியா.

### போலிக்குச் சாயம்

பொய்யுரை பேசி
மெய்க்குப் புகழ் சேர்க்கும்
உறுதியற்ற உதடே
உனக்கு நான் பூசுவது சாயம்!

ஜிகே. யோகச்சந்திரன்-
அக்கரைப்பற்று-7.

### காத்திருக்கிறாள்..!

உதட்டுக்குச் சாயமிட்டு
உன்னவனை வரவேற்க
உணர்வுடனே காத்திருக்க,
மடுமாதாக் கோயிலிலே
மீளாத துயில் தனிலே
கிடக்கின்றான் உன் கணவன்!

கீ. தங்கவடிவேல்- மட்டக்களப்பு.

### ஏக்கம்

எட்டத்து வட்ட நிலா
கிட்டத்தில் வந்து நின்று
உதட்டில் சாயமிடுகிறதோ-உன்
உள்ளத்தில் ஈரம் உண்டென்றால்-என்
உள்ளமெனும் வானத்தில்
உலா வர வேண்டுகிறேன்!

இரா. சபாபதி- ஆலி-எல.

### பரிசுக்குரிய கவிதை

### ஓட்டுமையா....? உதட்டுமையா...?

அய்யய்யோ...!
ஒட்டுப் போடத் தந்த மையை
உதட்டிற்கு பூசுகிறியே!
இது நியாயமா...?

துரைசாமி- சுவேதன்-
முறக்கொட்டாஞ்சேனை.

### சாயம் வெளுத்துப் போச்சு

தேர்தல் சாயம் வெளுத்துப் போய்
மீண்டும் சாயம் பூசுறாங்க,
பேதையிவள் உதட்டுச்சாயம்
பூசுவது யாரை ஏமாற்றவோ?

திருமதி ம. ஞானராஜா, 'மனோரகம்'-
வாழைச்சேனை.

### இது எத்தனையாவது?

பெண்ணே நீ
உன்னை அலங்கரிப்பது
எத்தனையாவது பெண்
பார்க்கும் படலத்திற்கு?

வி. தாமரை- நீர்கொழும்பு.

### ஒழிவதெப்போ?

வனப்புக்காய் வண்ணம்
பூசும்
வனிதையே! மனிதன்
இனத்துக்குச் சாயம் பூசல்
என்றைக்கு ஒழியும்?

ச.மகாலிங்கம்- வெலிமடை.


### நிம்மதி என்ன விலை?

புத்தாடை உடுத்தி
புதுமணம் பூசி,
புன்னகைக்கு மெருகூட்டினாலும்
உன் (நிம்)மதிக்கு
என்ன விலை
எம் நாட்டில்?

எம். அலாப்தீன்-பேராறு, கந்தளாய்.



## கவிதைப் போட்டி இல.338



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 08.01.2000

கவிதைப் போட்டி இல.338
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை



தினமுரசே!

இரண்டொரு வாரங்கள் நீ பவனிவரத்தாமதமானாலும் நிலமையையும் சூழ்நிலையையும் அறிந்து பொறுமையோடு காத்திருந்தோம். வீண்போகவில்லை. நீ படைக்கும் விருந்துகளும் சுவைகுன்றாது சுவைக்கின்றன.

'சிந்தியா பதில்கள்', 'அதிரடி அய்யாத்துரை' போன்ற பகுதிகளையும் விட்டு விடாமல் சிறப்பூட்டி வாசகர்களாகிய எங்களுக்கு மகிழ்வூட்ட வேண்டும் என்பதே எமது ஆவல்.

இ. தருமரத்தினம், வண்ணை, யாழ்ப்பாணம்.

அன்பின் ஆசிரியருக்கு!

தமிழ் மக்களின் அரசியல் பார்வையை சிறந்த ஒரு நேர் கோட்டில் இட்டுச் சென்று பேனா முனையால் இளம் சமூகத்தினர் மத்தியில் அரசியல் சம்பந்தமான திட்டவட்டமான சிந்தனையை உருவாக்க முடியும் என எடுத்துக் காட்டிய அற்புதராஜாவின் மறைவு பத்திரிகைத்துறைக்கு என்றுமே நிரப்ப முடியாத பள்ளமே.

இந்த மண் உள்ளவரையும், காற்று உலரும் வரையும் தினமுரசொலியை ஒலிக்கச் செய்வதே நாம் அவரது ஆத்ம சாந்திக்காக செய்யும் பணியாகும்.

ஆ. கிருபராஜ், கிருலப்பனை.

என்றும் என் இனிய தினமுரசுக்கு என் வாழ்த்துக்கள். மூன்று வாரங்களாக முரசு வராததால், பத்திரிகைத் துறையில் உண்மை உரைக்கும் முரசை ஜனாதிபதி தேர்தல் முடியும்வரை தடை செய்துவிட்டார்களோ? என்று பயந்துவிட்டேன். நம் நாட்டில் எத்தனை பத்திரிகை வெளி வந்தாலும் சரியான உண்மை உரைப்பதில் எதுவும் தினமுரசுக்கு ஈடாகாது.

ராஜா, அம்பாறை.

அற்புதன் என்கின்ற அற்புதம் மறைந்த பின்னும் அற்புதமாகவே வந்து சேர்ந்த முரசு கண்டு அகமகிழ்ந்தேன். ஒரு நீர்த்துளியாய் இருந்த அற்புதனை அந்த சிவப்பு நாள் சமுத்திரமாக்கிவிட்டது.

அற்புதன் ஓய்ந்தாலும் அவரால் ஆரம்பித்துவைக்கப்பட்ட முரசொலி ஓயாதென்று புறப்பட்டு வந்துவிட்ட முரசுக்கும் அதன் ஆசிரியருக்கும் என் நன்றிகள்.

முரசு வாசகி கமலினி, களுவாஞ்சிக்குடி.

அன்பான என் முரசே!

உந்தன் வரவுக்காய் ஒவ்வொரு வாரமும் காத்திருந்து தவறாது உன்னைப் பெறும் எனக்கு...

முரசின் ஆசிரியரின் மறைவும், முரசு வருவதில் தாமதமும் சோகமெனும் கடலலையாய் அலைமோதியது. மீண்டும் எம்மை உன் பாணியில் கலக்கி எம் கரம் வந்ததை யிட்டு மட்டில்லா மகிழ்ச்சி.

அதுமட்டுமல்லாது, முரசு 335ல் 'உள்ளத்தை உலுக்கும் காட்சி' எனும் புகைப்படம் எம் உள்ளத்தையும் உலுக்கியது. இது நம்நாட்டுக்கும் பொருத்தமாகத்தான் இருந்தது.

இதை அனுப்பிவைத்த டோஹா எம் நியாஸ் அவர்களுக்கும் அன்பு முரசுக்கும் நன்றியைக் கூறி, 'உன் வழி எப்போதும் ஒரு தனிவழிதான்' என அன்புடன் தெரிவித்து வாழ்த்துகின்றேன்.

என்.எல். முஸம்மில், புதிய காத்தான்குடி-06.

அன்பான முரசே! உலகம் முழுவதும் நீ முழக்கமிட, பயந்துபோன பலர் உனை நிறுத்திவிட நினைத்துவிட்டனர். நின்று விடாதே! தொடரும் உன் பணியை! தலைக்கும் தலையான தலைவனை இழந்த உமக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றேன்.

எவருமே எதிர்பாராத ஒன்று நடந்துவிட்டது. மனிதனின் வஞ்சகத்தில் மனிதனே பலியாகின்றான். இதனால் திறமைகள் உள்ள மனிதர்களும் நம்மிடையே தீர்ந்தே போகிறார்கள். எதையும் எவர் வேண்டுமானாலும் செய்யமுடியாது. திறமைகள் புத்திசாலிகள் உள்ளவர்களே செய்யலாம். செய்ய முடியாதவர்கள் செய்யக்கூடியவர்களையாவது செயல்பட விடவேண்டும் அந்த மன நிலையில் எந்த மனிதனும் இப்போது இல்லை. "என்னிடம் இல்லாத திறமை அவனிடம் இருக்கக் கூடாது. உயர்ந்தால் உயிரை எடுப்போம் தாழ்ந்தால் அடித்து உதைத்து அடிமையாக்குவோம்." இதுவே இப்போதைய உலக நிலை. அதில் நீயும் தப்பவில்லை இதுதான் நியதி முரசே!

குமாரசாமி. தயாழினி, வாழைச்சேனை.

முரசே!

தினமுரசுக்கு ஏற்பட்ட பயங்கரமான சோதனையிலிருந்து தப்பிப்பிழைத்து விட்டது. முரசு தாமதமாக வெளிவந்தாலும் பழைய பொலிவும் தரமும் எள்ளளவும் குறையவில்லை.

முரசின் முடிவு பற்றி ஆரூடம் கணித்தவர்களின் வாயை அடைத்துவிட்ட முரசின் பயணம், எவர் எதைச் சொன்னாலும் முரசின் பாதை தனியானதுதான் என்பதும் நிரூபிக்கப்பட்டு விட்டது. முரசை முடக்கிவிட முடியாது என்பதற்கு, ஆசிரியரின் மறைவின் பின்னர் வெளிவந்த முரசுகளே சாட்சி. வளர்க உன் தொண்டு!

திருமதி. சீ.பாக்கியரத்தினம்,
திருகோணமலை.

முரசே!

உனது ஆசிரியர் அற்புதனை அழித்துவிட்டால், உன்னையும் ஒழித்துவிடலாம் என்று கருதிவிட்டார்கள் போலும்! அத்தகைய அறிவிலிகளின் கருத்திலும் கண்ணிலும் மண்ணைத் தூவிவிட்டு நீ ஒய்யாரமாய்ப் பவனி வருகிறாய். ஏங்கிக்கிடந்த வாசகர்களாகிய எங்களின் ஏக்கத்தைப் போக்கி விட்டாய்.

உன்மீது பொறாமை கொண்ட பலர், 'நீ இனி மேல் எழுந்திருக்கமாட்டாய். எமதிஷ்டம் போல் கொட்டமடிக்கலாம்' என்று மனப்பால் குடித்தார்கள். ஆனால் அவர்களுக்கு உன் மீள்வரவு கிலியை ஏற்படுத்தியிருக்கும்.

முரசுக்கென வாசகப் பட்டாளம் அணிவகுத்து நிற்கிறது. ஆகவே வழமைபோல் நீ வெற்றி நடை போடலாம்! ஓரிரு அம்சங்கள் தவிர ஏனைய ஆக்கங்கள் சுவை குன்றாமல் உன்னில் இடம்பெறுவது எமக்கெல்லாம் பெரு மகிழ்ச்சியே!

அற்புதனால் உருவாக்கப்பட்ட 'அல்பிரட் துரையப்பா முதல் காமினிவரை' தொடரினை மேலும் வளர்க்க ஆவன செய்யும் வண்ணம் கோருகிறோம். வாழ்க முரசு!

செ. தங்கராசா, மட்டக்களப்பு.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல் (Fax):- 074-513266

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு,வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு. -நிர்வாகி.

# கொல்லப்பட்ட புலிகளின் எண்ணிக்கை?

# இருதரப்பினரின் தகவல்களில் எது சரியானது?

(சிறப்பு நிருபர்)

**யுத்த முனைகளில் புலிகளும் படையினரும் அன்றாடம் செத்து மடிகின்றனர். நூற்றுக்கணக்கில் படுகாயமடைந்து அங்கயீனர்களாகின்றனர். ஆனால் மரணமடைந்தவர்கள் பற்றி அரசு தரப்பினரும் புலிகளும் வெளியிடும் தகவல்கள் முரண்பட்டவையாகத் தெரிகின்றன. தணிக்கை அமுலில் இருப்பதனால் உண்மை மறைக்கப்படுகிறது. ஆனால் இந்நாட்டில் கேட்கக்கூடிய தமிழோசையும் சந்தேசிய சிங்கள சேவையும் வெளியிடும் தகவல்களால் பொதுமக்கள் குழப்பமடைகின்றனர்.**

கடந்த 17 வருடங்களாகத் தொடரும் போரில் மொத்தம் 14,355 புலிகள் கொல்லப்பட்டிருப்பதாக புலிகள் உத்தியோகபூர்வமாக வெளியிட்டுள்ள தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அரசின் பாதுகாப்புப் பிரிவினர் அவ்வப்போது வெளியிடும் தகவல்கள், புலிகள் வெளியிட்டுள்ள எண்ணிக்கையைவிட பல மடங்கு அதிகமாகவே உள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தை விட பொதுஜன முன்னணியின் காலத்திலேயே தங்கள் உறுப்பினர்கள் அதிகமான அளவில் கொல்லப்பட்டுள்ளதாக புலிகள் தெரிவித்துள்ளனர். 1997ல் தொடங்கப்பட்ட ஜெயசிக்குறுய் நடவடிக்கையின் போதே மிக அதிகமான அளவில் புலிகள் மரணமடைந்துள்ளதாக 'புலிகளின் வானொலி' அறிவித்துள்ளது. இக்கால கட்டத்தில் மொத்தம் 2146 பேர் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனையிறவில் டிசம்பர் 11ம் திகதி நடைபெற்ற மோதலில் 230க்கு மேற்பட்ட புலிகள் கொல்லப்பட்டதாகவும், அதைவிட பெருந்தொகையானோர் காயமடைந்ததாகவும் நடவடிக்கைத் தலைமையகம் தகவல் வெளியிட்டது. அடுத்த நாளான டிசம்பர் 12ம் திகதியன்று, முதல் நாளன்று வெளியிட்ட உத்தேச மதிப்பில் எத்தகைய மாற்றமுமில்லை என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் முதல் நாளன்று வெளியிட்ட கணக்கு உத்தேசிக்கப்பட்ட தொகை என்று கூறப்படவில்லை.

இதனைத் தொடர்ந்து பாதுகாப்புத் தரப்பினர் வெளியிட்ட தகவலில் 480 புலிகள் மாண்டதாகக் கூறப்பட்டது.

புலிகளின் தரப்பில் கொல்லப்பட்டவர்கள் தொகையை அறிவிப்பதில் மட்டுமல்லாமல் மோதல்களில் உயிரிழக்கும் ஆயுதப்படையினரின் எண்ணிக்கைகளிலும் சரியான புள்ளி விபரங்களை அரச தரப்புத் தகவல்கள் சரிவர வெளியிடுவதில்லை. புலிகள் தமது தகவல் ஊடகங்களின் மூலம் வெளியிடும் தகவல்களுக்கும் அரசு சார்பு ஊடகங்கள் வெளியிடும் தகவல்களுக்குமிடையில் பலத்த வித்தியாசம் காணப்படுகிறது.

## பிரதியமைச்சரின் கூற்று

பாதுகாப்புத்துறை பிரதி அமைச்சர் ஜெனரல் அநுருத்த ரத்வத்த அடிக்கடி ஒரு குறிப்பை வெளியிட்டு வருகிறார். "புலிகள் தரப்பில் போராளிகள் வெகுவாகக் குறைந்துவிட்டனர். இதனால் ஏற்பட்ட விரக்தியின் விளிம்பில் புலிகள் சிக்கித் திக்குமுக்காடுகின்றனர்." இவ்வாறு அவர் கூறினாலும் போர் முனைகளில் புலிகள் அதிக எண்ணிக்கையில் வந்து மோதிய வண்ணமேயுள்ளனர்.

டிசம்பர் 11ம் திகதி யாழ் தீபகற்பத்தை இந்நாட்டின் பிரதான நிலப்பரப்புடன் இணைக்கும் ஆனையிறவுப் பிரதேசத்தில் புலிகள் தொடங்கிய தாக்குதல் இச்செய்தியை எழுதும் 28ம் திகதி மாலைவரை தொடர்ந்த வண்ணமே உள்ளது. ஆனையிறவுப் பகுதியை ஒட்டிய பரந்தன், இயக்கச்சி போன்ற பகுதிகளில் தாக்குதல்கள் மும்முரமாக நடைபெற்று வருவதாகவே செய்திகள் வந்த வண்ணமுள்ளன.

புலிகள் இயக்கத்துக்கு புதிய ரக ஆயுதங்கள் வந்த வண்ணமேயுள்ளன. போதாதற்கு பாதுகாப்புப் படை முகாம்களைத் தாக்கும்போதும் படையினர் வசமுள்ள ஆயுதங்களையும் தளபாடங்களையும் தம்முடனேயே எடுத்துச் சென்று விடுகின்றனர் புலிகள்.

மோதல்களில் இதுவரை காலமும் கொல்லப்பட்டதாக அரசு தெரிவிக்கும் கணக்குப்படி பார்த்தால், இலங்கையில் தமிழ் மக்கள் எவருமே உயிருடன் இல்லை என்றுதான் கணக்கிட வேண்டியதாகவிருக்கும்.

இது இவ்வாறிருக்க போர் பற்றிய தகவல்களை உள்நாட்டிலுள்ள ஊடகங்கள் பிரசுரிப்பதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. எனினும் B.B.C போன்ற வெளிநாட்டுச் சாதனங்கள் செய்தி வெளியிடுவதில் கட்டுப்பாடுகள் எதுவுமில்லை.

இந்நாட்டிலுள்ள தமிழ்பேசும் மக்கள் B.B.C தமிழோசை மூலமும் சிங்கள மக்கள் 'சந்தேசிய சிங்கள' ஒலிபரப்பிலும் அன்றாடம் சகல செய்திகளையும் கேட்டறிந்து விடுகிறார்கள்.

ஆனையிறவு போர்முனையில் இடம்பெற்ற புலிகளின் தாக்குதல் தொடர்பான தொலைக்காட்சிப் படங்களை சக்திவாய்ந்த 'டிஸ்க் அன்ரனா' சாதனங்கள் பொருத்திய தொலைக்காட்சி மூலம், சென்னையிலிருந்து ஒளிபரப்பாகும் சன் ரி.வி. செய்தி ஒளிபரப்பிலேயே பலர் பார்த்திருப்பதாகக் கூறப்படுகிறது.

தொடர்பு சாதனங்கள் நவீன மயமாகி எங்கும் பரந்துள்ள நிலையில் உண்மைகளை மறைத்தோ திரிபு படுத்தியோ வெளியிடுவதில் எதுவித பலனும் எட்டப்போவதில்லை என்றே மக்கள் கருதுகின்றனர்.

# காரைதீவு ஈ.ம.ஜ.க. அலுவலர் படுகொலை

அம்பாறை மாவட்டம் காரைதீவுக் கிராமத்திலுள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி அலுவலகத்தில் பணிபுரியும் நிமலன் (வயது 31) 28ம் திகதி செவ்வாய்கிழமை பிற்பகல் 4.45க்கு புலிகளின் பிஸ்டல் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

காரைதீவு- நிந்தவூர் கிராமங்களுக்கு எல்லையாகவுள்ள இடத்தில் வைத்தே இவர் கொல்லப்பட்டுள்ளார். இவர் அக்கரைப்பற்றைச் சேர்ந்தவர்

# மலையக மற்றும் சிறுபான்மை வாக்குபலம் விழிப்புணர்வைக் காட்டுகிறது-சந்திரசேகரன் பா.உ

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் இந்நாட்டின் சிறுபான்மைத் தமிழ் மக்கள் தங்கள் வாக்குபலத்தினைத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார்கள் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவர் திரு.பெ. சந்திரசேகரன் பா.உ. தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

கடந்த 1994ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஜனாதிபதி சந்திரிக்கா சிறுபான்மைத் தமிழ் மக்களின் அமோக ஆதரவைப் பெற்று வெற்றியீட்டினார்.

இனப்பிரச்சனை தொடர்பாக ஜனாதிபதி சந்திரிக்காவின் நிலைப்பாடு முற்றிலும் தவறானது என்றும் தொடரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் சக்தி அவருக்குக் கிடையாது என்றும் குறிப்பிட்டிருந்தோம்.

மலையக மக்கள் பிரச்சனையில் ஜனாதிபதி அசிரத்தை காட்டினார். இதனால் அவர்மீது நாம் வைத்த நம்பிக்கை வீண் போயிற்று என்றும் மக்களுக்குத் தெளிவுபடுத்தினோம்.

இதன் பயனாகவே ஜனாதிபதி சந்திரிக்காவை நிராகரித்து ஐ.தே.கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சிறுபான்மை மக்கள் தமது ஆதரவை வெளிக்காட்டினர்.

இத் தேர்தல் மலையக மக்கள் நல்ல அரசியல் விழிப்புணர்வைப் பெற்றுள்ளனர் என்பதை எடுத்துக் காட்டுகிறது, என்றும் தனது அறிக்கையில் திரு சந்திரசேகரன் எடுத்துக் காட்டியுள்ளார்.

# தமிழ் வாக்காளர்களுக்கு அமைச்சர் அவமதிப்பு

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களிக்காதவர்கள் ஒவ்வொருவரும் தலா ரூபா 500 வீதம் தமக்குத் தண்டப் பணமாக கொடுக்க வேண்டும் என்று புலிகள் எச்சரித்தனராம். இந்த எச்சரிக்கைக்கு அஞ்சியே மட்டக்களப்பில் புலிகளின் வசமுள்ள பகுதிகளில் வாழும் வாக்காளர்கள் ஐ.தே.கட்சி வேட்பாளருக்கு அதிகப்படியான வாக்குகளைச் செலுத்தியுள்ளனர்.

இவ்வாறு ஓர் அமைச்சர் தொலைக்காட்சிப் பேட்டியின்போது குறிப்பிட்டதாகக் கூறப்படுகிறது.

அமைச்சரின் இக்கூற்றை, பொறுப்பற்ற அவதூறு என்று ஐ.தே.கட்சிப் பிரமுகர்கள் விமர்சித்துள்ளனர்.

# பாதுகாப்பினால் என்ன பலன்? ஆர்வலர்கள் விசனம்!

முன் எப்போதுமில்லாத அளவில் தலைநகரமான கொழும்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவே அரச அறிக்கைகள் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன.

அதே வேளை தற்கொலைக் குண்டுதாரிகள் எவ்வாறு பாதுகாப்பு அரண்களையும் மீறி பாதுகாப்பு வலையங்களுக்குள் புகுந்துவிடுகின்றனர்.

இந்நாட்டின் ஜனாதிபதிக்கே போதுமான பாதுகாப்பு வழங்கப்படமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. உளவறிந்து தகவல்களைத் திரட்டும் குழுக்களும் இயங்கவே செய்கின்றன. ஆனால் இவற்றால் எதுவித பலனும் கிடைப்பதாகத் தெரியவில்லை.

ஜனாதிபதி கலந்துகொண்ட தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கடுமையாக பந்தோபஸ்து ஏற்பாடுகள் செய்யப்பட்ருந்ததாக அறிவிக்கப்பட்டது. அவ்வாறானால் தற்கொலைக் குண்டுதாரி இந்த வலையத்துள் எவ்வாறு நுழைந்தார்.

இதுதான் இப்போது இந்நாட்டு மக்களை மட்டுமல்லாமல் பன்னாட்டு ஆர்வளர்களையும் குடையும் கோடிரூபா பெறுமதியான கேள்வி!

# காடையர்களினால் கைகலப்பு

அம்பாறை மாவட்டத்தில் வீரமுனையில் 21ம் திகதியன்று மது போதையில் வந்த காடையர்கள் தாக்கியதில் இரு இளைஞர்கள் காயத்துக்குள்ளாகினர். சமுர்த்தி உத்தியோகத்தரான ச. நவநீதகுமாரன் ஆபத்தான நிலையில் சம்மாந்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார், மற்றையவரான செ. சந்திரன் அடிகாயங்களுக்குள்ளாகி வீட்டில் படுத்த படுக்கையாக இருந்து சிகிச்சை பெற்று வருகின்றார்.

தாக்குதல் சம்பந்தமாக ஜேம்ஸ் இராசேந்திரா, சி. அருளம்பலம், ம.வேலாயுதம் போன்றோர் சம்மாந்துறை பொலிஸாரினால் கைதாகி விசாரிக்கப்பட்டு பின்னர் விடுதலை செய்யப் பட்டுள்ளனர்.

# இரு பிரதேச செயலகங்கள் புதிதாக திறப்பு

# 133 தொண்டராசிரியர்களுக்கு நியமனம் வழங்கல்

(காரைதீவு நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் அண்மையில் இரு புதிய பிரதேச செயலகங்கள் திறந்து வைக்கப்பட்டன. 133 தொண்டர் ஆசிரியர்களுக்கு சம்மாந்துறையில் வைத்து நிரந்தர நியமனமும் வழங்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு புனரமைப்பு துறைமுக அபிவிருத்தி அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரஃப் சம்பிரதாய பூர்வமாக அவற்றைத் திறந்து வைத்தார். கல்முனைப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சாய்ந்தமருது பிரிவும், சம்மாந்துறைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள நாவிதன் வெளிப்பிரிவும் புதிதாக திறக்கப்பட்ட பிரதேச செயலகங்களாகும்.

பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக இதற்கான விசேட அறிவித்தலை 'ஃபக்ஸ்' மூலம் வழங்கியிருந்தார். நாவிதன்வெளிக்கு எஸ்.சிவலிங்கம், சாய்ந்தமருதிற்கு ஐ.உதுமாலெவ்வை ஆகியோர் பிரதேச செயலாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

# தமிழ்-முஸ்லிம் பிரிவுகள் நிறுத்தப்பட்டன

(கண்டி நிருபர்)

மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தில் இயங்கி வந்த தமிழ்ப் பிரிவும் முஸ்லிம் பிரிவும் அப்புறப்படுத்தப்பட்டுவிட்டது.

மத்திய மாகாண சபையின் முதலமைச்சரின் கீழ் கல்வி அமைச்சு இயங்குவதால் தமிழ்ப் பாடசாலைகளின் நலனைக் கவனிக்க அமைச்சர் திரு வே.இராதாகிருஷ்ணனும் முஸ்லிம் பாடசாலைகளின் சார்பாக அமைச்சர் ஜனாப் எம்.டி.எம்.அமீனும் அவற்றைக் கவனித்து வருகின்றனர்.

நிருவாக ரீதியாக ஏற்கனவே உதவிச் செயலாளர்கள் இருவர் இவ்விரு வகைப் பாடசாலைகளுக்கும் பொறுப்பாக இருந்து வந்த நடைமுறை மாறிவிட்டது.

மத்திய மாகாண தமிழ் மொழி மூலப் பாடசாலைகள் உட்பட ஏனைய சிங்கள மொழிப்பாடசாலைகளின் நிருவாக ரீதியிலான பொறுப்பு மேலதிக கல்விப்பணிப்பாளர் திரு எஸ்.தேசோமயானந்தனிடமும் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

# வாசகர் வட்டம் கவலை!

(கண்டி நிருபர்)

'தினமுரசு' பிரதம ஆசிரியர் திரு அற்புதராஜாவின் திடீர் மரணம் தொடர்பாக முரசு வாசகர் வட்டங்கள் பெரும் கவலையடைகின்றன.

சர்வதேச புகழ்பெற்ற வார இதழான தினமுரசின் வளர்ச்சியைப் பாராட்டும் அவை, நாடும் ஏடும் சர்வதேச ரீதியாக தனிப்பெரும் இடத்தை வகித்த திரு. அற்புதராஜாவின் எழுத்து வன்மையையும் வெகுவாகப் புகழ்ந்து, நாட்டுக்கு கிடைக்கப்பெற்ற ஒரு சிறந்த எழுத்தாளரை இழந்த வேதனையினால் வாசகர் வட்டம் மிகுந்த வேதனை அடைவதாகவும் மேலும் தெரிவிக்கின்றன.

இதேவேளையில் பெரும் எண்ணிக்கையில் விற்பனையாகும் தினமுரசுவின் மலையக விநியோக முகவர்களையும் இந்த துயரம் விட்டு வைக்கவில்லை.

# ஆசிரியர் நியமனம்?

(கண்டி நிருபர்)

மத்திய மாகாணத்தில் 326 ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் முஸ்லிம் பாடசாலைகளில் நிலவுகின்றன. இவ்வ விரைவில் நிரப்பப்படும். கண்டி, மாத்தளை, நுவரெலியா ஆகிய மூன்று மாவட்டங்களிலும் கல்வி வலய அடிப்படையில் நிலவும் வெற்றிடங்கள் வருமாறு:

கண்டி-44, கட்டுகஸ்தோட்டை-77, கம்பளை-34, வத்தேகம-11, தெல்தெனிய-7, தெனுவரை-36.

மாத்தளை-42, கலேவெல-60, கொத்மலை-15.

26 பட்டதாரி ஆசிரியர்களுக்கும் இந்த மாகாணத்தில் வெற்றிடங்கள் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

1997ஆம் ஆண்டு பிரதேச செயலாளர் பிரிவு அடிப்படையில் இடம்பெற்ற ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சையின் புள்ளிகள் அடிப்படையிலே இந்த வெற்றிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

# பொலிஸாரின் மோட்டார் சைக்கிள்கள் அபகரிப்பு!

மட்டக்களப்பு-ஏறாவூர் சதாம் ஹுஸைன் கிராம பொலிஸ் காவலரண்மீது புலிகள் பதுங்கியிருந்து திடீர்த் தாக்குதல் தொடுத்தனர்.

28.12.99 அன்று காலை 7.35 க்குச் சம்பவம் இடம் பெற்றது. இரு தரப்பினருக்குமிடையில் சிறிது நேரம் மோதல் இடம் பெற்ற போதும் உயிரிழப்புக்கள் எதுவும் ஏற்படவில்லை.

சம்பவத்தில் அகப்பட்ட பொலிஸார் அவ்விடத்தில் இருந்த தங்களது மோட்டார் சைக்கிள்கள் இரண்டைக் கைவிட்டுத் தப்பி ஓடியபோது புலிகள் அவற்றை எடுத்துச் சென்று விட்டதாகத் தெரிகிறது.

பின்னர் உதவிக்கு விரைந்த இராணுவத்தினரும், பொலிசாரும் அப்பகுதிகளில் தேடுதலை நடத்திய போதும் மோட்டார் சைக்கிள்களோ, புலிகளோ அகப்படவில்லை.

இதனிடையே அன்றைய தினம் ஏறாவூர் மைலம்பாவெளியில் இடம்பெற்ற மேலும் ஒரு சம்பவத்தில் ஒரு சிவிலியன் கொல்லப்பட்டார். மற்றொருவர் படுகாயமடைந்தார்.

இச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது: மைலம்பாவெளியில் புலிகள் நிற்பதாகக் கேள்விப்பட்ட றாசிக் குழுவினர் ஏற்கெனவே அவ்விடத்திற்கு வந்து பதுங்கியிருந்தனர்.

அச்சமயம் புலிகள் இருவர் அவ்வழியால் சென்ற சிவிலியனான இரு இளைஞர்களின் சைக்கிளில் ஏறிச் சென்று கொண்டிருக்கும்போது சடுதியாக றாசிக் குழுவினரைக் கண்டு கையெறி குண்டொன்றை வீசிவிட்டு சைக்கிளிலிருந்து பாய்ந்து தப்பிச் சென்றனர்.

எனினும் சைக்கிளில் வந்த சிவிலியனான இளைஞர்கள் இருவரும் றாசிக் குழுவினரிடம் அகப்பட்டுக் கொண்டனர்.

அச்சம்பவத்தில் அகப்பட்ட ஒரு இளைஞரே ஸ்தலத்தில் கொல்லப்பட்டவராகும். மற்றவர் படுகாயத்துடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்த இளைஞர்கள் இருவரும் மாடு மேய்ப்பவர்கள் என்று தெரிய வருகிறது.

# சோதனைக் கெடுபிடிகள் அதிகரிப்பு! வாக்களிப்பால் வந்த வினையா?

மட்டக்களப்பு-அம்பாறைப் பிரதேசங்களிலுள்ள சோதனைச் சாவடிகளில் மீண்டும் சோதனைக்கெடுபிடிகள் அதிகரித்துள்ளன. இவ்விரு மாவட்டங்களிலும் ஜனாதிபதி சந்திரிக்காவைவிட ரணில் விக்கிரமசிங்காவுக்கு மக்கள் பெரும்பான்மை வாக்குகளை அளித்தமையின் விளைவாகவே இத்தகைய கெடுபிடிகள் அதிகரித்துள்ளனவோ என்று கருத வேண்டியுள்ளது.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் மட்டக்களப்பு-பட்டிருப்புத் தொகுதி மக்களே ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு எதிராகவும் அகில இலங்கை ரீதியில் ஐ.தே.கட்சிக்கு ஆகக் கூடுதலாகவும் வாக்குகளை அளித்திருந்தார்கள்.

பட்டிருப்புத் தொகுதியில் மட்டும் 24333 வாக்குகள் வித்தியாசத்தில் சந்திரிக்காவுக்கு எதிராக அளிக்கப்பட்டிருந்தன. அதே வேளை 1994ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் இதே பட்டிருப்புத் தொகுதி மக்களே அகில இலங்கை ரீதியில் சந்திரிக்காவுக்கு அமோகப் பெரும்பான்மையை ஈட்டிக்கொடுத்தார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இது ஒரு புறமிருக்க, இம்முறை பட்டிருப்புத் தொகுதி மக்கள் அரசுக்கு எதிராக வாக்களித்திருப்பதனால் அப்பகுதியிலுள்ள சீருடையினரின் கெடுபிடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் இடைவிடாது பலத்த மழை பெய்து கொண்டிருந்தபோதும், பட்டிருப்புத் தொகுதிச் சோதனைச் சாவடிகள் அனைத்திலும் பொதுமக்கள் கொட்டும் பெருமழையில் இறங்கி நடக்க வைக்கப்பட்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

# மலையகத்தில்- கிராம சேவகர் நியமனம்

(கண்டி நிருபர்)

மலையகத்தின் வரலாற்றில் 90 கிராம சேவகர்கள் கடந்த 8.11.99ஆம் திகதி தொடக்கம் கடமையேற்கின்றனர்.


இவர்களுக்கான கிராம சேவகர் நிருவாகம் தொடர்பான மூன்றுமாதகாலப் பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது. மலையகத்தில் படித்தவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்ததை அடுத்து, பொது நிருவாக உள்நாட்டு அமைச்சின் முடிவுக்கு இணங்க இத்துறைக்கு அண்மையில்ஆசிரியர் நியமனம் பெற்றவர்கள் மத்தியில் இருந்தே பலரும் இதற்குத் தெரிவாகினர்.

நுவரெலியா மாவட்ட அம்பகமுவ பிரதேச செயலாளர் பிரிவில் மாத்திரம் 21 பேரும் இதில் அடங்குவர். இவர்களுக்கான நியமனம் நிரந்தரமாகும்.

மலையக தோட்டப்புறங்களில் தமிழ்ப் பேசும் கிராம சேவகர்கள் இல்லாத குறை இதனால் ஓரளவு தீர்க்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

# 31ம் நாள் நினைவும் நன்றி நவிலலும்

அன்னைமடியில் 11.01.1942 — இறைவனடியில் 22.11.1999



(நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் உமிலங்குளத்தை வசிப்பிடமாகவும் தற்போது 1108, பாலையூற்றில் வசித்தவருமாகிய)

## மருதப்பு சண்முகநாதன்

வையகம் போற்றும்
பண்பாளனாய் வாழ்ந்து
பாரபுகழும் உத்தமர்களாய்
எமை எல்லாம் வளர்த்து
ஆளாக்கிவிட்ட எம் இனிய தந்தையே...!
பொல்லாக்காலன் உனை கவர்ந்ததேனோ...!
எம் நெஞ்சை கசக்கிப் பிழிந்ததேனோ...!
விண்ணுலகிலிருக்கும் உங்கள் திருப்பாதங்களில்
எங்கள் கண்ணீர் பூக்களைச் சொரிந்து


உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றென்றும் இறைவனை நெஞ்சுருகிப் பிரார்த்திக்கிறோம்.
என்றும் உங்கள் பிரிவால் துயருறும்

மனைவி- மேரி திரேஸா, பிள்ளைகள், மருமக்கள்–காலஞ்சென்ற றாஜி, துரை, சேகர், சியாமளா- கல்மடு ராஜன்–யசோ- லண்டன், நவம்-குமரன் பாலையூற்று. றஞ்சி, தயா- கனடா, ஜெயா–இலண்டன், அன்ரன்- இலண்டன், பேரப்பிள்ளைகள் உற்றார், உறவினர்.

தகவல்: வி. நவமலர், 1108 பாலையூற்று, திருமலை.

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 08.03.1929 — உதிர்வு 19.12.1997



(புங்குடுதீவு) (சாவகச்சேரி)

## அமரர் திரு. குலநாயகம் பசுபதிப்பிள்ளை

(ரூபன்) (இளைப்பாறிய அதிபர்)

எம்மையெல்லாம் வாழ வைத்து வழிகாட்டிய–எம் அன்புத் தெய்வமே! எங்களை விட்டுப் பிரிந்து இரண்டு ஆண்டுகள் ஆனாலும் உங்கள் பாசத்தின் நினைவுகள் எங்கள் இதயத்தை விட்டு அகலவில்லை அப்பா! இன்றும் என்றும் எங்கள் உள்ளங்களில் நிலைத்திருக்கும் எங்கள் அப்பாவே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்–

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்: மகன், ரகு, சூரிச் (சுவிஸ்)

## சிங்கப்பூரில் இலங்கையர்களுக்கான திருமண சேவை

வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கான திருமண சேவை சிறந்த முறையில் சமய முறைப்படி ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். மற்றும் பதிவுத் திருமணம், தங்குமிட வசதி, தங்கும் இடங்களில் சமைத்துச் சாப்பிடும் வசதி, போக்குவரத்து வசதிகள், அனைத்தும் சிறந்த முறையில் குறைந்த செலவில் ஒழுங்குசெய்து கொடுக்கப்படும்.

தொடர்பு. N .THANGA, T.PRINCI.
5. STARLIGHT ROAD. SINGAPORE 217758
OPPOSITE RANGOON ROAD T.P.2974924,
HP 97546610. 298619, 97546610.

# கலகம்

இலண்டனிலும் சென்னையிலும்
ஏககாலத்தில் அச்சேறும் மாதமிரு முறை
பல்சுவைச் சஞ்சிகை
(டாக்டர் க. இந்திரகுமார், தலைமையில்
சர்வதேச ஆசிரியர் குழு)

**புத்தாயிரத்தில் வரும் தொடர் அம்சங்கள்:**

- பாயும் புலி பண்டாரவன்னியன் –கலைஞர் கருணாநிதியின் வரலாற்று நாவல்.
- எம்.ஜி. ஆர். ஓர் இனிய சகாப்தம் எஸ். திருநாவுக்கரசு எம்.பி, தலைவர்–எம்.ஜி. ஆர். அதிமுக தலைவர்.
- லைலா மஜ்னு (வரலாற்று நாவல்)
- திருக்குறள் மூலமும் உரையும் (தமிழ்– ஆங்கிலம்)
- இலங்கையை ஆண்ட தமிழ் மன்னர் வரலாறு
- ரஷ்யாவின் பயங்கர அரசியல் சாமியார் ரஸ்புட்டின் (வரலாற்று நாவல்)
- அழிவின் சின்னம் அடோல்ப் ஹிட்லர் (வரலாறு)
- ஜெயில் லலிதா- நீதிமன்றக் காதை (ஐரோப்பிய பதிப்பில் மட்டும்)
- மறுபிறப்பு உண்மைதான் (அறிவியல்)
- டயானா வஞ்சித்தாரா? வஞ்சிக்கப்பட்டாரா? (தற்போதைய தொடர்)
- எழுச்சிக் கோளாறுகளுக்கு வயாக்ரா (தற்போதைய தொடர்)


மற்றும்- சினிமா, சிறுகதை, கவிதை, அதிசயச் செய்திகள், அறிவியல் செய்திகள், ஆன்மீகம், இலக்கியக் காட்சிகள் நிறைந்த ஜனரஞ்சக சஞ்சிகை.

**தைமாதம் முதல் இலங்கையிலும் கிடைக்கும்**

வர்த்தகத் தொடர்புகள்: கொழும்பு: 940818, 335477
இலண்டன்: 0044181 81 0 5577, 0044 7970 063965

## மலையாள மாந்திரிகம்





மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே. சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது. பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இது தான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
**Dr.P.K. SAAMI J.D.G.A.N&JP**
**SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM**
**NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.**

நுவரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831

பெண் பார்ப்பதற்கு
அலங்கரித்து படம் எடுக்க

ஸ்ருடியோ
**சாயா**
Col-6, P-594492

## துபால் மூலம் விஞ்ஞானம்

G.C.E. (A/L) ~ இரசாயனவியல்
Year - 9, 10, 11 ~ விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்
Year - 5 ~ ஆரம்ப விஞ்ஞானம்

ஆசிரியர்: குமார் சிவப்பிரகாசம்

விபரங்களுக்கு- சுயவிலாசமிட்ட தபாலுறையுடன் விண்ணப்பிக்கவும்
**P.T.C** 14, Covington Road, Batticaloa.

## மட்டக்களப்பு மாந்திரீகம்

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு. மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.

**DR. A.P.S. KUTTY**
50, THEATRE ROAD,NINTHAVUR-21, SRI LANKA. ☎ 067-50349

## மனோதத்துவ வைத்தியம்

இளைஞர்களே! சக்தி இழந்து மெலிந்து, நித்திரையின்மை, பயம் நடுக்கம், ஞாபக மறதி, தாழ்வு மனப்பான்மை ஏற்படக்காரணமான தவறுகளை நிறுத்தி எதிர்காலம் பிரகாசிக்க பிரபல மனோதத்துவ நிபுணர் DR.P. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்.

**SEXUAL DISORDERS (தாம்பத்திய கோளாறுகள்)**

தாம்பத்திய கோளாறுகளுக்கு நோயும் காரணமானாலும் 85% தாழ்வு மனப்பான்மையே காரணமாகும். தாழ்வு மனப்பான்மையை 90 நிமிடத்தில் நீக்கி, நான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்தே பணம் பெறப்படும்.

**வெளிநாட்டில் வசிப்போருக்குவிஷேட ஏற்பாடுகள்**

எந்தவித தாம்பத்திய பாதிப்புனாலும் தயக்கமின்றி எழுதவும். உமது கேள்விகளுக்கு விரிவான பதில் தந்தபின் முடியாதவன், இயலாதவன் என்ற தாழ்வு மனப்பான்மை நீங்க மனோதத்துவ சிகிச்சை பதிவு நாடா மூலமும், உடல் பாதிப்பிற்கு நல்ல மூலிகை மருந்தும் பெற்று தாம்பத்திய குறைகளை முற்றாக நீங்கிய ஆண்மகனாகுங்கள். (அந்தரங்கம் உறுதியாக பேணப்படும்) பதில் பெற முத்திரை செலவு அனுப்பவும்.

**மட்டக்களப்பு விலாசத்திற்கு மட்டும் கடிதத் தொடர்பு கொள்ளவும்**

நீரிழிவு நோய் முற்றாக சுகமாக்கலாம். மனநோய்கள், தாழ்வு மனப்பான்மை 'ஹிஸ்டீரியா' என்பனவற்றுக்கும் மனோதத்துவ சிகிச்சை உண்டு. ஆஸ்துமா, தலைமிடி, வாதம், வெள்ளை போதல், கிரந்திநோய், குழந்தை பேறு இன்மை, முடி உதிர்தல் எல்லாவற்றுக்கும் மருந்துகள் உண்டு.

**கல்முனையில் ஜனவரி 3,4ம் திகதிகளில்**
T.M.M. பாமஸி, கல்முனை. T.P. - 067- 29329

**வவுனியாவில் அறிவிக்கப்படும்**
(Vanni Inn) 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவா கோயில் ஒழுங்கை, வவுனியாவில் சந்திக்கலாம் T.P.024-22074,

**கொழும்பில் ஜனவரி 20 முதல் 27 திகதி வரை**
DR.P.ARUMUGAM S.A.M.P. REG. 9492
SRI SAWBAKIYA INN, 67/A, WOLFENDHAL STREET, COLOMBO-13
(5 லாம்புச்சந்தியில் இருந்து 100 யார் தூரத்தில் உயிசிசி பிளேஸ் பள்ளி வாசலுக்கு முன்னால் உள்ளது) T.P. 338163, 338166, 336165 FAX: 338161.
கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No-072-609388

கடிதத் தொடர்பு: RESIDENT T.P:- 065-24019

**DR.P.ARUMUGAM S.A.M.P., NO.51/5. Koolavady Road, Batticaloa. SRI LANKA.**

## L ட்றைவிங் பயிற்சி

மிகவும் பேர்பெற்ற சிறந்த

K. Senthil Moahan
Registered Driving Instructor
(All Class of Vehicle)

- முழுமையானதும் தெளிவானதுமான விளக்கம்
- ஆண் /பெண் இருபாலாருக்கும் விரைவான பயிற்சி
- பயிற்சியின் முடிவில் லைசென்ஸ் பெற்றுத்தரப்படும்
- இன்டர்நாஷனல் லைசென்ஸிற்கும் ஒழுங்கு செய்யப்படும்
- உங்களுக்கு ஏற்றவாறு நேர ஒழுங்கு செய்துதரப்படும்
- சனி ஞாயிறு உட்பட வாரத்தில் முழு நாட்களிலும் பயிற்சி

No. 385 1/1, Galle Road, Wellawatta,
Telephone : 075-516532, 075-522171

## TINY TOTS' MONTERSSORI

USING AMI MONTESSORI METHOD AND PRE SCHOOL METHOD

2000ம் ஆண்டுக்கான அனுமதிகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.



- முதலாவது மொழி ஆங்கிலம். இரண்டாவது மொழி தமிழ்/ சிங்களம்
- ... அனுமதிகள் ... ஏற்றுக்கொள்ளப்படும்
- வயதெல்லை 21/2 வருடம் முதல் 4 வயது...

**ACA** 55, St. Lucia's St, Kotahena. Tel : 335287

உலகப் புகழ்பெற்ற

## எக்ஸ் ஒயில்

- ★வாதத்தால் வரும் வலிகள்
- ★உணர்ச்சியற்ற பாகங்கள்
- ★பிரயாணக்களைப்பு
- ★தலைப்பாரம்
- ★தலைச்சுற்று
- ★ஜலதோஷம்
- ★வயிற்றுவலி
- ★தலைவலி
- ★காய்ச்சல்
- ★பல்வலி
- ★காதுவலி
- ★மூக்கடைப்பு
- ★பூச்சிக்கடிகள்
- ★தசை வலிகள்
- ★சுளுக்கு ★இருமல்
- ★மதுவால் ஏற்படும் பிரச்சினை




**ஆகியவற்றிக்கு உடனடி நிவாரணி**

ஏக விநியோகஸ்தர்
**SINGHA HOLDINGS (PVT) LTD.**
14, Ground Floor-Welikada Plaza-Rajagiriya.
Tel: 888214 Fax: 682984

## Timint Cream (Herbel) டைமின்ட் கிரீம்

விந்தின் சக்தியின்மை, வீரியமின்மையை போக்கி தாம்பத்ய வாழ்க்கையில் நீண்ட நேர இன்பத்தை கொடுக்கும். நீண்ட நேர தாம்பத்ய சுகம் புத்துணர்ச்சி, இன்பத்தை ஏற்படுத்தும்.

**SUPER X 50 அப்டர் X 50**



வீரியமன்மை, விந்தின் சக்தி குறைவினால் ஏற்படும் பலவீனம், நரம்புத் தளர்ச்சியை போக்கி புத்துணர்ச்சியையும், விந்தின் சக்தியை அதிகரிக்கவும் உதவுகிறது. இல்லற வாழ்வில் தெவிட்டாத இன்பத்தையும் நீண்ட நேர சுகத்தையும் கொடுக்கின்றது. 100% இயற்கை தாவரச் சாறுகளினால் தயாரிக்கப் பட்டுள்ளது. வயது முதிர்வினால் ஏற்படும் பலவீனத்தை போக்கி நீண்ட நேர இன்பத்தை தரவல்லது.

**விநியோகிப்போர்:**

யூனியன் கெமிஸ்ரி, யூனியன் பிளேஸ், மெக்ஸ் பாமஸி (கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்) நியூ லீ மெடிக்கல், தலதா வீதி, கண்டி, சிங்ககிரி பாமஸி, பண்டாரவளை, ஆருணா பாமஸி, மாத்தறை, தங்கல்ல, குருநாகல் மெடிக்கல் குருநாகல், சுஹத பாமஸி சிலாபம், நியூ கல்லடி மெடிக்கல் கேகாலை, விஜய நிட்டம்புவ, றோயல் கந்தானை, சமீரா சாரங்க பாமஸி மஹரகம, எஸ்.எம்.எஸ். ட்ரக்ஸ் நீர்கொழும்பு, பேராதெனிய மெடிக்கல் பேராதெனிய, சாலுகா பாமஸி ஆமர் வீதி, லங்கா மெடிக்கல், மெயின் வீதி இரத்தினபுரி, பம்பலப்பிட்டி பாமஸி (விஜய கொம்பிளெக்ஸ்) பம்பலப்பிட்டி, சிடி பாமஸி, மலபார் வீதி, கம்பளை.
R.No: 183272

# தேர்தல் படிப்பினைகள்

-நரன்-

தேர்தல் நடந்து முடிந்துவிட்டது முடிவும் அறிவிக்கப்பட்டு விட்டது.

51.12 வீத வாக்குகளால் வெற்றிபெற்ற சந்திரிக்கா அம்மையார் மீண்டும்அரியாசனத்தில் அமர்ந்துவிட்டார். ஆனால், ஒரு வெற்றிபெற்ற விளையாட்டு வீரரின் பெருமிதம்அவர் முகத்தில் 'இல்லை' அடிபட்ட புலியின் கோபம்தான் அவரிடத்தில் தெரிகிறது. அவரது பதவியேற்பு உரையிலும் தொனித்தது. அதை அடிபட்ட புலியின் சீற்றம் என்பதைவிட புலியால் அடிபட்ட சீற்றம் என்பதே பொருத்தமானது.

"என்னை நன்றாகப் பாருங்கள். எனது காயங்களை உற்று நோக்குங்கள். இவை அரசியலால் ஏற்பட்ட காயங்களுமல்ல-சமத்துவத்துக்கான நீதியான போராட்டத்தினால் ஏற்பட்ட காயங்களுமல்ல. சுதந்திரம் சுய நிர்ணயம் என்பவற்றுக்கான போராட்டத்தில் ஏற்பட்ட காயங்களுமல்ல. இவை ஒரு மனிதன் இன்னொரு மனிதன்மீது கொண்ட தெளிவான கபடமில்லாத வெறுப்பினால் ஏற்பட்ட காயங்களேயாகும். இத்தகைய காயங்களை ஏற்படுத்தியவர்களை இனி மேலும் கவனிக்காமலோ, தண்டிக்காமலோ விட்டுவிடவும் முடியாது" என்று அவர் தன் கோபாவேச உரையை ஆற்றினார்.

அவருக்குக் காயங்கள் ஏற்பட்டது உண்மை. அவர் மிக மிக ஆபத்தான புலிகளின் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் ஒன்றிலிருந்து அதிஷ்டவசமாக உயிர்தப்பி வந்துள்ளாரென்பதும் உண்மை. அதனால் பெரும் அதிர்ச்சிக்கும் கடும் சீற்றத்துக்கும் உள்ளாகியுள்ளார் என்பதுவும் உண்மை.

ஆனால், அதற்காக அவரது உரையில் கூறப்பட்ட இக் கூற்றுக்கள் உண்மையல்ல. அவர் இன்னும் உண்மையைத் தெளிவாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதையே உணர்த்துவனவாக இவை உள்ளன.

இவை ஒரு மனிதன் இன்னொரு மனிதன்மீது கொண்ட தெளிவான, கபடமில்லாத வெறுப்பினால் ஏற்பட்ட காயங்களல்ல. தனியொரு மனிதனுக்கு மற்றொரு தனிமனிதனில் ஏற்படும் ஒரு வெறுப்பு தற்கொலைப் போராளிகளை உருவாக்குவதில்லை. தனியொரு மனிதனுக்கு இன்னோர் தனிமனிதனில் ஏற்பட்ட வெறுப்புக்காக மற்றொரு தனிமனிதன் தனது உயிரைப் பலிகொடுத்து தற்கொலைத் தாக்குதல் ஒன்றை மேற்கொள்ள ஏன் முன்வரப்போகிறான்?

ஆனால் இவை அரசியலால் ஏற்பட்ட காயங்களல்ல என்று எதை அவர் மறுதலிக்கிறாரோ அதே அரசியலால் ஏற்பட்ட காயங்கள்தான் அவையென்பதே உண்மை. அதேவேளை அவரின் உடலில் பட்டுள்ள இக் காயங்களைப்போலவே இந்நாட்டில் எத்தனையோ பேர் பலத்த காயங்களுடன் வாழுகிறார்கள். பலர் வாழ்வையே இழந்து விட்டனர். இன்னும் பலர் இந் நாட்டில் வாழ விருப்பமின்றி வெளியேறி வெளிநாடுகளில் அடைக்கலமடைந்துள்ளனர்.

அக் காயங்கள் தற்கொலைக் குண்டுதாரியால் ஏற்பட்ட காயங்களாக இல்லாதிருக்கலாம். ஆனால் அவை ஏதோ ஒரு வகைப்பட்ட வன்முறையால் விளைந்தவை. வன்முறைகள் போராட்டத்தால் மட்டும் மேற்கொள்ளப்படவில்லை. அரச வன்முறைகளாகவும் நிகழ்ந்தேறி வருகின்றன. உண்மையில் அரச வன்முறைகளே போராட்ட வன்முறைகளுக்குத் தோற்றுவாயாக அமைந்துள்ளன.

இவ் வன்முறைகளால் விளைந்த காயங்கள் வெறும் உதிரிகளான நிகழ்வுகளல்ல. அவற்றுக்கு ஒரு வரலாறே உண்டு.

அகிம்சைப் போராட்டம் நடத்தி உரிமை கேட்டு உண்ணாவிரதமிருந்த அன்றைய தலைவர்களின் மண்டையைப் பிளந்த காயங்கள் எதனால் ஏற்பட்டன? தனி ஒரு மனிதன் மற்றோர் மனிதனில் கொண்ட பகையாலா?

இந்நாட்டின் சகபிரஜைகள் என்று கூறிக்கொள்ளும் தமிழர்களே உயிரோடு எரித்து, உடமைகளைச் சூறையாடி ஒட ஒட விரட்டிய இனக்கலவரங்களில் விளைந்த காயங்களுக்கு யார் யார்மீது கொண்ட தனிப்பட்ட கோபம் காரணம்?

சுற்றிவளைத்துச் சுட்டுக் கொல்வதும் கைது செய்து சிறையிலடைத்துச் சித்திரவதை செய்து கொல்வதுமாக அரச படைகள் நடத்திய அட்டகாசங்களின் காயங்கள் யாரால் விளைந்தவை?

இன்னும் இம் மண்ணின் அடியில் அடையாளம் தெரியாத அனாதைப் பிணங்களாய் புதை குழிகளில் உறங்கிக் கிடக்கும் ஒரு தொகை எலும்புக்கூடுகளின் உரிமையாளர்களின் உயிர் குடித்த காயங்கள் எப்படி விளைந்தன?

இக் காயங்களுக்கெல்லாம் ஒரு வரலாறு இருப்பது மட்டுமன்றி எம் வரலாற்றிலேயே காயங்கள் இருக்கின்றன. அவை ஆறாத காயங்கள்.

இந்த வரலாறு தொடரும்வரை காயங்களும் தொடரும். இந்த வரலாறு எம்நாட்டு அரசியலின் வரலாறு இந்த இன முரண்பாட்டின் அரசியல் மாறும்வரை இத்தகைய சம்பவங்களும் காயங்களும் தொடரத்தான் போகின்றன.

இந் நாட்டின் தலைவியான ஜனாதிபதியே அத்தகைய காயங்களுக்கு உள்ளாக நேர்ந்துவிட்டமை வேதனைப் படவேண்டிய ஒன்றுதான். ஆனால் அந்த வேதனை இந் நாட்டை வதைக்கும் வேதனையிலிருந்து வேறுபட்டதல்ல. உண்மையில் இந்நாட்டின் துயரத்தின் ஒரு துர்க்குறியாக அடையாளம் காட்டி நிற்கும் காயங்களே அவை.

எனவே இக் காயங்களுக்கு அரசியல் காரணமல்லவென மறுதலித்து பகை முடிக்கும் போரில் இறங்காமல் இக் காயங்களின் தோற்றுவாயாக உள்ள அரசியலை அவர் புரிந்துகொள்ள வேண்டும்.

'பகை கொண்ட உள்ளம் துயரத்தின் இல்லம்' என்ற வாசகத்தைக் கருத்திற்கெடுத்து பகையை நீக்கினால்தான் இந் நாட்டின் துயர் நீங்கும்.

இப் பகையை நீக்குவதென்பது நிச்சயமாக இங்கு ஒர் அரசியல் தீர்வைக் காணுவதனாலேயே முடியும். எனவே, ஜனாதிபதி தன் காயத்தால் ஏற்பட்ட மன உணர்வை அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கான திட சங்கற்பமாக மாற்றிக் கொள்வாராயின் அதுவே இத் தேசத்தின் காயங்களை மாற்றும் மருத்துவமாக அமையும்.

ஜனாதிபதி தனது உரையில் "சமாதானத்தையும் தேசிய நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்குத்தான் சகல கடவுள்களும் என்னைக் காப்பாற்றியிருக்க வேண்டும்" எனக் கூறியுள்ளார். மரணத்திலிருந்து உயிர் மீள்வது என்பது மிகுந்த மாறுதல்களை ஏற்படுத்தக்கூடிய ஒரு அனுபவம். அத்தகைய அனுபவத்தைப் பெற்றுள்ள ஜனாதிபதி சமாதானத்தை ஏற்படுத்தத்தான் தான் உயிர்தப்பியதாக உண்மையாகவே நம்புவாராக இருந்தால் இனி அவரது முழுக்கவனமும் யுத்தத்தின் பக்கத்திலிருந்து சமாதானத்தின் பக்கத்துக்குத் திரும்ப வேண்டும். யுத்தத்தை நிறுத்துவதால் சமாதானம் ஏற்படுமா, சமாதானத்தை ஏற்படுத்துவதால் யுத்தம் நிற்குமா என்பதை அவர் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். யுத்தம் தானாக ஓயாது. யுத்தத்தாலும் யுத்தத்தை நிறுத்த முடியாது. அவ்வாறானால் யுத்தத்தை நிறுத்திச் சமாதானம் காணுவது எவ்வாறு? எனவே மறுதலையாக சமாதானத்திற்கான சூழ்நிலைகளை உருவாக்குவதே யுத்தத்தை நிறுத்த வழிகோலும் என்பதே உண்மை.

சமாதானத்தை உருவாக்குவது என்பதற்கான ஒரே வழி இந்நாட்டின் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய அரசியல் தீர்வொன்றைக் காண்பதே. அத்தகைய ஏற்புடைய அரசியல் தீர்வொன்றை வழங்குவதற்கான தயாரிப்பை உடனடியாக மேற்கொள்ளுவதே அவர் தன் உரையில் குறிப்பிட்டதை உண்மையாக்கக்கூடிய காரியம்.

கடந்த ஆட்சித் தவணையின்போதும் அவர் சமாதானத்தை ஏற்படுத்துவேன் என உறுதிமொழி தந்தே ஆட்சிக்கு வந்தார். ஆனால் அவர் சில தீர்வுத் திட்டங்களை முன்வைத்ததைத் தவிர அவற்றை ஏற்புடைய திட்டமாக வளப்படுத்தவோ, அமுல்படுத்தவோ எதையும் செய்யவில்லை. மாறாக அவர் முன்வைத்த திட்டத்தை பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இன்னும் மலினப்படுத்திக் கொடுக்க அதைக்கூட நிறைவேற்ற முடியாதவராகவே இருந்தார். அதற்கு ஐ.தே.க.வை அவர் குற்றம் சாட்டுமாற்போல் தமிழ் மக்கள் அவரைக் குற்றஞ்சாட்டுவதிலும் தப்பில்லை என்பதை அவர் புரிந்து கொள் ளவே வேண்டும்.

இந்தத் தேர்தலில் ஜனாதிபதி வென்றாலும் தமிழ் மக்களின் உள்ளங்களை அவர் வெல்லவில்லை என்பதை அவர் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். இதற்கும் எந்தத் தனிப்பட்ட பகையும் காரணமல்ல என்பதை அவர் உணர்ந்து கொள்ள வேண்டும். அரசியலே இதற்கான காரணம். அதில் அவர் தனது வாக்குறுதியை நிறைவேற்றத் தவறிய விடயமே மூலகாரணமென்பது அவருக்கும் தெரியும்.

ஆனால் இம் முறை தேர்தலில் நிற்கும் போது மீண்டும் ஒரு வாக்குறுதியை வழங்கியுள்ளார். அதை கடந்த தடவைபோல் வெறும் வாக்குறுதியாகவன்றி 'மக்கள் ஆணை' யாகக் கேட்டிருந்ததையே இங்கு பிரதானப் பட்டிருக்கும் விடயம்.

அதாவது பாராளுமன்றத்தை அரசியல் சட்ட நிர்ணய சபையாக மாற்றி இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் அரசியல் சட்டமொன்றை உருவாக்க மக்கள் ஆணை கோரியிருந்தார். இவ்வாறான மக்கள் ஆணையை இத் தேர்தலில் மக்கள் அவருக்கு வழங்கியுள்ளனர். அதனால் இம்முறை தான் சொன்னதைச் செய்யக்கூடிய வழி அவருக்கு உள்ளது. போனதடவை வழி இருக்கவில்லையென அவர் காரணம் கூறமுடிந்தது. அப்போது பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை தேவைப்பட்டது. அது அவருக்கு இருக்கவில்லை. ஆனால் தற்போது அத் தேவை அவருக்கு இல்லை. அரசியல் சட்ட நிர்ணய சபையாக பாராளுமன்றத்தை மாற்றுவதற்கு அவர் கோரிய மக்களாணை போதும். அம் மக்களாணை ஒரு சர்வஜன வாக்கெடுப்புப்போல் ஏற்றுக் கொள்ளப்படலாம். ஆகவே அரசியல் சட்ட நிர்ணய சபையை உருவாக்கினால் அங்கும் சட்டத்தை நிறைவேற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியமில்லை. சாதாரண பெரும்பான்மையுடனேயே சட்டத்தை நிறைவேற்றலாம். அதற்கான பெரும்பான்மை அவருக்குப் பாராளுமன்றத்தில் தற்போதே உண்டு. அதனால் புதிய பொதுத் தேர்தல் ஒன்றுக்குப் போகாமலே இருக்கும் இப் பாராளுமன்றத்தைக் கொண்டே இச் சட்டத்தை நிறைவேற்றி இனப் பிரச்சினையில் இருந்த பெரும் தடையை நீக்கலாம்.



அதேவேளை தற்போதுள்ள ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர்களிலும் சிலர் பொ.ஐ.மு.ன் பக்கம் சார்ந்துள்ளனர். பாராளுமன்றத்தில் கட்சி மாறும் சட்டமூலமொன்றையும் அரசாங்கம் கொண்டு வரவுள்ளது. அதனால் மேலும் பல ஐ.தே.க. உறுப்பினர்கள் அரசாங்கத்தின் பக்கம் செல்ல வாய்ப்புள்ளது. இவ்வாறு தம்மால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை ஈட்டிக்கொள்ள முடியுமென்று அரசாங்கத்தினர் நம்பிக்கை தெரிவிக்கின்றனர். அவ்வாறான வாய்ப்பு இருந்தால் விடயத்தை இன்னும் சுலபமாகத் தீர்க்கவும் முடியும்.

ஆனால் இவற்றுக்கெல்லாம் அடிப்படையாக ஜனாதிபதிக்கு தீர்வு காணும் நோக்கம் இருக்க வேண்டும். ஜனாதிபதி தனது உரையில் சமாதானத்தைக் காணுவதற்கான மன்வுறுதி தனக்கு ஏற்பட்டுள்ளதென்று கூறியிருக்கும் அதேவேளையில் அவர் தேர்தலின் போது மிக முக்கியமான விடயமாக முன்வைத்த இந்த 'மக்கள் ஆணை' பற்றி ஒரு சொல்லுத்தன்னும் அதில் இடம்பெறவில்லை. மக்கள் ஆணைக்கு நன்றி சொல்லவோ, அதை நிறைவேற்றுவதாக வாக்களிக்கவோ இல்லை. குண்டுத் தாக்குதலின் அதிர்ச்சியால் மறந்துவிடும் விடயமல்ல இது. நாட்டு மக்களிடம் நடத்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்புக்குச் சமனான விடயம் இது இதனையிட்டு எந்தக் குறிப்பும் அவர் தனது பதவியேற்பு வைபவத்தில் தெரிவிக்காதது பெருத்த ஏமாற்றமாகவே உள்ளது.

தான் முன்வைத்த திட்டத்தை தானே கைவிட்டு விடுவாரோ என்ற அச்சத்தை இது கிளப்பியுள்ளது. அதனால் இம் மக்களாணை குறித்தும் அரசியல் சட்ட நிர்ணய சபை குறித்தும் தற்போதைய தனது எண்ணம் என்ன என்பதை அவர் தெளிவுபடுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

கடந்த காலத் தவறுகளை உணர்ந்து தற்போது கிடைத்திருக்கும் வாய்ப்பையும், வசதியையும், வழியையும் பயன்படுத்தி இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வைக் காண ஜனாதிபதி உடனடிச் செயலில் இறங்குவதைப் பொறுத்தே அவரது சமாதானத்தை ஈட்டுவதற்கான மனவுறுதி எத்தனை தூரம் வலியது என்பதைக் காண முடியும்.

ஆனால் ஒன்று, இத் தடவையும் வேதாளம் மறுபடி முருங்கை மரத்தில் ஏறும் கதை நிகழுமானால் அதை மறுபடி இறக்க முடியாமல் போகலாம்.

இதேவேளை ஜனாதிபதித் தேர்தலில் பலத்த போட்டியினை வழங்கிய ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் தோல்வியடைந்தாலும் தமிழ் மக்களின் பெருமளவு வாக்குகளைப் பெற்றுள்ளார். இவை புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பேன் என அவர் தெரிவித்த வாக்குறுதிக்காக வழங்கப்பட்ட வாக்குகள். அதேவேளை மலையகத் தமிழ் மக்களின் கணிசமான வாக்குகளும் அவருக்குச் சென்றிருக்கின்றன.

அத்தோடு இத்தேர்தலில் புலிகள் நேரடியாக ரணிலை ஆதரிக்காவிட்டாலும் அவரின் வெற்றி வாய்ப்புக்கு அனுசரணையாக உதவியுள்ளனர். புலிகள் தடுத்திருந்தால் இத் தேர்தலில் தமிழ் மக்களின் பெருமளவிலான வாக்கு இவருக்கு விழுந்திருக்காது எனவே தேர்தலில் தோல்வி கண்டாலும் தமிழ் மக்களின்பால் அவருக்கு நன்றிக்கடன் உள்ளது. தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கு அவர் தொடர்ந்தும் கட்டுப்பட்டவரே.

இந்த வகையில் அவர் எதிர்க் கட்சியாக இருந்தாலும் தமிழ் மக்களின் தீர்வுக்காகப் பங்காற்ற முடியும். உண்மையில் எதிர்க் கட்சியின் பங்களிப்பின்மையாலேயே, எதிர்ப்பினாலேயே இலங்கை அரசியலில் இவ் இனப்பிரச்சினைக்கான எவ்விதத் தீர்வும் ஈட்ட முடியாமல் போனதே வரலாறு. பண்டா-செல்வா ஒப்பந்தம் ஏற்பட்டபோது அதை எதிர்க்கட்சியாக இருந்த ஐ.தே.க. எதிர்த்துக் குழப்பியடித்தது. டட்லி-செல்வா ஒப்பந்தம் ஏற்பட்டபோது அதை எதிர்க் கட்சியாக இருந்த எஸ்.எல்.எப்.பி. 'டட்லி வடை மசால வடை' ஊர்வலம் நடத்திக் குழப்பியடித்தது. அதுபோல் சந்திரிக்கா அரசாங்கம் தீர்வுத் திட்டம் ஒன்றை முன் வைத்தபோதும் ரணிலின் தலைமையிலான ஐ.தே.க. அதைக்கூட நிறைவேற்ற ஒத்துழைப்பு வழங்கவில்லை. இப்படியாக மாறி மாறி எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பால் தீர்வு முயற்சிகள் முறியடிக்கப்பட்டுவந்த குறுகிய சந்தர்ப்பவாத அரசியலாலேயே இந்நாடு இப் பாரிய யுத்தத்திற்குள் தள்ளப்பட்டுள்ளது.

எனவே யுத்தம், அழிவுகள், அதன் விளைவுகள் என்பவற்றையெல்லாம் சுட்டிக்காட்டி ஆட்சியாளர்களை விமர்சிக்க முன்னிற்கும் எதிர்க் கட்சிகள் தங்களின் இந்த ஒத்துழையாச் செயற்பாடே இந்த யுத்தத்துக்கும் மூல காரணம் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

இந்த வகையில் சமாதானத்துக்கான அக்கறையை வெளிக்காட்டி தமிழ் மக்களின் வாக்குகளை வாங்கிக் கொண்ட ரணில் எதிர்க்கட்சியாக இருந்துகொண்டும் அவ் அக்கறையைச் செயலில் காட்ட வேண்டும்.

தேர்தலில் வெற்றியடைந்த சந்திரிக்கா அம்மையார் ரணிலை தேசிய அரசாங்கம் அமைத்து இனப்பிரச்சனையைத் தீர்க்க முன்வரும்படி அழைப்பு விடுத்துள்ளார். தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் கடமைப்பாட்டை ரணில் கொண்டிருந்தால் அதல் ரணில் ஏன் தன் பங்களிப்பைச் செலுத்தக்கூடாது. அரசாங்கம் மேற்கொள்ள விளையும் யுத்த முன்னெடுப்புக்களைத் தடுத்து நிறுத்த முற்படலாம். இனப்பிரச்சினைக்கு ஒருமித்த ஒரு தீர்வை உருவாக்க ஒத்துழைக்கலாம். பின் அத் தீர்வுடன் புலிகளோடு பேச்சுவார்த்தை நடத்தலாம். முன்னைய காலங்களைப் போல இப்படியான பேச்சுவார்த்தைகளுக்கு எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாது, மாறாக மக்கள் மத்தியில் ஆதரவைத் தேடிப் பிரசாரம் செய்யலாம்.

அப்படியல்லாமல் தான் தேர்தலில் தோற்று விட்டதால் தமிழ் மக்கள் மீது தனக்கு எந்தக் கடப்பாடும் இல்லையென்ற வகையில் அவர் செயற்படுவாரேயானால் தமிழ் மக்கள் வழங்கிய வாக்குகளுக்குத் துரோகம் செய்தவராகவே கருதப்படுவார்.

தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொண்டு பதவியைக் கைப்பற்றியதும் ரணில் சமாதானத்தின் பாலான தனது வாக்குறுதிகளைக் காற்றில் பறக்க விட்டுவிடுவார் என்று இருந்த சந்தேகத்தை உறுதி செய்வதாகவே அது அமைந்துவிடும்.

அதற்கான அறிகுறிகள் சில இப்போதே தென்படுகின்றன. தேர்தல் முடிவுகளை அறிவித்தபோது ரணில் ஆற்றிய உரை பெரும் அவநம்பிக்கையை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. அவ்வுரையில் அவர் 'சுதந்திர தேர்தல் கமிஷன்', 'சுதந்திர பொலிஸ் கமிஷன்', 'சுதந்திர சிவில் கமிஷன்' போன்றவற்றை மட்டுமே விட்டு தனது முக்கிய நோக்கங்களாக வலியுறுத்திவிட்டு உரையை முடித்துக்கொண்டார். இத் தேர்தலுக்கான அவரது பிரச்சாரங்களிலெல்லாம் முன்னிலைப்படுத்திவந்த இனப் பிரச்சனை பற்றியும் பேச்சுவார்த்தை பற்றியும் தேர்தல் முடிந்த பின்னர் அவர் ஆற்றிய முதலாவது உரையிலேயே கைகழுவி விட்டார். அப்படியானால் அவரது அடிமனதில் இவை இருக்கவில்லை, வெறும் வெற்றி வாய்ப்பை ஈட்டிக் கொள்ள உச்சரித்த உதட்டளவு வார்த்தைகளே இவை என்பதையே வெளிக்காட்டியுள்ளார்.

ஆனாலும் இன்னும் அவருக்குச் சந்தர்ப்பங்கள் உள்ளன. அவரது ஐ.தே.க. வில் பலர் தேசிய அரசாங்கத்தில் இணைய ஆர்வம் காட்டுகின்றனர். இத் தேசிய அரசாங்க முயற்சியை அவர் சாதகமான வகையில் பயன்படுத்தி தமிழ் மக்களுக்கான தீர்வினையிட்டு ஆக்கபூர்வமாக செயற்பட வேண்டும்.

அதேவேளை எச்சரிக்கையாக இருக்க வேண்டிய முக்கியமான மற்றொரு விடயம் என்னவென்றால் இந்த தேசிய அரசு முயற்சியை இனப் பிரச்சனைத் தீர்வுக்காகவன்றி 'நாட்டைப் பாதுகாப்பது' என்ற போர்வையில் தமிழ் மக்களின் போராட்டத்தை நசுக்கும் ஒன்றிணைந்த முயற்சியாக மாற்றிவிடாதிருப்பதிலும் கவனமாய் இருத்தல் அவசியம். இறுதியில் இத் தேசிய அரசாங்கமென்பது யுத்தத்துக்கான அணிதிரளாக மாறிவிடும் அபாயமும் உண்டு.

எனவே ரணிலின் ஒத்துழைப்புக்கூட அரசியல் தீர்வுக்கும் சமாதானத்திற்குமான ஒத்துழைப்பு என்ற வரையறையுடன் மட்டுமேயானதாக இருத்தல் வேண்டும்.

எது எவ்வாறாயிருந்தாலும் இத் தேர்தலில் தமிழ்த் தரப்பிலும் சரி சிங்களத் தரப்பிலும் சரி பிரதானமான விடயமாக எடுத்துக் கொள்ளப்பட்ட விடயம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயமே.

நாட்டின் ஏனைய விடயங்களான பொருளாதாரம், அபிவிருத்தி, வரிகள், விலையேற்றம், வேலையில்லாத் திண்டாட்டம், சர்வதேசக் கடன் பழு, வெளிநாட்டுக் கொள்கைகள், மற்றும் பத்திரிகைச் சுதந்திரம், அரச துறைகளில் இலஞ்சம், ஊழல், ஜனநாயகத்தன்மைகளைப் பேணுதல், சட்டம், ஒழுங்கு போன்ற இன்னோரன்ன பிரச்சனைகள் யாவும் இரண்டாந்தரப் பிரச்சனைகளாகிப் போய் விட்டமையையே இத் தேர்தல் எடுத்துக் காட்டுகிறது.

மக்கள் எல்லாவற்றிற்கும் மேலாக முதலில் இந்த இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பதையே இத் தேர்தலில் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தியுள்ளனர்.

எனவே மக்களின் இப் பாரிய எதிர்பார்ப்பை ஆளும் கட்சி மட்டுமன்றி எதிர்க் கட்சியும் கூட துச்சமாக மதிக்க முடியாது.

அத்தோடு தமிழ் மக்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கினால் சிங்கள மக்கள் எதிர்ப்பார்கள் என்ற அச்சத்துக்கும் அவர்கள் விடை கொடுத்துள்ளார்கள்.

தமிழ் மக்களுக்கு இடைக்கால நிர்வாக சபையைக் கொடுப்பதாக ரணில் பேசியதற்கோ, அன்றில் சந்திரிக்கா ஒரு நிர்வாக சபையை அறிவித்திருந்ததற்கோ மக்கள் எந்த எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லையென்பதுடன் புலிகளிடம் நாட்டைக் கொடுக்கப் போகிறார், சந்திரிக்காவைப் பிரபாகரனிடம் கொடுக்கப் போகிறார் என்ற அச்சுறுத்தல்களைப் பற்றியும் மக்கள் அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை. தேர்தலில் சந்திரிக்கா வென்றாலும் ரணில் படுதோல்வியடையவில்லை. அதனால் இப் பிரசாரங்களில் எடுபட்ட மக்கள் அவரை ஒரங்கட்டி விட்டார்கள் என்று சொல்லக்கூடியதாகவும் இல்லை.

இதிலிருந்து தெரிகிறதென்னவென்றால் பழைய தனமான மக்களை இனவாதத்துக்குத் தூண்டும் பேச்சுக்கள் அதிகம் எடுபடப் போவதில்லை. இனவாதக் கட்சிகளான பூமிபுத்திரா போன்றவையே மக்களால் ஒரங்கட்டப்பட்டுள்ளன.


எனவே இத் தேர்தல் தரும் படிப்பினை யாதென்றால் எந்தத் தலைவர் இந் நாட்டின் எரியும் பிரச்சனையான இனப் பிரச்சனையைத் தீர்த்து சமாதானத்தை ஏற்படுத்துகிறாரோ அவர்தான் எதிர்காலத்தில் இரு தரப்பு மக்களாலும் ஏற்றுக் கொள்ளப் படப் போகிறார்.

இந்தச் செய்தியை மிக வலியதாக ஏற்று அதன்படி செயற்படும்படியே நாம் இந் நாட்டின் தலைவர்களைக் இத்தருணத்தில் கேட்டுக்கொள்ளலாம்.

# உள்ளியக்க முரண்பாடுகளின் வேர்கள்

இனப்பிரச்சனை கூர்மையடைந்ததால் தமிழ் மக்கள் மத்தியில் பல இயக்கங்கள் தோன்றின. அவற்றில் சில வளர்ந்தன. சில தேய்ந்தன. ஆனால் வளர்ந்தவற்றிலும் இயக்கப் பிளவுகள் தோன்றின; தேய்ந்தவற்றிலும் தோன்றின. ஏன் இவ்வாறு இயக்கப் பிளவுகள் தோன்றின என்பதைத்தான் இம்முறை சற்று ஆராய்வோம்.

முதலில், ஒரே நோக்கத்திற்கு, ஏன் பல இயக்கங்கள் என்ற பாமரத்தனமான கேள்வி பலரிடமும் எழுகிறது. இயக்கங்கள் 'தமிழீழம்' அல்லது 'ஈழம்' என்ற இலக்கை முன்வைத்துத்தான் தோன்றின. இது ஒரே இலக்காக எம் பலருக்குத் தோற்றமளிக்கலாம். ஆனாலும் அதில் வேறுபாடு இருந்தது. ஏன் ஒரே இலக்குக்கு இரண்டுவகைப் பெயர் என்பதே அதில் ஏதோ வேறுபாடு இருப்பதைத் தொனிக்கிறதல்லவா.



சுரேஷ் பிரேமச்சந்திரன்

தமிழ் விடுதலை இயக்கங்கள் மூன்று வகை மரபுகளில் தோன்றின.

ஒன்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் கருத்தாதிக்கத்தில் தோன்றிய இளைஞர் பேரவை மற்றும் மாணவர் பேரவைப் பின்னணியில் உருவான இயக்கங்கள்.

புதிய புலிகள், தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழீழ விடுதலை இயக்கம், தமிழீழ விடுதலைக் கழகம், மற்றும் இவற்றிலிருந்து பிரிந்த குழுக்கள் யாவும் இப் பாரம்பரியத்தில் வந்தவை. இவை 'தமிழீழம்' என்ற பெயரை தமது இலக்காகப் பயன்படுத்தின.

அடுத்த வகையினர், ஈழ விடுதலை இயக்கம் என்ற அமைப்பின் பின்னணியிலிருந்து தோன்றிய ஈரோஸ், அதிலிருந்து பிரிந்த ஈ.பி. ஆர்.எல்.எ஼ப், அதிலிருந்து பிரிந்த ஈ.பி.டி.பி. என்ற வழித்தொடரைச் சேர்ந்தவை. இவை 'ஈழம்' என்ற பெயரை தமது இலக்காக வைத்துக் கொண்டன.

### என்ன வித்தியாசம்

இந்த 'ஈழத்'துக்கும் 'தமிழீழத்'துக்கும் என்ன வித்தியாசம்? 'தமிழ்' தான் முதலாவது வித்தியாசம். தமிழ் என்ற சொல் தமது நாட்டின் பெயருக்கு அடைமொழியாகச் சேர்க்கப்பட வேண்டியதில்லை என இரண்டாவது வகையினர் வாதிட்டனர். அதற்கு அவர்கள் தெரிவித்த காரணங்கள் 'தமிழீழம்' என்றால் முஸ்லிம்களை உள்ளடக்க மாட்டாது. எனவே நாட்டின் பெயர் பொதுப் பெயராக 'ஈழம்' என்றே அமைய வேண்டும்.

இது ஒரு சமூக மாற்றத்துக்கான போராட்டம். இங்கு மொழி பிரதானமானதல்ல.

இதேவேளை மூன்றாவது வகை மரபில் தோன்றிய இயக்கங்களும் இருந்தன. அவை சீன கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து பிரிந்து வந்து இன விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க விளைந்த என்.எல்.எ஼ப்.ரியும் அதிலிருந்து பிரிந்த பி.எல்.எ஼ப்.ரியும் இம் மரபைச் சார்ந்தவை. இவர்களின் கருத்துக்கு ஓரளவு இசைவாக 'தமிழ் மக்கள் பேரவை' என்ற இயக்கமும் இயங்கியது.

இவர்கள் சீன கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து ஒட்டுமொத்தமான இலங்கைப் புரட்சியை முன்னெடுப்பதா, தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பதா என்ற கருத்து வேறுபாட்டில் தேசிய விடுதலைக்காகப் பிரிந்தவர்கள். இவர்கள் கராரான சீன மாதிரி இடது சாரிக் கருத்தைக் கொண்டவர்களாக இருந்தார்கள். இவர்களும் 'தமிழ் ஈழம்' என்ற பெயரையே தமது இலக்காக முன்வைத்தார்கள். முஸ்லிம்களும் தமிழ் தேசிய இனத்தின் இனக்குழுவினரே என்பதும், தமிழ் மொழி பேசும் மக்களின் நாடு என்ற கருத்திலும் இப் பெயரை ஏற்றனர். அதாவது 'தமிழ்' என்பதை இன அடையாளமாக அன்றி மொழி அடையாளமாக இவர்கள் கொண்டார்கள்.

முதலாவது வகையினர் இப்போராட்டத்தை பிரிவினைக்கான தேசிய விடுதலைப் போராட்டமாக முன்னெடுத்தார்கள்.

இரண்டாவது வகையினா இடதுசாரித் தன்மைகொண்ட தேசிய விடுதலைப் போராட்டமாக இதை முன்னெடுத்தனர்.

மூன்றாவது வகையினர் வர்க்கப் புரட்சிக்கான மார்க்கமாக இப்போராட்டத்தை முன்னெடுத்தார்கள்.

அத்தோடு இவர்கள் சீனக் கம்யூனிசத் தத்துவத்தின் தாக்கத்தில் இந்திய எதிர்ப்பைக் கொண்டவர்களாக மட்டுமன்றி இந்திய நக்ஸலைட் புரட்சியாளர்களோடு இணைந்து செயற்படுபவர்களாகவும் இருந்தார்கள்.

ஆனால் தமிழர் விடுதலைப் போராட்டம் ஆரம்பத்தில் இந்தியாவில் தங்கியிருந்த நிலையிலும், இப்போராட்டத்தில் வர்க்க எழுச்சி முனைப்புப் பெறாத நிலையிலும் மூன்றாவது வகையினர் கால ஓட்டத்தில் ஓரம்கட்டப்பட்டு முதல் இரு வகையினருமே பிரபல்யம் பெற்றனர்.

இப்போது நாம் பழைய கேள்விக்குத் திரும்பி வந்தால்– அதாவது, 'ஒரே நோக்கத்துக்கு ஏன் பல இயக்கங்கள்?' என்ற கேள்வியைக் கேட்டால்– அதற்குச் சில காரணங்கள் இருக்கத்தான் செய்கின்றன என்பதை ஏற்கக்கூடியவர்களாக இருப்போம். அதாவது 'ஒரே நோக்கம்' என்று பொதுப்படையாகக் கூறுவதைப்போல் விடயம் இருக்கவில்லை. பல்வேறு வேறுபாடுகளும் இருந்தன என்பதை உணரக் கூடியவர்களாக இருப்போம். வேறுபாடுகள் இருந்தால் வேறு வேறு இயக்கங்கள்தானே தோன்றும்? அதில் வியப்பென்ன?

வேறுபாடுகள் இலக்கின் பெயரில் மட்டும் இருக்கவில்லை. கொள்கைகளிலும் இருந்தன. செயற்பாட்டிலும் இருந்தன. அதில் மக்களை அணிதிரட்டி ஆயுதப் போராட்டத்தை நடத்துவது என்றும் ஆயுதப் போராட்டத்தினூடே மக்களை அணிதிரட்டுவது என்றும் இருவகை மார்க்கங்கள் விளைந்தன.

அத்தோடு இவ்வியக்கங்கள் தத்தமக்கு வரித்துக்கொண்ட நட்பு சக்திகளும் வேறுபட்டிருந்தன. அது இந்தியாவில் அப்போது மிகத் தெளிவாகத் தெரியக்கூடியதாயிருந்தது. புலிகள் எம்.ஜி.ஆரைச் சார்ந்திருக்க, டெலோ கருணாநிதியைச் சார்ந்திருக்க, ஈ.பி.ஆர்.எல்.எ஼ப். கம்யூனிஸ்ட் கட்சிகளையும் பின் காங்கிரசையும் சார்ந்திருந்தன.

### பொதுத் தன்மை

இதுமட்டுமன்றி போராட்ட உத்திகளும் வேறுபட்டன. இவற்றைவிட இயக்கக் கட்டமைப்பு, இயக்க விதிமுறைகள் என்பனவும் வேறுபட்டிருந்தன.

அத்தோடு இவ்வியக்கங்களின் வெவ்வேறு விடயங்களில் எடுத்துக்கொண்ட நிலைப்பாடுகளும் வேறுபட்டிருந்தன. தலைமைகளின் குணாம்சங்களும் மாறுபட்டன.

இவ் வேறுபாடுகள் வெவ்வேறு இயக்கங்கள் தோன்றிச் செயற்படக் காரணமாக இருந்தாலும் இவ்வியக்கங்களில் இயக்கப் பிளவுகள் ஏற்படக் காரணம் என்ன என்பதே அடுத்த கேள்வி.

இயக்கப் பிளவுகளை அவதானித்துப் பார்க்கும்போது, இயக்கங்கள் யாவற்றிலும், ஒருவகைப் பொதுத் தன்மையொன்றைக் காணக்கூடியதாக இருக்கிறது.



வரதராஜப் பெருமாள்

அதாவது இயக்கங்களில் மூன்று வகைப்பட்டவர்கள் பொதுவாகக் காணப்பட்டனர். முதலாவது இயக்கங்களை ஆரம்பித்த முதலாம் கட்டத் தலைமை. அடுத்தது இயக்கங்களின் கொள்கைகளை வகுப்பதிலும் அவற்றைப் பரப்புவதிலும் அதிக பங்குவகித்த இரண்டாம் கட்டத் தலைமை. இவை இரண்டும் இயக்கப் பணிகள் மிகச் சிரமத்துடன் முன்னெடுக்கப்பட்ட, 1983 ஜூலைக் கலவரத்துக்கு முற்பட்ட காலத்தவை. மூன்றாவதாக 83 ஜூலைக் கலவரத்துடன் பெருவாரியாக இயக்கங்களில் அணிதிரண்ட திரளினர்.

இவற்றில் முதலாவது மட்டத்தவர்களுக்கும் இரண்டாவது கட்டத்தவர்களுக்கு மிடையே பொதுவான இயக்கங்களின் முரண்பட்ட நிலைமையொன்று இருந்து கொண்டிருந்தது.

ஜூலைக் கலவரத்துடன் உணர்ச்சிவசப்பட்ட பெருவாரியான ஒரு திரளினர் இயக்கங்களில் உள்வாங்கப்பட்டதும் முதலாவது மட்டத்தினருக்கும் இம் மூன்றாவது மட்டத்தினருக்கும் பிணைப்பு ஏற்பட, இரண்டாவது மட்டத்தவர்கள் இயக்கங்களிலிருந்து பிதுக்கி வெளியே தள்ளப்பட்டனர்.

இயக்கங்களிலிருந்து வெளியேறிய மட்டத்தவர்களை அவதானித்தால் இவ்வாறு சகல இயக்கங்களிலுமிருந்து ஒரு தொகையான இரண்டாம் மட்டத்தவர்கள் வெளியேறியிருப்பதைக் காணலாம்.

புலிகளின் ராகவன் குழுவினர், புளொட்டில் சந்ததியார், தீப்பொறி குழுவினர், ஈ.பி.ஆர்.எல்.எ஼ப். செழியன், அசோக், தாஸ் என்போருட்பட ஒரு பகுதியினர் என ஒவ்வோர் இயக்கங்களிலும் இவ்வாறான ஒரு தொகையினர் விலகியிருப்பதைக் காணலாம்.

இதைத்தவிர பிற்பட்ட காலங்களிலும் பல இயக்கப் பிளவுகள் தோன்றலாயின. இதற்கு பல்வேறு காரணிகள் வழியமைத்தன. அவற்றில் கொள்கை முரண்பாடுகள் ஒரு காரணம்.

இயக்கங்களில் பொதுக் கொள்கைகளில் உடன்பாடு இருந்தாலும் உட்கொள்கைகளில் வேறுபாடுகள் தோன்றின. கட்சிக்கும் வெகுஜன ஸ்தாபனங்களுக்குமிடையிலான உறவு, இராணுவத்திற்கும் முன்னணி அமைப்புகளுக்குமிடையிலான உறவு, இராணுவம் கட்சியைத் தலைமை தாங்குவதா, கட்சி இராணுவத்தை தலைமை தாங்குவதா என்ற சர்ச்சை போன்ற பலவற்றில் பிரச்சனைகள் தோன்றின. அவற்றின் காரணமாகவும் பலர் வெளியேற நேர்ந்தது.

ஆரம்பத்தில் சிறியதாய் இருந்த இயக்கங்கள் 'ஜூலை 83' கலவரத்தின்பின் திடீரெனப் பெருத்ததால் அவற்றின் பராமரிப்புச் செலவுக்கான நெருக்கடிகள் தோன்றின. அத்தோடு யுத்தம் முனைப்புப் பெற்றதில் ஆயுதக் கொள்வனவுகள், பயிற்சிகள் போன்றவற்றுக்கான பாரிய நிதித்தேவையை எதிர்நோக்கின. அதனை ஈடுசெய்வதற்கு வங்கிக் கொள்ளைகள் போன்றவற்றில் ஈடுபட்ட இயக்கங்கள் பிற்காலத்தில் அவை கடினமாகவே- ஆலயங்கள், தனியார் வீடுகள், கடைகள் போன்றவற்றில் நிதி திரட்ட முனைந்தன. இச் செயற்பாட்டால் பாரிய அதிருப்தி பல இயக்கங்களுள் தோன்றின.

### முறண்பாடுகள்

முன்னணி அமைப்புக்களைக் கொண்டிருந்த இயக்கங்களில் அவற்றின் இராணுவத்திற்கும் முன்னணிக்குமான முரண்பாடு வெடித்தது. பல தலைமைகள் இவ்வாறான விடயங்களை இரகசியமாகப் பேணியதில் அதை நம்பிய முன்னணி அமைப்புக்கள் இக் குற்றச்சாட்டுக் களை கடுமையாக வாதாடி மறுத்து வந்தன. ஆனால் அவ்வுண்மைகள் பின்னர் தெரிய வரும்போது அவை தலைமைக் கெதிரான முரண்பாடுகளாகமாறின.

இவ்வாறு இயக்கங்கள் திடீரெனப் பெருத்ததன் அடுத்த விளைவு அவற்றுள் ஒழுக்கயீனங்கள் ஏற்படத் தொடங்கின. இவ்வொழுக்கயீனங்களாலும் இயக்கங்களுள் எதிர்ப்புகள் ஏற்பட்டன.

இதேவேளை பல இயக்கங்கள் தாம் முன்வைத்த கொள்கையின்படி இயக்கத்தை இட்டுச்செல்ல முடியாத நிலைக்கு உள்ளாகின. கொள்கை வேறு செயற்பாடு வேறு என்ற நிலைமை தோன்றவே இயக்க முரண்பாடுகள் வலுத்தன.

இயக்க முரண்பாடுகளைத் தீர்க்கும் வழிமுறை பல இயக்கங்களில் இருக்கவில்லை. அதனால் முரண்பட்டவர்களைக் களையெடுக்கும் நடவடிக்கைகள் அவற்றுள் நிகழத் தொடங்கின. சில இயக்கங்கள் இப்படியான உள்ளியக்க எதிர்ப்பாளர்களை 'காட்டிக் கொடுத்தோர்', 'தலைமைக்கு எதிராக சதி செய்தோர்', 'துரோகிகள்' என்று முத்திரை குத்தி விலத்தின, அல்லது தண்டனை கொடுத்தன. பலர் தாமாகவே ஒதுங்கிக் கொண்டனர்.

அதேவேளை இயக்கங்களில் ஏற்பட்ட பின்னடைவுகளும் பலரை ஒதுங்கவைத்தன. யதார்த்தத்தை உணர்த்தாது வெற்றி பற்றி பெரும் நம்பிக்கைகளைக் கொடுத்து தமது உறுப்பினர்களைக் கவர்ந்து வைத்திருக்க விளைந்த இயக்கங்களில் இது நிகழ்ந்தது. இயக்கம் வீழ்ச்சியடைந்ததும் பலர் பட்ட மரத்தை விட்டுப் பட்சிகள் பிரிவதைப்போல் பறந்து சென்றனர்.

### எதிரிகள்–நண்பர்கள்

அத்தோடு போராட்ட வழிமுறைகளில் ஏற்பட்ட மாற்றங்களும் பிரிவுகளுக்கு காரணமாயின. எதிரிகள் நண்பர்கள் என்ற வகைப்பாடுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் பலரை ஒதுங்கவைத்தன. இயக்க மோதல்கள் ஏற்பட்டமை, அரசாங்கத்தை மட்டுமே எதிரியாகக் கண்டுவந்த பல இயக்கங்களுக்கு, புலிகளையும் எதிரியாக்கியது. இந்திய இராணுவத்தின் வருகையும் அதன் செயற்பாடும் இந்தியாவை நண்பனாகக் கண்ட சில இயக்கங்களுக்கு அதை எதிரியாகப் பார்க்க வைத்தது. ஜனநாயக நீரோட்டத்துக்குள் திரும்பிய பல இயக்கங்களுக்கு, முன்னர் எதிரியாகத் தோன்றிய ஐ.தே.க., எஸ்.எல்.எ஼ப்.பி. போன்ற பெரும்பான்மை இனக் கட்சிகள் நண்பர்களாகின. இவ்வாறான மாற்றங்களை ஜீரணிக்க முடியாதும் பலர் விலகிச் சென்றனர்.

இயக்கங்கள் வெவ்வேறு விடயங்கள் தொடர்பாக எடுத்துக்கொண்ட நிலைப்பாடுகளும் இத்தகைய பிரிவுகளுக்கும் பிளவுகளுக்கும் வழியமைத்தன. அண்மைய ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிக்காவை ஆதரிப்பது தொடர்பாக ஈ.பி. ஆர்.எல்.எ஼ப். இரண்டு பட்டது இதற்கு நல்ல உதாரணம்.

சில இயக்கங்களின் கட்சி அமைப்பும் அதன் விதிகளும் உறுப்பினர்கள் சுயமான முன்னெடுப்புகளுக்குத் தடையாக அமைகின்றன. அத்துடன் உட்கட்சி ஜனநாயகத்தை மறுதலித்து விடுகின்றன.

தீர்மானங்கள் எடுப்பதில் பங்கின்றி எடுக்கப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கே அவர்கள் பணிக்கப்படுபவர்களாக இருப்பர்.

**சத்தியன்**

• ஏற்க முடியாத தீர்மானங்களை மறுதலிக்க முடியாத நிலையில் இருப்பர். எனவே செய்யும் காரியத்தில் சம்மதம் இல்லாவிடினும் அவற்றைச் செய்யவேண்டியவர்களாகின்றனர்.

இதில் உடன்படாடில்லாதோரும், புதிய எத்தனங்களைச் செய்ய முயல்வோரும் விலக வேண்டியவர்களாகின்றனர்.

இவற்றைவிட முக்கியமான மற்றோரு காரணியும் இயக்கப் பிளவுகளுக்கு முக்கிய காரணியாக இருந்தது. அதுதான் தலைமைத்துவப் போட்டி. இயக்கத்தின் தலைமையைக் கைப்பற்ற அல்லது கவிழ்க்க நிகழும் போட்டியாகவும் அல்லது தலைமை தன்னை நிலைநிறுத்திக்கொள்ள மேற்கொள்ளும் உட்கட்சி நடவடிக்கைகளாகவும் இவை இருந்தன. அத்தோடு தனிநபர் ஆளுமைப் போட்டியும் (Personality Clash) மறு காரணமாயிருந்தது. அதாவது ஒரு இயக்கத்தின் ஆளுமை மிக்க சில நபர்கள் தலைமைக்கு அல்லது வெவ்வேறு தலைமை மட்டங்களுக்கு சவாலாகக் கிளம்புகின்ற தன்மையும் இயக்கப் பிரிவுகளுக்கு வழிவகுத்தன. ஆற்றலுள்ளவர்களைத் தம் கீழ்வைத்துப் பணியாற்றச் செய்ய இயலாத தலைமைகளின் குறைபாடும் இதற்குக் காரணம். ஈ.பி. ஆர்.எல்.எ஼ப். இலிருந்து அதன் பேச்சாளர் கேதீஸ்வரனின் வெளியேற்றம் இத்தகைய ஒன்றே.

இவ்வாறான காரணங்களால்தான் இயக்கங்களிலிருந்து பலர் ஒதுங்கினர். சிலவேளைகளில் அவை இயக்கப் பிளவுகளாகவும் வடிவம் பெற்றன.

ஒரு விடுதலை இயக்கத்தில் பிரிவுகள், பிளவுகள் ஏற்படுவது பொதுவாக விசனத்தைத் தந்தாலும், தவிர்க்க முடியாதவையாகவும் ஆகிவிடுகின்றன. சில பிளவுகளை நன்மையானவையாகவும் கருத வேண்டியிருக்கின்றன. ●

# கட்டுமீறும் வன்முறைக் கலாசாரம்

## அலசுவது - இராஜதந்திரி



இலங்கையின் ஐந்தாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவாகியுள்ளார்.

1978ம் ஆண்டிலேயே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை அறிமுகமாகியிருந்தது. முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக ஜே.ஆர்.ஜயவர்த்தன விளங்கியிருந்தார்.

அவர் அப்பதவியில் இரு தடவைகள் தொடர்ந்து இருந்ததுடன் 1989ம் ஆண்டில் அரசியலிலிருந்து ஒய்வு பெற்றார். ஜே.ஆர் ஜயவர்தனவே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை அதிக காலம் வகித்திருந்தார்.

ஜே.ஆரைத் தொடர்ந்து ரணசிங்க பிரேமதாசா ஜனாதிபதியானார். ஆனால் அவரால் அப்பதவியில் நீண்ட காலம் நீடித்திருக்க முடியவில்லை. 1993ம் ஆண்டு மேதினத்தில் தற்கொலைக் குண்டுதாரியின் தாக்குதலுக்கிரையாகி நடுத்தெருவில் உடல் சிதறி ஜனாதிபதி பிரேமதாசா கொல்லப்பட்டிருந்தார்.

ஜனாதிபதி பிரேமதாசாவின் மறைவையடுத்து, அன்றைய பிரதமராக இருந்த டி.பி.விஜேதுங்க இலங்கையின் மூன்றாவது நிறை வேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத் தெரிவானார்.

அவரைத் தொடர்ந்து 1994ம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் 17 வருடகால ஆட்சி முடிவுக்கு வந்ததையடுத்து பொதுஜன ஐக்கிய முன்னணியின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக சந்திரிக்கா தெரிவானார்.

தற்சமயம் ஜனாதிபதி சந்திரிக்கா தமது முதலாவது பதவிக்காலத்தைப் பூர்த்தி செய்த பின்னர், இரண்டாவது தடவை மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியில் ஒருவர் இரு தடவைகள் மட்டுமே நீடித்திருக்க முடியும், என்பதே தற்போதைய அரசியலமைப்பின் நியதியாகும்.

இதன் காரணமாகவே ஜே.ஆர்.ஜயவர்தனகூட இரு தடவைகள் ஜனாதிபதியாக இருந்த பின்னர் அப்பதவியிலிருந்தும் ஒய்வு பெற்றார்.

ஜே.ஆர்.ஜயவர்த்தனவுக்குப் பின்னர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியை இரண்டாவது தடவையாகவும் கொண்டிருக்கும் வாய்ப்பை ஜனாதிபதி சந்திரிக்காவே பெற்றுள்ளார்.

எனவே தற்போது அமுலில் இருக்கின்ற அரசியலமைப்பின் பிரகாரம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறை நீடிக்கும் பட்சத்தில் ஜனாதிபதி சந்திரிக்காவுக்குக் கிடைத்துள்ள தற்போதைய இரண்டாவது வாய்ப்பே அவருக்கு ஆட்சியிலிருப்பதற்கான இறுதிச் சந்தர்ப்பமாகவுள்ளதெனவும் கருத வேண்டியுள்ளது.

1994ம் ஆண்டில் முதல் தடவையாக ஜனாதிபதிப் பதவிக்கு சந்திரிக்கா போட்டியிட்டபோது, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை மிகக் கடுமையாகவே அவர் விமர்சித்திருந்தார். அத்தோடு தாம் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதுகூட நிறைவேற்று அதிகார ஆட்சி முறையை நீக்கவே எனவும் அன்று சந்திரிக்கா குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் கடந்த ஐந்தாண்டு காலத்தில் நிறைவேற்று அதிகார ஆட்சி முறையை நீக்குவதற்குப் பதிலாக அப்பதவியின் அனைத்து அதிகாரங்களையும் ஜனாதிபதி சந்திரிக்கா முழு அளவில் பயன்படுத்தியிருந்தார்.

அத்துடன் இரண்டாவது தடவையாக இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டபோதுகூட தமது பிரசாரங்களில், சென்ற தடவை போன்று ஜனாதிபதி ஆட்சிமுறையை நீக்குவது பற்றி சந்திரிக்கா எதனையும் ஆணித்தரமாகக் குறிப்பிட்டிருக்கவில்லை.

இதன்மூலம் அடுத்த ஐந்தாண்டு காலத்திலும் கூட ஜனாதிபதிப் பதவி நீடித்து நிலைக்குமென்பதையே ஊகிக்க முடிகின்றது.

இத்தடவை இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது தேர்தல் வன்முறைகள், இலங்கையின் தேர்தல் வரலாற்றில் ஒருபோதும் இல்லாதவாறு மிக மோசமாகவே இடம்பெற்றிருந்தன.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட நாள் முதற்கொண்டு சிறிது சிறிதாக இடம் பெற்று வந்த வன்முறைகள், தேர்தல் பிரசாரங்களின் இறுதித் தினத்திலன்று பெரும் இரத்தக்களரியையே ஏற்படுத்திவிட்டிருந்தது.

ஜனாதிபதி சந்திரிக்காகூட கொழும்பு மாநகரசபை மைதானத்தில் இடம்பெற்ற தமது இறுதிப் பிரசாரக் கூட்டத்தில் நிகழ்ந்த மோசமான குண்டு வெடிப்பில் மயிரிழையில் உயிர் தப்பியிருந்தார்.

ஜனாதிபதி சந்திரிக்காவையே இலக்கு வைத்து வெடிக்க வைக்கப்பட்ட அக்குண்டுக்கு சுமார் முப்பது பேர் வரை பலியானார்கள். 150க்கு மதிகமானோர் காயமடைந்தனர்.

பெண் தற்கொலைக் குண்டுதாரி ஒருவரே அத்தாக்குதலை நடத்தியிருந்தார் என்பது பொலிஸ் விசாரணைகளில் ஊர்ஜிதமாகியுள்ளது.

கொழும்பைப் பொறுத்தவரை தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் புதியவையல்ல. முன்னாள் தேசிய



ஜனாதிபதித் தேர்தலையொட்டி கொழும்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடைபெற்ற இடத்துக்கு சில மீட்டர் தொலைவிலுள்ள மருத்துவமனை சென்ற நோயாளிகளும் சோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

# புதிய நூற்றாண்டில் புதிய நகர்வுகளை மேற்கொள்ளவேண்டிய தமிழ்க் கட்சிகள்

பந்தோபஸ்த்து அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ணவே கொழும்பில் தற்கொலைக் குண்டுதாரியின் தாக்குதலுக்குள்ளான முதலாவது நபராவார்.

அவரைத் தொடர்ந்து கடற்படைத் தளபதியாக இருந்த கிளான்ஸி பெர்னாண்டோ காலிமுகத்திடலில் தற்கொலைக் குண்டுதாரிக்குப் பலியானார்.

இச் சம்பவங்களையடுத்து 1993ம் ஆண்டு ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா தற்கொலைக் குண்டுக்குப் பலியானார்.

இவற்றைத் தொடர்ந்து இந்த ஆண்டு ஜூலை மாதம் கொழும்பு கறுவாக்காட்டில் வைத்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினரான கலாநிதி நீலன் திருச்செல்வம் தற்கொலைக் குண்டுதாரியினால் படுகொலை செய்யப்பட்டார்.

கலாநிதி திருச்செல்வத்தின் மீதான தற்கொலைத் தாக்குதலையடுத்து நிகழ்ந்த அனர்த்தமாகவே ஜனாதிபதி சந்திரிக்காவின் இறுதிப் பிரசாரக்கூட்ட இரத்தக்களரி விளங்கியிருந்தது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் இறுதிக் கூட்டத்தில் மட்டுமல்ல எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி ஜா-எலப்பகுதியில் நடத்திய கூட்டத்திலும் குண்டொன்று வெடித்ததில் முன்னாள் பிரதி இராணுவத்தளபதியான மேஜர் ஜெனரல் லக்கி அல்கம கொலையுண்டிருந்தார். அவரோடு வேறு பதினைந்து பேரும் ஜா-எலவில் கொல்லப்பட்டிருந்தனர்.

பொலிஸ் புலன் விசாரணைகளில் ஜா-எலக் கூட்டத்தில் வெடித்ததுகூட ஒரு தற்கொலைக் குண்டென்பது ஊர்ஜிதமாகியுள்ளது.

எனவே ஒரே தினத்தில் இரு பிரதான கட்சிகளின் இறுதிப் பிரசாரக் கூட்டத்தில் குண்டுகள் வெடித்து அநேக உயிர்கள் பலியாகியிருந்தன. இக்கொடூரம் இலங்கையில் வன்முறைக் கலாசாரம் கட்டுமீறியுள்ளதையே புலப்படுத்துகின்றது.

ஜனாதிபதி சந்திரிக்கா மயிரிழையில் உயிர் தப்பி இரண்டாவது தடவையாகவும் ஜனாதிபதியாகியுள்ளார்.

அரசியல் அவதானிகள் ஜனாதிபதி சந்திரிக்கா மறுபிறவி எடுத்துள்ளார் என்றே குறிப்பிட்டுள்ளனர். அவர்களின் கணிப்புச் சரியானதாகவே இருக்கின்றது. ஏனெனில் முக்கிய புள்ளிகளைக் குறிவைத்து இதுவரை காலமும் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் ஒருபோதும் இலக்குத் தவறியதில்லை.

ஜனாதிபதி சந்திரிக்கா மீதான தாக்குதலே முதல் தடவையாகக் குறிதப்பியுள்ளது. எனவே அவர் மிகவும் அதிர்ஷ்டசாலியாக இருப்பதோடு ஏறத்தாழ ஒரு மறுபிறப்புடனேயே இரண்டாவது தடவை ஜனாதிபதியாக மறுபிரவேசம் செய்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

1994ம் ஆண்டு இடம் பெற்ற ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின்போதுகூட தற்கொலைக் குண்டுதாரி தனது கைவரிசையைக் காண்பிக்கத் தவறியிருக்கவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிட்ட காமினி திசாநாயக்க 1994ம் ஆண்டில் கொழும்பு தொட்டலங்க பகுதியில் இடம்பெற்ற அவரது பிரசாரக் கூட்டத்தின்போது கொல்லப்பட்டார்.

காமினி திசாநாயக்காவுடன் வேறு பலரும் அன்றைய குண்டு வெடிப்பில் பலியாகியிருந்தனர்.

எனவே தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் என்பது புதியவையோ அல்லது எவரும் அறியாதவையோ அல்ல.

இலங்கையில் கடந்த 17 வருடகாலமாக நீடித்துச் செல்லும் உள்நாட்டு யுத்தத்துடன் ஒன்று கலந்த வன்முறைக் கலாசாரத்தின் ஒரங்கமாகவே தற்கொலைக் குண்டுத் தாக்குதலும் விளங்குகின்றது.

தற்கொலைத் தாக்குதல் ஏற்கனவே இலங்கையில் பதவியிலிருந்த ஜனாதிபதி ஆர்.பிரேமதாசாவைப் பலியெடுத்திருந்தது. தற்போது மீண்டும் சந்திரிக்காவின் உயிரைப் பறிக்கவும் எத்தனித்தது.

இத்தகைய தாக்குதல்கள் அரசியலாளர்களை நெருப்புடன் விளையாடும் நிலைக்கே இட்டுச்சென்றுள்ளன.

உள் நாட்டு யுத்தமும் அதனோடிணைந்த வன்முறைக் கலாசாரமும் முடிவுக்குக் கொண்டுவரப்படும் பட்சத்திலேயே இலங்கையில் பரிபூரண அமைதி ஏற்பட முடியுமென்பதை அனைவரும் நன்கறிவர்.

ஆயினும் காலத்துக்காலம் ஆட்சிக்கு வருவோர் கொடிய யுத்தச் சூழலை முடிவுக்குக் கொண்டு வருவதை விடுத்து தமது சொந்த நலன்களையே முதன்மைப்படுத்துவதை அவதானிக்க முடிகின்றது.

அரசில் அணுகுமுறைகளைப் பலப்படுத்துவதன் மூலமே இலங்கையில் போர்ச் சூழலை ஏற்படுத்தியுள்ள இனப்பிரச்சனைக்கு தீர்வொன்றைக் காண முடியும்.

சமாதானத்துக்காகவே போர் என்ற பேதலித்த கோஷங்கள் ஒரு போதும் பயன் தரப்போவதில்லை. ஏனெனில் நடைமுறைச் சாத்தியமாக நோக்கும்போது இராணுவ நடவடிக்கைகளால் இனப் பிரச்சனையைத் தீர்க்க முடியதென்பதும், தொடர்ந்து போரிடும் இராணுவ ரீதியான மற்றும் பொருளாதார வல்லமைகள் இலங்கையிடம் இல்லை என்பதே தெட்டத்தெளிவு.

இந்நிலையில் இனப்பிரச்சினையை மையமாகக் கொண்ட உள்நாட்டு யுத்தம் முழு நாட்டையும் தற்கொலைக்கு இட்டுச் செல்லும் நிலையையே ஏற்படுத்தி விட்டுள்ளது.

மரணத்தின் விளிம்புக்கே சென்று திரும்பிய ஜனாதிபதி சந்திரிக்கா எவ்விதத்திலும் உணர்ச்சி வசப்படாது! இனவாதக் கருத்துக்களையும் வெளியிடாது சமாதானத்தில் தொடர்ந்து நம்பிக்கையை வெளியிட்டிருப்பது பாராட்டுக்குரியது.

அத்துடன் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியைத் தழுவிய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் தம்முடன் இணைந்து நாட்டின் இனப் பிரச்சினையைத் தீர்க்க முன்வருமாறு ஜனாதிபதி அறை கூவல் விடுத்துள்ளார்.

ரணில் விக்கரமசிங்கவும் சாதகமான முறையில் பதிலளித்திருப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

அத்துடன் பெரும்பான்மை கட்சிகளிடையே கருத்தொருமிப்பு அவசியம் என்ற நிலைப்பாடும் வலுவடைந்து வருவதையே காண முடிகின்றது.

அரசியல் ரீதியாக பெரும்பான்மைக் கட்சிகள் ஒன்றுபடும்போது பெரும்பான்மை மக்களும் அவற்றுடன் அணிதிரளவே செய்வர்.

இக் கட்டத்தில் தமது உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் வடக்கு-கிழக்குத் தமிழ் மக்களின் நிலைப்பாடு என்ன? என்பதே கேள்விக்குரியதாகின்றது.

தகுந்த தலைமைத்துவமின்றி அல்லற்படும் நிலைக்குத் தமிழ் மக்கள் தள்ளப்பட்டுள்ளதே உண்மை நிலையாகும்.

தமிழ் அரசியல் கட்சிகளிடையே நிலவும் பிளவுகள், குத்து வெட்டுக்கள் என்பவை தமிழ் அரசியலை கேலிக்கூத்தாக்கிப் பலவீனப்படுத்திவிட்டுள்ளன.

எனவே புதிய நூற்றாண்டில் இலங்கையின் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி ஆகியவை ஒன்றுபட்டு பிரச்சினைகளை அணுகும் நிலை ஏற்பட்டால் தமிழ் அரசியல் கட்சிகளால் எவ்வளவு தூரம் அத்தகைய நிலைக்குத் தாக்குப்பிடிக்க முடியுமென்பதே பிரதான கேள்வியாகும்.

புதிய நூற்றாண்டில் புதிய நகர்வுகளை தென்னிலங்கை அரசியலாளர்கள் மேற்கொள்ளும் அறிகுறிகளே பலமாக உள்ளன.

எனவே தமிழ் அரசியல் கட்சிகளிடையேகூட புதிய நூற்றாண்டில் புதிய அணுகுமுறைகள் இருப்பது இன்றியமையாததாகின்றது.

வெள்ளம் வருமுன் அணைகட்டும் பாங்கில் தமிழ் அரசியலாளர்கள் நடந்து கொள்ள வேண்டியவர்களாகின்றனர்.

பெரும்பான்மை அரசியல் வாதிகளின் ஒன்றுபட்ட அரசியல் நடவடிக்கைகளைச் சமாளிக்க மட்டுமல்ல. தமிழ் மக்களது பிரச்சனையை புதிய நூற்றாண்டிலும் நீடிக்க வைக்கலாகாது என்ற மனோதிடம் தமிழ் அரசியல் தரப்பிலும் தோன்றவேண்டியதே காலத்தின் தேவையாகின்றது.

## உண்மைத் தொடர்

## அதிர் இடி 90

### கடந்தவாரம்

எண்டபே விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்ட ஃபிரொன்ஸ் எயார்லைன்ஸ் விமானத்தில் பயணம் செய்த பயணிகள் பணயக் கைதிகளாக எண்டபே விமானத்தளத்தின் பொதிக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கு சுகாதார அமைச்சர் மருத்துவ வசதிகளை ஏற்பாடு செய்து கொடுக்கிறார். கைதிகளை விடுவிக்க நிபந்தனை விதிப்பதற்காக பாலஸ்தீன விடுதலை இயக்கக் கடத்தல்காரர்களை அமீன் எதிர்பார்த்து மாளிகையில் காத்து நிற்கும்போது, பேரழகியான ஃபுளோரா வண்டியில் வந்து இறங்குகிறாள். அமீன் அவளைக் கண்டதும் செய்வதறியாது திகைத்துத் தடுமாறுகிறான். அதிபர் அலுவலகத்தில் புதிதாகச் சேர்க்கப்படவிருந்த கலப்பு இனப்பெண் ஃபுளோரா.

இனி...

# இடி அமீன்

எதற்கும் பதற்றமடையாத அமீன் இந்தச் சந்தர்ப்பத்தில் நிலை குலைந்து காணப்பட்டான். இருதலைக் கொள்ளி எறும்புபோல் அமீன் காணப்பட்டான்.

இஸ்ரேலியர்களுக்கு நல்லதொரு பாடம் புகட்டுவதற்கான சந்தர்ப்பம் எதிர்பாராமல் வந்திருக்கிறது. பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்குத் தனது ஆதரவு எப்போதுமுண்டு என்று காட்டுவதற்கான வாய்ப்புக் கிட்டியிருக்கிறது. இச்சந்தர்ப்பத்தை மிகவும் சாதுர்யமாகப் பயன்படுத்தவே அவன் தயாராகவிருந்தான்.

ஃபிரான்ஸ் எயார்லைன் விமானத்தில் இஸ்ரேலியப் பயணிகள் பணயக் கைதிகளாகத் தனது நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதையிட்டு அன்றிரவு முழுவதும் திட்டம் தீட்டினான். இதனால் அவன் தூக்கமும் பாதிக்கப்பட்டிருந்தது. வேறு எவருடைய ஆலோசனையும் பெறப்படாமல் தன்னந்தனியனாகவே அவன் திட்டமிட்டான்.

அடுத்த நாட்காலை வழக்கத்தைவிட அதிகாலையிலேயே எழுந்துவிட்டான். கடத்தல்காரர்கள், பணயக் கைதிகளை விடுவிக்க விதிக்கப்படப் போகும், நிபந்தனைகளையிட்டுக் கலந்து உரையாட, அவர்களில் சிலரை தனது மாளிகைக்கு வருமாறு, தனது மோட்டார் வண்டிகளையே விமான நிலையத்துக்கு அனுப்பி வைத்திருந்தான். இன்னும் சற்று நேரத்தில் அவர்கள் மாளிகைக்கு வந்து விடுவார்கள்.

அமீன் எதிர்பார்த்திருந்தவர்களுக்கு மாறாக, அவனை அப்படியே உலுக்கி எடுக்கும் அழகி, காரிலிருந்து இறங்கி மாளிகையின் முன்படிகளில் ஏறி அவன் எதிரே பதுமைபோல் நடந்துவந்து கொண்டிருந்தாள். அளவான உயரம், உருண்டு திரண்ட மேல் அழகுகள், எடுப்பான தோற்றம், குமிழ்போன்ற கொவ்வை இதழ், குறும்புத்தனம் கொப்பளிக்கும் கண்கள், இத்தியாதி அழகுக் கோலத்துடன் வந்த அவள்- ஃபுளோரா- அமீனின் முன்வந்து நின்றாள்.

ஃபுளோராவுக்கு தன் எதிரே நின்றவர்தான் அந்நாட்டின் அதிபர் அமீன் என்பது அப்போது தெரிந்திருக்கவில்லை. ஓர் இராணுவ அதிகாரி அம்மண்டபத்தில் எதற்காகவோ காத்து நிற்கிறார் என்று கருதினாள். நேராக அமீனை நெருங்கி, "அதிபர் அவர்களைப் பார்க்க வந்திருக்கிறேன். என் பெயர் ஃபுளோரா." என்று தூய ஆங்கிலத்தில் பேசினாள்.

அவள் மண்டப வாயிலில் நின்ற காவலன் ஒருவனிடமும் அதே வார்த்தைகளைத்தான் கூறினாள். அவன் உட்புறம் செல்லுமாறு வாயிலைக் காட்டவே அவள் தடையின்றி உள்ளே நுழைந்தாள். அதிபர் அமீனே அவ்விடத்தில் இருக்கமாட்டார். உள்ளே அவருக்குரிய ஆடம்பரமான இருக்கையில் வீற்றிருப்பார் என்றே அவள் எண்ணியிருந்தாள்.

அமீன் ஃபுளோராவை உச்சி முதல் உள்ளங்கால்வரை ஒவ்வோர் அவயமாக அளந்து பார்த்தான். அவனுடைய கண்கள், அவளுடைய முழங்காலுக்கு மேல் சில அங்குலங்கள் வரை உயர்ந்திருந்த சட்டையின் விளிம்பில் தெரிந்த கால்களில் நிலை குத்தி நின்றன. இத்தகைய ஒரு பார்வையின் தாக்கத்தை எத்தகைய இளம் பெண்ணாலும் தாங்கிக் கொள்வது சற்றுக் கடினமானதுதான். ஃபுளோராவின் உடலெல்லாம் புல்லரித்தது.

இதற்கிடையில் அமீனும் சற்றுச் சுதாகரித்துக் கொண்டான். மோட்டார்கள் மாளிகை நோக்கி வந்துகொண்டிருந்த மைக்கான ஓசையும் கேட்டு அமீனை சுயஉணர்வு பெறவைத்தது. தனது வலது கையை உயர்த்தி, அங்கே இருந்த இருக்கை ஒன்றைச் சுட்டிக்காட்டினான். ஃபுளோரா அந்த இருக்கையை நோக்கி மெதுவாக நகர்ந்தாள்.

அவளுடைய பின்னழகை இரசித்த வண்ணம் அமீன் சற்று நேரம் நின்றிருந்தான். அதே கால கட்டத்தில் வண்டிகளும் மாளிகையின் முன்புறம் வந்து நின்றன.

தன்னைக் காண்பதற்காக எப்பேற்பட்டவர் வந்தாலும் அமீன் தனது அலுவலக அறையிலிருந்து வெளியே வந்து அழைத்துச் செல்வது கிடையாது. ஆனால் பாலஸ்தீனக் கடத்தல்காரர்களை வரவேற்க மாளிகையின் படிக்கட்டுவரை அமீன் வந்து காத்து நின்றமை அங்கு அப்போது ஆங்காங்கே நின்ற பாதுகாப்புப் படையினர், மாளிகை அதிகாரிகள் மற்றும் காவலர்கள் அனைவரையும் வியப்பிலாழ்த்தியிருந்தது.

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தாருடன் தனக்கு அபரிமிதமான அபிமானம் இருக்கிறது என்று பறைசாற்றவே அமீன் அவ்வாறு நடந்துகொண்டான். அத்துடன் அரபு நாடுகளுடனும் முன்பிருந்ததைவிட நல்லுறவை இச்சந்தர்ப்பத்தில் அதிகரித்துவிடலாம் என்றும் அமீன் கருதினான். சீரழிந்துவிட்ட உகண்டாவின் பொருளாதார நிலையைச் சீராக்க அரபு நாடுகளின் உதவியும் அமீனுக்குத் தேவைப்பட்டது.

கார்லோஸ் என்ற பன்னாட்டுப் பயங்கரவாதியும் பாலஸ்தீன விடுதலை இயக்க நடவடிக்கைகளில் தன்னையும் இணைத்திருந்தான். கார்லோஸ் பாலஸ்தீனக் குடிமகனல்ல. ஆனால் எப்படியோ அவ்வியக்கத்துடன் இணைந்து பல செயற்திட்டங்களை நடத்தியுள்ளான்.

கார்லோசைப் போலவே காபிரியல் குரோச்சே ரியாட்மான் என்ற ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த பெண்மணியும் பாலஸ்தீன விடுதலைப் போராளிகளுடன் இணைந்து செயற்பட்டாள்.

நிபந்தனைகளையிட்டு அமீனுடன் பேச்சுவார்த்தையிலீடுபடும் குழுவில் குரோச்சே ரியாட்மான் சேரவில்லை. ஆனால் கார்லோஸ் சேர்ந்துகொண்டு அமீன் மாளிகைக்கு வந்து சேர்ந்தான். வந்தவர்களை வரவேற்று தனது மாளிகையின் வடபுறமிருந்த ஆலோசனை மண்டபத்துக்கு அழைத்துச் சென்றான் அமீன்.

இதேவேளை, முன்மண்டபத்தில் அமர்ந்திருந்த ஃபுளோராவுக்கு எதுவுமே புரியவில்லை. இருப்பினும் தன்னை வரவேற்று இருக்கையில் அமர்த்தியவன்தான் அதிபர் அமீன் என்பதை அறிந்துகொண்டாள். அதிபர் அமீன் இவ்வளவு எளிமையானவரா, என்று அவள் உள்ளத்தில் ஓர் எண்ண அலை ஓடவே செய்தது. பத்திரிகைகளில் அமீன் பற்றிய செய்திகள் படித்திருந்தாள்; படங்களையும் பார்த்திருந்தாள். நெருங்குவதே கடினமாக இருக்கும்; தன்னை நேர் முகப்பரீட்சைக்காக அழைத்திருக்கிறார்; அவர் என்னென்ன கேள்விகளைக் கேட்கப்போகிறார்; எப்படிப் பழகுவாரோ என்றெல்லாம் பலவாறாக அவள் பதற்றமடைந்திருந்தாள்.

நாட்டின் அதிபராகவிருக்கும் ஒருவர், அவரை நாடி வருபவர்களை முன்வாயில் வரை வந்து வரவழைத்துக் கொண்டு போவதானால், அவர் ஒரு எளிமையான இனிமையானவராகத்தான் இருப்பார் என்ற முடிவுக்கு வரலானாள்.

ஜூன் மாதம் 28ம் திகதி திங்கட்கிழமை காலையில் கடத்தல் விமானம் எண்டபே விமான நிலையத்தில் தரை இறக்கப்பட்டது.



அடுத்த நாள் செவ்வாய்க் கிழமை காலையில் தான் அமீன் மாளிகையில் கடத்தல்காரர்கள் அமீனைச் சந்தித்தனர். அமீனுடன் கலந்துரையாடி ஒருமுடிவுக்கு வந்தனர்.

"ஜூலை மாதம் 1ம் திகதி வியாழக்கிழமை மாலையாவதற்கு முன்னர், உலகின் பல நாடுகளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள பாலஸ்தீனக் கைதிகள் 54 பேரையும் எதுவிதமான தடங்கலுமின்றி விடுவிக்க வேண்டும். இல்லாவிட்டால் கடத்தப்பட்ட எயார் ஃபிரான்ஸ் விமானத்தில் பயணம் செய்த சகல பயணிகளும் கொலை செய்யப்பட்டு விடுவார்கள்!" என்ற நிபந்தனையை ஏற்படுத்தி சகல செய்தி ஊடகங்களுக்கும் தெரியப்படுத்தினர். உகண்டா வானொலியும் தொலைக்காட்சியும், நடைபெற்றுக்கொண்டிருந்த வழமையான நிகழ்ச்சிகளை இடைநிறுத்தி, இத்தகவலை அவசரமாக அறிவித்தன.

உலகெங்கும் இச்செய்தி பறந்தது. கூடவே அமீனின் பெயரும் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டது. இச் செய்தி கிடைத்ததும் பாலஸ்தீனத் தலைவர் யாசீர் அரபாதின் செயலர் ஒருவர் அமீனுடன் தொடர்பு கொண்டு பேசினார். அமீனைப் பாராட்டியதுடன், இரு நாட்கள் காலக்கெடு போதாதெனச் சொன்னார். அமீன் கம்பலாவிலுள்ள பாலஸ்தீன விடுதலை இயக்கக் கிளை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கினான். இதன்பின் ஜூலை 4ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 1.00 மணி வரையும் காலக்கெடு நீடிக்கப்பட்டது.

### தருவது அழகன்

அமீன், கார்லோஸ் பற்றி அதிகமாக அறிந்து வைத்திருந்தான். அவனுடைய ஆசாபாசங்களையும் தெரிந்துவைத்திருந்தான். தன்னுடன் கலந்துரையாட வந்திருந்தவர்களுக்குச் சிற்றுண்டியும் தேநீரும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்திருந்தான். அன்றிரவு உணவருந்த வருமாறு அழைப்பு விடுத்துவிட்டு அவர்களை வழியனுப்பி வைத்தான்.

வந்தவர்கள் கார்களில் ஏறிச் சென்றதும் மண்டபத்துள் அமீனின் கண்கள் வலை வீசின. ஏற்கனவே ஃபுளோரா அமர்ந்திருந்த இடம் காலியாகவிருந்தது. அமீன் திகைத்தான். அவனுடைய மெய்காப்பாளன் ஒருவன் அமீன் அருகில் வந்து இடதுபுறமிருந்த மற்றொரு மண்டபத்தைச் சுட்டிக்காட்டினான்.

வெள்ளைக்காரர் அரசாண்ட காலத்தில் கட்டப்பட்ட அம்மாளிகையில் பல மண்டபங்கள் இருந்தன. உகண்டாவின் வரலாற்றை விளக்கும் படங்கள் மற்றும் பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த அந்த மண்டபத்துள் ஃபுளோரா நின்றாள். அவளிருக்கும் இடம் நாடி அமீனின் கால்கள் ஊர்ந்தன.

(இடி தொடரும்)

## "எனக்கு கல்யாணமா?"



இப்போது படங்களில் நடிக்காமல் இருப்பதால் பலரால் மறக்கப்பட்ட நடிகை கஸ்தூரியின் பெயர் மறுபடி பத்திரிகைகளில் அடிபடுகிறது. இதற்குக் காரணம் அவருடைய திடீர்த்திருமணம்.

அமெரிக்காவில் வசிக்கும் ஸ்ரீகுமார் என்ற டாக்டரைத்தான் கஸ்தூரி திருமணம் செய்துள்ளார். டாக்டர் ஸ்ரீகுமாரின் சொந்த ஊரான வேலூரில் கடந்த நவம்பர் மாதம் 15ம் திகதி திருமணம் நடந்தது.

'திடீரென இரகசியக் கல்யாணம் செய்து கொண்டதற்கு என்ன காரணம்?' என்று பலரும் கேட்கும் கேள்விக்கு கஸ்தூரி தரும் பதில்.

"கல்யாணமா? எனக்கா? அதுவும் இரகசியமாகவா? நான் கல்யாண விழாக்களை நடத்தி வைக்கும் நிறுவனம் ஒன்றை நடத்தி வருகிறேன். அண்மையில் அமெரிக்காவில் உள்ள டாக்டர் ஒருவருக்கு திருமணம் ஒன்றை நடத்தி வைத்தேன். ஆனால் மணப்பெண் நானல்ல."

கஸ்தூரி கொடுத்த இந்த மறுப்பறிக்கையையே அவரது தாயும் தந்தையும் வழிமொழிகிறார்கள்.

சினிமாவில் வாய்ப்பில்லாமல் போகவே வாய்ப்புக்கள் கிடைக்குமென்று அழைக்காத விழாக்களுக்குக்கூட அரைகுறை ஆடையுடன் சென்றார். பலன் பூச்சியம்தான். பின்னர் தொலைக்காட்சியில் நிகழ்ச்சித் தொகுப்பாளராகப் பணிபுரிந்தார் கஸ்தூரி.

திருமணம் செய்து கொண்டதை ஏன் மறைக்க வேண்டும், இப்படி ஆரம்பத்தில் மறுப்பு விட்டவர்கள்தான் பின்னர் அசடு வழிந்திருக்கிறார்கள்.

## கவிஞராக மைக்கல் ஜாக்ஸன்



பிரபல பொப் பாடகரும் டான்ஸருமான மைக்கல் ஜாக்ஸன் திரைப்படம் ஒன்றில் நடிக்கப்போகிறார். 'த நைட் மோர் ஒஃப் எட்கார் அலன் போயி' என்ற படத்தில் ஜாக்ஸன் கவிஞர் அலன் போயி ஆக நடிக்கவுள்ளார்.

இதற்கு முன் மைக்கல் ஜாக்ஸன் 'த விஷ்' என்ற ஒரே ஒரு ஆங்கிலப் படத்தில் நடித்திருக்கிறார். இப்படம் 1978ம் ஆண்டு வெளியானது.

## பிறர் கணவரைக் கவரும் காரிகைகள்



கிழக்கு ரோம் நகரத்தை அண்டியுள்ள அப்ருவோ மலைப்பகுதியில், கிழக்கு ஐரோப்பாவில் இருந்து வரும் பெண்களால் அங்குள்ள கணவன் மனைவியரிடையே விவாகரத்துக்கள் அதிகரித்து விட்டதாம்.

அப்ருவோவில் நிறைய இரவு விடுதிகள் உள்ளன. இவைகளில் வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் உக்ரைன், போலந்து, ருமேனியா போன்ற நாடுகளில் இருந்து வேலை தேடி வரும் பெண்களுக்கு வேலை கிடைக்கிறதோ இல்லையோ, இவர்களின் வலையில் அங்குள்ள ஆண்கள் மாட்டிவிடுகிறார்கள்.

ஏற்கனவே சூதாட்டத்திலும், இரவு விடுதிகளிலும் பணத்தைச் செலவளிக்கும் இங்குள்ள ஆண்கள் இந்தப் பெண்களுக்குப் பணத்தையும், அன்பளிப்புக்களையும் வாரி வழங்குகிறார்கள். அது மட்டுமன்றித் தமது மனைவியரை விவாகரத்துச் செய்துவிட்டு இந்தப் பெண்களைத் திருமணம் கூட செய்து கொள்கிறார்கள்.

கிழக்கு ரோமில் இருக்கும் செவர்னோ நகரத்தில் 8 ஆயிரம் குடும்பங்கள் உள்ளன. கடந்த இரண்டு வருடங்களில் சுமார் 100 குடும்பங்கள் வரை இந்த ஐரோப்பியப் பெண்களால் விவாகரத்து வரை சென்றுள்ளன.

## குறைந்த வாடகைகளில் அறைகள்



ஸ்பெயின் நாட்டில் நடத்தப்பட்டு வரும் தங்கும் விடுதிகளில் உள்ள அறைகளை காதலர்களுக்குக் குறைந்த வாடகைகளில் அவர்களை ஜோடி சேருவதற்கு அனுமதிக்க வேண்டும் என ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

'இது என்ன விபரீதமான ஆலோசனை?' என்று பார்த்தால், இந்த ஆலோசனைக்கான காரணம் என்னவென்று தெரிய வருகிறது.

இங்குள்ள இளைஞர்களும் யுவதிகளும் கார்கள், பூங்காக்கள், பிளாட்ஃபோம் இருக்கைகள் என நினைத்த இடங்களில் எல்லாம் கட்டிப் புரண்டு காதல் லீலைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தப் பிரச்சனைகளைச் சமாளிக்கத்தான் மேற்கூறப்பட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகிறது.

## கிரிக்கெட் வீரர்கள் குவித்த பணம்



கிரிக்கெட் வீரர்கள் குவிக்கும் ஓட்டங்களை அவ்வப்போது நாம் பார்ப்பதுண்டு. ஆனால் அவர்கள் கிரிக்கெட் மூலம் குவிக்கும் பணம் எவ்வளவு என்று அநேகருக்குத் தெரியாது.

கிரிக்கெட் விளையாட்டின் மூலமாக மட்டுமன்றி, கிரிக்கெட்டினால் கிடைக்கும் புகழினால் பெறும் விளம்பரங்கள் மூலமாகவும் பணம் குவிகின்றது.

இந்தியாவின் நட்சத்திர கிரிக்கெட் வீரர்களான டெண்டுல்கர், ஜடேஜா, கங்குலி, ட்ராவிட் ஆகியோர் 1999ல் குவித்த மொத்தப் பணம் எவ்வளவு என்று பார்ப்போம்.

கடந்த வருட ஆரம்பத்தில் முதுகுவலி காரணமாக பல போட்டிகளில் பங்கேற்காமல் போனாலும் டெண்டுல்கரின் வருமானம் பாதிக்கப்படவில்லை. விளையாட்டு மற்றும் விளம்பரங்கள் மூலம் டெண்டுல்கர் இந்திய மதிப்பில் 18 கோடி ரூபாய் சம்பாதித்துள்ளார்.

இந்திய விளையாட்டு வீரர்களில் (கவனிக்க: கிரிக்கெட் மட்டுமன்றி ஏனைய விளையாட்டு வீரர்கள் உட்பட) வேறு எவரும் இத்தொகையை எட்டவில்லை. உலகின் நம்பர் வன் டென்னிஸ் ஜோடியான மகேஷ்பூபதி-லியாண்டர் பயஸ் ஆகியோரின் கடந்த வருட வருமானம் 8 கோடி இந்திய ரூபா.

கல்கத்தா இளவரசன் கங்குலிக்கு 8 கோடி ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது. சமீப காலமாக கிரிக்கெட்டில் தூள் பறத்தும் ட்ராவிட்டுக்கு 6 கோடி வருமானம் கிடைத்துள்ளது. மைதானத்தில் ட்ராவிட்டை விடப் பின்தங்கினாலும் தனது கவர்ச்சியான தோற்றத்தால் ஜடேஜா விளம்பரங்கள் மூலம் அதிக வருவாயைப் பெற்றுள்ளார். ட்ராவிட்டைப் போன்றே இவரும் கடந்த வருடம் 6 கோடி ரூபாய் சம்பாதித்துள்ளார்.

இவ் விபரங்கள் யாவும் வருமான வரித்துறை மற்றும் விளம்பர நிறுவன மட்டங்களில் இருந்து திரட்டப்பட்டவை. இவற்றில் சற்றுக் கூடுதலாக இருக்க வாய்ப்பு உண்டு.



## சுவரில் சித்திரங்கள்

ஜெர்மன் நாட்டின் தலைநகரமான பொன் நகரில் 'ஹொட்டல் ஐரோப்பா' என்ற ஹோட்டல் ஒன்று இருக்கிறது. இந்த ஹொட்டலின் சுற்றுச்சுவரை நகரின் பிரதான இடங்களில் இருந்து பார்க்கலாம்.

இப்படி எல்லாப் பக்கங்களில் இருந்தும் ஹொட்டல் சுற்றுச்சுவரைப் பார்க்க முடியும் என்றால், பெரிய விளம்பரப்படங்களை அந்தச் சுவரில் வரையலாம் அல்லது பொருத்தலாம்.

ஆனால் இந்த ஹொட்டல் சுவரில் விளம்பரங்களுக்குப் பதில், உலகில் மிக முக்கிய 130 பிரமுகர்களின் படங்களைப் பெரிதாக வரைந்து வைத்துள்ளார்கள். இப்படங்கள் யாவும் பார்ப்போரை அசத்துகின்றன.


அமெரிக்காவில் துப்பாக்கிக் கலாசாரம் தலைவிரித்தாடுகிறது. பாடசாலைச் சிறுவர்களே சகமாணவர்களையும் ஆசிரியர்களையும் துப்பாக்கியால் சுட்டுக் கொன்ற சம்பவங்களும் அண்மையில் நடைபெற்றுள்ளன.

வகைவகையான கைத்துப்பாக்கிகளை படத்தில் காண்கிறீர்கள். பின்புறமாகவும் வேறு ரகத் துப்பாக்கிகளும் காணப்படுகின்றன. இவை கண்காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளவையல்ல; தலைநகர் வாஷிங்டனில், வீடுகளிலுள்ள துப்பாக்கிகளை பொலிசாரிடம் திருப்பி ஒப்படைக்குமாறு விடுவிக்கப்பட்ட வேண்டுகோளின் எதிரொலி-அரசின் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்த குடிமக்கள் தங்களிடமிருந்த துப்பாக்கிகளை பெருந்தொகையாக பொலிசாரிடம் ஒப்படைத்தனர்.

திரும்ப ஒப்படைக்கப்பட்ட ஒவ்வொரு துப்பாக்கிக்கும் 100 டொலர் (சுமார் 7 ஆயிரத்து 300 ரூபா) சன்மானமாக வழங்கப்பட்டது. இதற்காக ஒதுக்கப்பட்டிருந்த தொகை இரண்டு நாட்களில் காலியாகிவிட்டதாம். அரசாங்கம் விடுத்த வேண்டுகோளுக்கு அளிக்கப்பட்ட மதிப்பா, அல்லது திருப்பித்தரப்பட்ட துப்பாக்கிகளுக்காக கொடுக்கப்பட்ட 100 டொலருக்கான மதிப்பா? இதற்குக் காரணம் என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள்!

## ஆயுத ஒப்படைப்பு





## கட்டடக் காதல்

அலடின் ரொபேட் என்ற ஃபிரான்ஸ் நாட்டுக்காரருக்கு உயரமான கட்டடங்களைக் கண்டால் ஒரு காதல். அந்தக் கட்டடத்தின் உச்சிவரை ஏற வேண்டும் என்ற துடிப்பு அவரை ஆட்கொண்டுவிடும். அமெரிக்காவின் சிக்காகோ நகரிலுள்ள சீயேர்ஸ் டவேர்ஸ் என்ற கட்டடம் 110 மாடிகளைக் கொண்டது- 1454 அடி உயரமானது.

அண்மையில் ஒருநாள் காலையில் கட்டடத்தின் யன்னல் விளிம்புகளில் கால் வைத்து, 90 நிமிடங்களில் உச்சிக்குப் போய் விட்டார். உச்சியில் அவருக்குக் கிடைத்த வரவேற்புத்தான் 'மகத்தானது'. அவரை பொலிசார் வரவேற்று பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.

அனுமதியின்றி கட்டடத்தில் திருட்டுத்தனமாக ஏறினார் என்பது குற்றச்சாட்டு. சாதனை படைப்பதற்காகவே ஏறியதாக வாதிட்ட அவர்மீது மற்றுமொரு குற்றச்சாட்டும் போடப்பட்டது. கீழே பாதுகாப்பு வலை எதுவும் கட்டாமல் இத்தனை உயரத்தில் ஏறியது தற்கொலை முயற்சி என்பதாகும்.

ரொபேட்டின் இந்தச் சாதனையை, காலை வேளையில் அக்கட்டடத்தின் அருகே நின்ற பாதசாரிகள் பாராட்டி மகிழ்ந்தனர்.

அலடின் ரொபேட் நியூயோர்க்கிலுள்ள எம்பாயர் ஸ்டேட் கட்டடம், பாரிஸ் நகரிலுள்ள எஃபில் கோபுரம் ஆகியவற்றிலும் ஏறி சாதனை படைத்தவர். இத்தனைக்கும் இவர் எதுவித தனி சாதனங்கள் எதனையும் பயன்படுத்துவதில்லையாம்.

## தகவல் பெட்டி


## அதிக விலையுள்ள அதிசய வண்டுகள்

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் பூமிக்கடியில் இருந்து இரண்டு பெரிய வண்டுகளைக் கண்டுபிடித்துள்ளனர். இவை அங்குள்ள பூச்சிகள் மற்றும் வண்டுகள் விற்கும் கடைக்கு விற்பனைக்கு வந்துள்ளன.

உள்ளங்கையில், கொம்புடன் இருப்பது ஆண் வண்டாகும். இதன் நீளம் 77 செண்டிமீட்டராகும். பெண் வண்டின் நீளம் 51 செண்டிமீட்டர்.

இந்த வண்டுகளின் விலையைக் கேட்டால் அவை கடிக்காமலே மயக்கமடைந்து விடுவீர்கள்.

இவற்றின் விலை 50 இலட்சம் ஜப்பானிய யென். நம்நாட்டு மதிப்பில் சுமார் 34 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா.





## வேண்டாத விருந்தாளிகள்

கனடாவிலுள்ள கிமிலி என்ற சிற்றூரில் உள்ள ஓர் உணவு விடுதிக்குள், உணவு உட்கொள்ள வரும் வாடிக்கையாளர்கள் வந்து சேர்வதற்கு முன்னதாக இலட்சக்கணக்கில் சின்னதும் பெரியதுமாக பூச்சிகள் படையெடுத்து வந்துவிட்டன.

உணவு விடுதியின் உரிமையாளர் லோறி ரெய்க்டால், வழமையாக வரும் விருந்தாளிகளுக்கு முன்னதாக வந்து சேர்ந்துவிட்ட வேண்டாத விருந்தாளிகளை விரட்டி அடித்து வெளியே அனுப்பப்பெரும்பாடு படுகிறார்.

## ஒத்திவைக்கப்பட்ட ஜோடி

பிரசாந்த்-சிம்ரான் நடித்த 'ஜோடி' படத்தை இயக்கியவர் பிரவீன்காந்த். இந்தப் படத்தை இந்தியில் இயக்கும் முயற்சியில் இவர் ஈடுபட்டார்.

இதற்கிடையில் 'ஜோடி' படத்தை தெலுங்கில் மொழிமாற்றி வெளியிட்டார்கள். தெலுங்கில் 'ஜோடி' பெருவெற்றி. இதைக்கண்ட நாகார்ஜுன் தன்னை வைத்து ஒரு படம் இயக்கித்தர வேண்டும் என பிரவீன்காந்திடம் பிடிவாதம் பிடித்தார்.

இந்தியில் 'ஜோடி' படத்தை இயக்கும் திட்டத்தை ஒத்தி வைத்துவிட்டு, நாகார்ஜுன் நடிக்கும் தெலுங்குப் படத்தை இயக்கவுள்ளார் பிரவீன்காந்த்.

ஏற்கனவே நாகார்ஜுனை வைத்து பிரவீன் காந்த் இயக்கிய 'ரட்சகன்' தெலுங்கில் 'ரட்சகுடு' என்ற பெயரில் வெளியாகி பெரு வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

## 3 படங்களில் மனோஜ்

'தாஜ்மகால்' படத்தில் நடிப்பாள இளைஞனாக அறிமுகமான மனோஜ் 3 புதிய படங்களில் நடிக்கவுள்ளார்.

மனோஜ் நடிக்கும் படங்களை ஆர்.கே. செல்வமணி, சரண், பாரதிராஜா ஆகியோர் இயக்கவுள்ளனர். இம்மூன்று படங்களுக்கும் சுதாராயசித் தோடி நடை பெறுகிறது. இந்தப் படங்களின் பெயர்கள் மற்றும் இப்படங்களில் பணியாற்றவுள்ள ஏனைய கலைஞர்கள் பற்றிய விபரங்கள் விரைவில் அறிவிக்கப்படும்.


பாண்டியராஜன்-சுவர்ணிராஸ்
படம்: சுந்தரி நீயும் சுந்தரன் நானும்

## காதோடு சொல்லுகிறோம்

பெரும் செலவு வைத்து தயாரிப்பாளரைக் கதிகலங்க வைத்த முன்றெழுத்து இயக்குநர் விரைவில் திருமணம் செய்துகொள்ளப்போகிறார். இவரைக் கைப்பிடிக்கவுள்ள பெண் இசையில் புயலைக் கிளப்பிக் கொண்டிருப்பவரின் தங்கை. இவர் ஏற்கனவே திருமணமாகி விவாகரத்துப் பெற்றவர். ஏதாவது ஒரு நல்ல 'காதலர் தினத்'தில் திருமணம் நடக்கவுள்ளது. ஆனால் ஒரு சந்தேகம் திருமணம் இந்து முறைப்படியா அல்லது இஸ்லாமிய முறைப்படியா?

பார்ட்டி வைப்பதில் பேர்போன நட்சத்திரத் தம்பதி கடைசியாக வைத்த பெரிய பார்ட்டி 'வெரிகுட்' தயாரிப்பாளர் ஒருவருக்காக. இம்முறை வைத்த பார்ட்டி மகனுக்காக அல்லவாம் மகனுக்காகவாம். பார்ட்டியின் போது 'தன் மகனை வைத்துப் படமொன்றைத் தயாரியுங்களேன்' என்று வெற்றி குமார் சொல்ல 'குட்' என்று ஏற்றுக்கொண்டார் தயாரிப்பாளர். இப்போது அப்படத்தின் தொடக்க வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

## வடுக்கப்பட்டி மாப்பிள்ளை

படைத்திருப்பவர் வி.சி. குகநாதன். இவர் பல படங்கள் இயக்கிய படங்களில் ஒன்று 'மைனர் மாப்பிள்ளை'. இப்படத்தின் பெயர் 'வடுக்கப்பட்டி மாப்பிள்ளை'.

விசு, வடிவேலு முக்கிய பாத்திரங்களில் நடிக்க ரேஷ்மா, ராஜ்ஶ்ரீ, பாண்டு, வையாபுரி, கமிந்ரா, [illegible] அனுஜா ஆகியோர் நடிக்கின்றனர்.

சிற்பி இசையமைக்க, பழனிபாரதி பாடல்கள் எழுதுகிறார். பொழுதுபோக்கு அம்சங்களுடன் சிறப்பான கதையம்சம் கொண்ட இப்படம் ஜனவரி 26ம் திகதி வெளியாகிறது.

## விந்தியா தாராளம்

'சங்கமம்' படத்தில் அறிமுகமான விந்தியா, சாவித்திரி போல குடும்பப்பாங்கான வேடங்களில் மட்டுமே நடிப்பேன் என்று முதலில் கூறிவந்தார்.

ஆனால் தற்போதைய திரையுலக நடப்பைப் புரிந்து கொண்டு 'தாராள' மயக் கொள்கையில் இறங்கி விட்டாராம்.

ஹென்றி தயாரிப்பில் முரளிக்கு ஜோடியாக நடிக்கும் 'கண்ணுக் கண்ணாக' படத்தில் குற்றால அருவியில் குளிக்கும் காட்சியில் விந்தியா நடித்த புகைப்படத்தை கோடைகாலம் வந்தவுடன் தருவதாகச் சொல்லியிருக்கிறாராம் இப்படத்தின் இயக்குநர் தயாளன்.

அவ்வளவு குளிர்ச்சியான படமா என்ன?

## மினி சினி

✣ கமலின் 'ஹேராம்' படத்திற்கு படத்தொகுப்பு (எடிட்டிங்) செய்பவர் ரேணு சலூஜா என்பவர். இவர் 'இதயக்கனி' படத்தில் மக்கள் திலகத்திற்கு ஜோடியாக நடித்த ராதா சலூஜாவின் தங்கை.

✣ கார்த்திக்-ரோஜா நடிக்கும் 'சந்தித்த வேளை' படத்தை இயக்கி வருகிறார் 'கண்ணெதிரே தோன்றினாள்' ரவிச்சந்திரன். இதனையடுத்து இவர் 'மஜ்னு' படத்தை பிரசாந்த் கதாநாயகனாக நடிக்கும் இயக்கவுள்ளார்.

✣ [illegible]

## பெயரில் தவறு

[illegible]



## அதே மனிதன்

'துறைமுகம்' உட்பட பல படங்களை இயக்கிய கே.ராஜேஸ்வர் கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கும் படம் 'அதே மனிதன்'.

லிவிங்ஸ்டன் கதாநாயகனாக நடிக்கும் இப்படத்தில் இவருக்கு ஜோடிகளாக மகேஸ்வரியும் புதுமுகம் லட்சுமியும் நடிக்கிறார்கள். இவர்களுடன் பானுபிரகாஷ், புதுமுகம் கௌதமி, ரமயாஞ்சல், ஸ்ரீதர், ரிஷிராஜ் போன்றோர் நடிக்கிறார்கள். ஆதித்யன் இசையமைக்கிறார்.

இப்படத்தின் படப்பிடிப்புக்கள் யாவும் சென்னையிலேயே நடைபெறுகின்றன.

## கண்ணுக்குள் நிலவு

'காதலுக்கு மரியாதை' படத்தை அடுத்து ஃபாசில் இயக்கத்தில் விஜய்-ஷாலினி ஜோடியாக நடிக்கும் படம் 'கண்ணுக்குள் நிலவு'.

'காதலுக்கு மரியாதை' படத்தில் விஜய்க்கு நண்பர்களாக நடித்த தாமுவும் சார்லியும் இப்படத்தில் ஷாலினியின் நண்பர்களாக நடிக்கிறார்கள். இன்னொரு நாயகியாக நடிக்கும் புதுமுகம் காவேரியும், ஷாலினியைப்போல் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமானவர்.

ரகுவரன், ஷாலினியின் தந்தையாகவும், ஸ்ரீவித்யா விஜய்யின் தாயாகவும் நடிக்கின்றனர்.

பெற்றோருக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வித்தியாசமான காதல் கதைதான் 'கண்ணுக்குள் நிலவு' படத்தின் கதைக்கரு. கௌதம் என்ற வேடத்தில் விஜய்யும், ஹேமா என்ற வேடத்தில் ஷாலினியும் நடிக்கிறார்கள்.

இளையராஜா இசையில் இனிமையான ஆறு பாடல்களை பழனிபாரதி எழுதியுள்ளார். தைப்பொங்கல் தினத்தன்று இப்படம் வெளியாகவுள்ளது.


## யாரடா நீ மன்மதா

பிரபுதேவா-புதுமுகம் ஷிவானி நடிக்கும் படம் 'யாரடா நீ மன்மதா'.

இப்படத்தில் கதை திரைக்கதை, வசனம் எழுதி இயக்குநராக அறிமுகமாகிறார் மாரிமுத்து. இவர் வஸந்த் மற்றும் 'வாலி' எஸ்.ஜே.சூர்யா ஆகியோரிடம் உதவி இயக்குநராக இருந்தவர்.

பிரபுதேவா-ஷிவானி ஜோடியுடன் ஆனந்த், வடிவேலு, விவேக், வையாபுரி, ராககதா ஆகியோர் நடிக்கிறார்கள்.

வைரமுத்துவின் பாடல்களுக்கு எஸ்.ராஜ்குமார் இசையமைக்கிறார்.



...ரமான நடிகரை வைத்து சொந்தமாகப் படமொன்றைத் ...ரித்து இயக்கி வருகிறார் அந்த நகைச்சுவை நடிகர். ...பிறை' நாயகியின் நாமகரணத்தை வைத்திருக்கும் ... சுற்றி வருகிறார் படத்தில் நீதான் ஹீரோயின் என்று ... வந்தவர். அந்த நடிகையைப் படத்தில் பயன்படுத்திக் ...ாமல் தனக்குப் பயன்படுத்தி வந்தார். இதனால் அந்த ... கொதித்தெழ, பெரிய தொகை ஒன்றைக் கொடுத்து ... அப்படியே அமுக்கி விட்டாராம்.

...ச நட்சத்திரத்தை வைத்து மாபெரும் வெற்றிப்படத்தை ... தாடி இயக்குநரின்மீது படுகோபமாக இருக்கிறாராம் ...ழகி நடிகை. அண்மையில் வெளியான 'கரண்ட்' ...கும் பெயர் கொண்ட படத்தில் புதுமுக நடிகை ...மீது அதிகமாக அன்பைப்பொழிந்து விட்டதால், ... டம்மியாக்கி விட்டாராம் இயக்குநர். தன்னை ...க்கியதால்தான் படம் சரியாக ஓடவில்லை என்று கூறி ...கிறாராம் நடிகை.

...ை 170க்கும் மேற்பட்ட படங்களுக்கு மேல் கதை எழுதி சாதனை ... இயக்கியுள்ளார். இவர் ... அடுத்து இயக்கவுள்ள ...


## ஆகாய ஜன்னல்

சூப்பர் குட் 'பிலிம்ஸ் சார்பில் மிகுந்த பொருட் செலவில் தயாராகும் புதிய படம் 'ஆகாய ஜன்னல்'. கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குநராக அறிமுகமாகிறார் குருஷங்கர். இவர் திரைப்படக் கல்லூரி மாணவர்.

உண்மைச் சம்பவம் ஒன்றை மையமாக வைத்து, முக்கோணக் காதல் கதையாக உருவாகிறது 'ஆகாய ஜன்னல்'.

விநுச்சக்கரவர்த்தி, ராஜீவ், செந்தில், குமரிமுத்து, 'வெண்ணிற ஆடை' மூர்த்தி, தாமு, வையாபுரி, சின்னி ஜெயந்த், 'ஒருதலைராகம்' சங்கர் ஆகியோர் நடிக்கின்றனர்.

இப்படத்தை சித்திரைப் புத்தாண்டில் வெளியிட திட்டமிட்டுள்ளார்கள்.



## "சிம்ரான் என்ன பெரிய கட்டழகியா?" சலிப்பாய்கிறார் கௌசல்யா

சிலகாலம் தமிழில் காணாமல் போயிருந்த கௌசல்யா இப்போது பல படங்களில் பிஸியாக நடித்து வருகிறார் படப்பிடிப்பு ஒன்றின் நடுவே அவர் அளித்துள்ள தடாலடியான பேட்டியில் இருந்து...

**கேள்வி: நீங்கள் நடிக்க வருவதற்கு முன் மாடலிங் செய்துகொண்டிருந்தபோது ஆண் மொடல் வினோத் சோப்ராவை காதலித்தீர்களாமே?**

**கௌசல்யா:** என்னக் கேட்டா அதை லவ்னு சொல்ல முடியாது. அந்த வயசுல வந்த இனக் கவர்ச்சி. நடிக்க வந்ததும் அத மறந்துட்டேன்.

**கே: உங்கள் வீட்டில் வருமான வரித்துறையினர் ஒருகோடி ரூபாயை எடுத்தது பற்றி...**

**கௌ:** சினிமாவுல கறுப்புப் பணங்கிறது ரொம்ப சாதாரணம். நான் சரியா கணக்குக் காட்டல. அதனால எனக்கு நஷ்டமாயிடுச்சு.

**கே: சிம்ரான் மாதிரி கவர்ச்சியான உடல்வாகு இல்லாததால்தான் நீங்கள் கவர்ச்சியாக நடிக்க மாட்டேன் என்கிறீர்களாமே?**

**கௌ:** சிம்ரான் என்ன பெரிய கட்டழகியா? அவர் கழுத்துக்கு மேல் உள்ளதை உங்களால் பார்த்து ரசிக்க முடியுமா? அத னால் தான் உடம்பைக் காட்டி நடிக்கிறார். அது அவங்க ...ண்டல். ...என்கிட்ட திறமை இருக்கு. எனக்கு அது மாதிரி நடிக்க வேண்டிய அவசிய மில்லை.

## கோடம்பாக்கம் மறுபக்கம் (131)

தமிழ்நாட்டிலிருந்து மயன்

## வாய்ப்புக் கேட்டு வாரி வழங்கும் நடிகை

[illegible]

### அழைப்பு விடுத்தார்

[illegible]

### நடிகையின் தாராளம்

[illegible]



சி
னி
வி
சி
ட்



## பொய் சொன்னார் பிரபு

சென்னையில் மிகவும் பிஸியான வீட்டு புரோக்கர் கிரி. அவரிடம் போய் எந்த வீடு வேண்டும் என்று சொன்னாலும் அந்த வீட்டை வாடகைக்குப் பிடித்துக் கொடுத்து விடுவார் கிரி.

அவரிடம் முஸ்லிம் வாலிபர் ஒருவர் வந்தார். குறிப்பிட்ட தெருவில் ஒரு வீடு வாடகைக்கு இருக்கு. அவர் பிராமின். நான் முஸ்லிம். அதனால் அவர் எனக்கு வீடு தர மறுக்கிறார். எனக்கு அந்த வீடு கிடைத்தால் என் குழந்தையைப் பள்ளிக்கு அனுப்ப சிரமம் இருக்காது. என்றார்.

நேரே அந்த வீட்டுக்குப் போனார் கிரி. அந்த பிராமின் ஒரு சாமியாரின் படத்தை வைத்துக் கும்பிட்டுக் கொண்டிருந்தார். உடனே கிரிக்கு ஐடியா பிறந்தது.

நீங்க இந்த சாமியாரை கும்பிடுறீங்க. ஆனா இந்த சாமியார் முக்தி அடையும் போது அவரோட இரண்டு கண்களையும் ஒரு முஸ்லிம் வாலிபருக்குக் கொடுத்தார். அந்த வாலிபர்தான் இவர். இவருக்குப் போய் வீடு இல்லைன்னு சொல்லிட்டீங்களே என்று கிரி சொல்ல, அந்த பிராமின் உடனே வீடு கொடுக்க சம்மதித்தார்.

இப்படியொரு காட்சி 'தைபொறந்தாச்சு' படத்திற்காகப் படமாக்கப்பட்டது. கிரியாக பிரபுவும், முஸ்லிம் வாலிபராக பாண்டுவும் நடிக்க கலைமணி இயக்கினார்.

## வஸந்த் இயக்கத்தில் அப்பு

இயக்குநர் கே.பாலச்சந்தரின் கவிதாலயா நிறுவன தயாரிக்கும் புதிய படங்களில் ஒன்று 'அப்பு.' இப்படத்தை பாலச்சந்தரின் சிஷ்யர் வஸந்த் இயக்குகிறார். கதை திரைக்கதை வசனமும் வஸந்த்தான்.

இதுவரை தோன்றாத புதிய கெட்-அப்பில் நாயகனாக நடிக்கிறார் பிரசாந்த். ரொமான்டிக் ஹீரோவாக வலம் வந்த பிரசாந்த் இப்படத்தில் ஒருவார கால தாடி, மீசையுடன், விடாது சிகரெட் பிடித்தபடி ஆக்ஷன் ஹீரோவாக அவதாரிக்கிறார்.

இதில் பிரசாந்திற்கு முதன் முறையாக ஜோடி சேர்கிறார் தேவயானி. இவர்களுடன் விக்னேஷ், தாமு, ரமேஷ் கண்ணா, 'வியட்னாம் வீடு' சுந்தரம், சவுகார் நடிக்கின்றனர்.

முற்றிலும் மாறுபட்ட வேடத்தில் பிரகாஷ்ராஜும் நடிக்கிறார்.

## தெலுங்கில் சாமி

அரவிந்தசாமி இதுவரை எந்தத் தெலுங்குப் படத்திலும் நடித்ததில்லை. இப்போது முதன் முறையாக ஒரு தெலுங்குப்படத்தில் நடிக்கவுள்ளார்.

அரவிந்தசாமி நடித்த பல படங்கள் தெலுங்கில் மொழிமாற்றப்பட்டு வெற்றிகரமாக ஓடியதால் அரவிந்தசாமியின் படங்களுக்கு அங்கு நல்ல வரவேற்பு.

இந்தத் தெலுங்குப் படத்தில் அரவிந்தசாமியுடன் 'ஹேராம்' படத்தில் காந்தியாக நடிக்கும் இந்தி நடிகர் நஸ்ருதீன் ஷாவும் நடிக்கிறார்.

## விஜய் இல்லை

விஜய்-சிம்ரான் இணைந்து நடித்த 'துள்ளாதமனமும் துள்ளும்' வெற்றிப்படத்தை இயக்கியவர் எழில்.

இதை அடுத்து இவர் மறுபடி விஜய்யுடன் இணைந்து 'பெண்ணின் மனதை தொட்டு' என்ற படத்தை ஆயத்தப் படுத்தினார்.

இடையில் என்ன நடந்ததோ தெரியவில்லை. இப்போது அந்தப் படத்தில் விஜய் நடிக்கவில்லை. விஜய்க்குப் பதில் பிரபுதேவா நடிக்கிறார்.

# தேன் கிண்ணம்

## இரண்டாயிரமாம் ஆண்டே!

அகில உலகே போரில் மூழ்கி
அடிமைகளாய் மக்கள் மாறி
அல்லல் வந்து அலைந்து திரியும்
அவலட்சணமான காலம் இது.

தொல்லை அகன்றிடுமோ...
கொடிய துன்பம் நீங்கிடுமோ...
மெல்ல விடிந்திடுமோ! -அமைதி
வந்து குலவிடுமோ...?

நாடு முழுக்க போரின் அகோரம்
நாட்டு மக்கள் மனதிலோ சோகம்
மகனை இழந்து! மகளை இழந்து!
மண்ணை இழந்து! மனையை இழந்து!
மாடாய் அலையும் மக்கள் வாழ்வில்
மங்கள நேரம் வருவதெப்போ?
இரண்டாயிரம் ஆண்டே உன்னைத்தான்
கேட்கின்றேன்!

இலங்கை மைந்தர் இரண்டாய்ப்பிரிந்து
இருளைப் போன்ற யுத்தம் புரிந்தால்
இளைத்துப் போன மக்கள் வாழ்வில்
இனிமை நேரம் வருவதெப்போ?
இரண்டாயிரம் ஆண்டே உன்னைத்தான்
கேட்கின்றேன்.!

வடக்குப் பகுதி வாடிப் போக
வனாந்தரம் எங்கும் ஓடி அலைந்து
வன்னியில் வாழும் மக்கள் வாழ்வில்
வசந்தகாலம் மலர்வதெப்போ?
போர்கள் ஓழிந்திடுமோ-அமைதி
புறாக்கள் பறந்திடுமோ...
போராடும் வீதிகளில்-நல்ல பூக்கள்
மலராதோ?
இரண்டாயிரமாம் ஆண்டே உன்னைத்தான்
கேட்கின்றேன்!

போரின் மடியில் உலகம் உறங்கி
போராட்டங்கள் எங்கும் நிறைந்து
போக்கிரித் தனங்கள் பொடியாய்
போகும் பொன்னான நாள் தான்
வருவதெப்போ?

அஸ்லம் ஸஜா, ஏறாவூர்.02.

## மறைந்து கிடக்கின்றது

நீ விழி மூடும் போதெல்லாம்...
என்னுள் இருள் கவிகின்றது.
உனது சிந்தனைவருவதால்தான்...
மனது சீர்திருத்தப் படுவதாய்
உணர்கின்றேன்!
***
வழிநடத்தலுக்காக..
வருத்தப்பட்ட போதெல்லாம்...
விழிகளால் ஒளி காட்டியவள் நீ!
***
வாழ்க்கையின் வளைவுகளை
ஆராயும்போதுதான்... உன்
ஆக்கிரமிப்பின் அகலம் தெரிகிறது.
***
என் இச்சைகள்
கொச்சைப் படுத்தப்படுமா?
என்ற ஏக்கத்தில்தான்;
என் காதல் மறைவிட மச்சமாய்;
மறைந்து கிடக்கின்றது!

வட்டு.சிவநேசன்.

## யாரால் உதவி?

கண்களுக்கு
வருத்தம் வந்தால்
கைகளால் உதவலாம்!
கைகளுக்கு
வருத்தம் என்றால்
கண்களால் என்ன
செய்ய முடியும்?
கண்ணீர்தான் சிந்த முடியும்!

அ.சாந்தி-முல்லை,
புதுக்குடியிருப்பு.



## வேற்றுமை

ஜனநாயகத்தின்..
ஜாதகத்தில்!
ஜாதிக் கொரு
ஜோதிடம்!
••
சோசலிசத்தின்...
சொசையிட்டியில்
சாதிக்கொரு
சர்விசஸ்!
••
குடியரசின்..
குடும்பத்திற்குள்ளும்!
குட்டிப்பிள்ளைக்கு
மிச்சமீதி!

நவாஸ் நிலாம்,
தொட்டவத்தை,
பாணந்துறை.



## வேண்டுகோள்

என்னைக் கடந்து
நீ
நடந்து போகையிலே
உன் காலில் குத்துவது
வெறும் முள்ளல்ல;
கண்ணே-என்
உயிர் மூச்சு...!
*
அதிலிருந்து
சிதறிவழிவது
வெறும்
செந்நீர் மழையல்ல;
என்
கண்ணீர் மழை.
*
உன் புண்ணை
நீ ஆற்ற
களிம்பு
பூசும்போதெல்லாம்
இங்கு என் நெஞ்சில்
வலியெடுக்கும்.
அதை ஆற்ற
நீ எத்தனிக்காதே!
என் நெஞ்சில்
உள்ள
என் காதலை
நான்
எப்போதுமே
புதிதாய் வைத்துக்
கொண்டிருப்பதைப்போல

'தாரா-நிலா',
கரம்பை-பாலாவி.

## வயற்காட்டுக் காவல்காரி

அவளது தலைமீது
குருவிகள் தங்கிச் செல்லலாம்;
அவளது தோள்மீதமர்ந்து
கிளிகள் சத்தமிடலாம்;
எனினும்,
பட்சிகளைப்
பயங்காட்டவே
ஓங்கிய தடியொன்று
அவளது கரங்களில்
தரப்பட்டிருக்கலாம்!
-*-
யாருடைய
விளை நிலமோ அது!
விதிமுறைகள் வேறில்லை-
அவள் காவல் புரிந்தாக வேண்டும்!
-o-
அவளிடம் இதயமில்லை!
அவளது விழிகளில்
ஜீவனில்லை!
ஓசைகள்-
அவளது செவிகளில்
விழுவதேயில்லை!

ஆனாலும்,
ஆடைகளும் அலங்காரங்களும்
மனிதப் படைப்பென்றுகாட்டவே
அவளுக்குச் சூடப்பட்டுள்ளன!
-o-
கொட்டும் மழையிலும்-அவள்
சிரித்துக் கொண்டிருப்பாள்!
எரிக்கும் வெயிலிலும்
இன்முகத்துடனே இருப்பாள்!
-o-
அவளது வேதனைகளை
வெளிக் காட்டும் படியாக
அவளின் முகக் கோலம்
அமைந்திருந்தால்,
காணுகின்ற கண்களிலெல்லாம்
கண்ணீர் வழியும்!
-o-
அவளுக்கு உருவினைத் தந்த
மனிதர்களின் நிம்மதிக்காக
புன்னகையெனும்
போலிக் கோலம்
அவளது முகத்தில்
தீட்டப்பட்டுள்ளது.
-o-
யாருமற்ற
அமைதியான இரவுகளில்,
நிலவின் மெல்லிய கிரணங்கள்
அவளை விசாரிக்க வந்து போகும்;
அவள் அண்ணாந்து
பார்த்ததேயில்லை!
நட்சத்திரங்கள்-
திசைகளையும்
வாழ்வின் திருப்பங்களையும்
ஓயாது சொல்லும்;
அவள் காது கொடுத்துக்
கேட்டதேயில்லை!
-o-
விடியலின் பூபாளம்
அவளைச் சுற்றியே எழும்;
அவள் வரவேற்றதேயில்லை!
-o-
இவர்களின் விதி முறைகள்
அவளை அசைய விடமாட்டாது!
-o-
அவளைத் தாங்கி நின்ற பூமியே!
அவளைப் பரிதாபமாய்ப்
பார்த்திருந்த வானமே!
அவளது மௌனமும்
ஒரு நாள் வெடிக்குமா?
குமுறுகின்ற எரிமலையாக...
அதிரவைக்கும் இடிமுழக்கமாக...
-o-

பஹீமா ஜஹான், மெல்சிரிபுர.

## புத்தாயிரமே!

இரண்டாயிரம் ஆண்டே!
உன்
வரவை எண்ணி
கணனி உலகமின்று
கதி கலங்கிப்
போயிருக்க
ஏழ்மை உள்ளத்தின்
எதிர் பார்ப்பாய்
நீ இருக்காய்!
•
வாழ்வில்
தொலைந்த வசந்தம்
மனதில்
இழந்த அமைதி
ஒன்றா.. இரண்டா?
அத்தனைக்கும்
முகவரியாய்
நீ திகழ;
•
புத்தாண்டாய்,
புது நூற்றாண்டாய்
புதுயுகமாய்
புது மணம் வீச
ஏழ்மை-எம்
உள்ளத்தின்
விருட்சமாய்-நீ
மலர்வாய்!

பதுர்நகரான்,
றுபான் ஏ.பாவா.

## பேனா நண்பர்கள்



பெயர்: எம். நவஜீவா,
வயது: 19
முகவரி: 26/7, புதுநகர்.
மட்டக்களப்பு.
பொழுது போக்கு:
பத்திரிகை,
தொலைக்காட்சி.



பெயர்: வி. சுமதி.
வயது: 17
முகவரி: 50/82,
சென்ட் நிக்கலஸ் வீதி.
முன்னக்கரை,
நீர்கொழும்பு.
பொழுது போக்கு:
பத்திரிகை, வானொலி.



பெயர்: பி. இந்திரன்,
வயது: 21
முகவரி:
203, 10668 138TH ST.
SURREY B.C., V3T 5T2
VANCOUVER, CANADA.
பொழுது போக்கு:
வழமையானவை.



பெயர்: எச். பாரீஸ்.
வயது: 22
முகவரி: P.O. BOX-2633
OEC COMPANY,
KHAMIS MUSHAYT,
K.S.A.
பொழுது போக்கு:
கிரிக்கெட்.

## இந்தவாரம் உங்கள் பலன்

02.01.2000 முதல் 08.01.2000வரை

ஜோதிடர் 'கர்னி'

**மேடம்:**
கிரக சமபலம் தொழில் தடைகளை நிவர்த்தி செய்யும். பண, பொருள் நண்பர் உதவிகளின் மூலம் கிடைக்கப் பெறும். வார இறுதியில் உறவினரின் இனிப்பான செய்திகள் கிடைக்கும். பிள்ளைகள், விருந்தினர்கள் வீடுதேடி வருவார்கள். அச்சுவினி, பரணி நட்சத்திரருக்கு சந்தோஷமான வாரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம் : இளமஞ்சள்; எண்: 5.
அதிஷ்ட திகதிகள்: 27, 31.

**இடபம்:**
சுக்கிரன், சிறப்பாக உள்ளதாலும் பார்வைஸ்தான பலனின் படியும் கிரகநிலை அமைப்புக்கள் நன்மையாகக் காணப்படுகின்றன. நோய், குடும்ப கஷ்டங்களை குறைத்துக்கொள்ளவதுடன் பலரின் சந்தோஷமான செய்திகள் மகிழ்ச்சியைத் தரும். கார்த்திகை ரோகினிக்காரர் சில நன்மைகளைப் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள்: செவ்வாய், சனி.
அதிஷ்ட நிறம்: இளம்பச்சை; எண்: 7.
அதிஷ்ட திகதிகள்: 29, 31.

**மிதுனம்:**
தொழில் நிலை தடைகள் நீங்கும். புதிய ஒப்பந்தக்காரர்களைக் கொடுத்து தொழில் நிலைவலுப்பெறும். பயண நிலை சிறிது அலைச்சலைக் கொடுக்கும். பணவரவு காணப்படும்.
திருவாதிரை நட்சத்திரருக்கு முன்னேற்றமான வாரமாகும்.
அதிஷ்டநாட்கள்: வியாழன், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: வெள்ளை; எண்: 2.
அதிஷ்ட திகதிகள்: 26, 29.

**கடகம்:**
தூரதேச விருந்தினர்கள் வரவும் சந்தோஷமான செய்திகளும் கிட்டும். சில நோய் துன்பம் சிறிது அளவில் வர முயலும். செலவுகள் இவ்வாரம் குறையும். ஆயிலிய நட்சத்திர குடும்ப பெண்கள் புதிய திட்டங்களில் வெற்றி பெறுவர்.
அதிஷ்ட நாட்கள் : சனி, புதன்.
அதிஷ்ட நிறம் : ஊதா; எண்: 9.
அதிஷ்ட திகதிகள் : 27, 29.

**சிம்மம்:**
புதிய சூழ்நிலை மாற்றமும் மனதில் சந்தோஷமும் பண உயர்வும் உள்ளன. வீடு, வாகன யோகமும் குடும்பத்தவர்கள் மகிழ்ச்சியும் வசதியாகக் காணப்படும். முன்னேற்றம் காணப்படும். மகநட்சத்திரர் யோகமான பலன்களை புதன்கிழமைகளில் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள்: புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: மண்ணிறம்; எண்: 5.
அதிஷ்ட திகதிகள்: 28, 1.

**கன்னி:**
குடும்ப உறவினர்களை விட்டுபிரிந்த நிலையும் மனப்பதற்றமும் கொடுக்கும். இழந்த சில பொருட்கள் திரும்பப் பெறுவார்கள். நோய் பிணிகள் குடும்பச் சச்சரவுகள் குறையும். அத்த, சித்திரை பெண்களுக்கு பயண வசதிகளை ஏற்படுத்த இருக்கின்றது.
அதிஷ்ட நாட்கள்: செவ்வாய், சனி.
அதிஷ்ட நிறம்: சாம்பல் வர்ணம்; எண்: 4.
அதிஷ்ட திகதிகள்: 27, 31.

**மகரம்:**
எதிலும் கவனமாக நடந்துகொள்ள வேண்டும். தொழில் நிலை சிக்கல்கள் தொடரும். பண நிலை, சிக்கலும் பொருட்கள் பறிபோன நிலையும் மன அங்கலாய்ப்பும் இருக்கும். திருமண விடயங்கள் பற்றிய முயற்சிகள் தொடரும். திருவோண நட்சத்திரர் சமபலன்களை பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், சனி.
அதிஷ்ட நிறம்: வெள்ளை; எண்: 3.
அதிஷ்ட திகதிகள்: 30, 3.

**துலாம்:**
புதிய எதிர்பார்ப்புக்கள். எடுக்கும் நடவடிக்கைகள் முன்னேற்றத்தைக் கொடுக்கும். முக்கிய செய்தி சந்தோஷப்படுத்தும். பண பொருள், ஆடை ஆபரணச் சேர்க்கைகள் அமையும். சுவாதி நட்சத்திர பெண்களுக்கு மிக முக்கிய செய்திகள் சந்தோஷத்தைத் தரும்.
அதிஷ்ட நாட்கள்: சனி, வெள்ளி.
அதிஷ்ட நிறம்: றோஸ்வர்ணம்; எண்: 1.
அதிஷ்ட திகதிகள்: 28,1

**விருட்சிகம்:**
உடலில் நோய்துன்பங்கள் குறைவடையும். எடுத்த கருமம் வெற்றியும் மனதில் சந்தோஷமும் ஏற்படும். புதிய முயற்சிகள் என்பனவும் இரும்பு சம்பந்தப்பட்ட பொருட்களின் சேர்க்கைக்கும் இடமுண்டு. குடும்பத்தில் முன்னேற்றமும் பிள்ளைகளின் பயண வெற்றியும் காணப்படும். கேட்டை நட்சத்திரருக்கு பெருமையான வாரமாகும்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: நீலம்; எண்: 5.
அதிஷ்ட திகதிகள்: 27, 30.

**தனுசு:**
திடீர் திருப்பங்கள் ஏற்படும். முயற்சிகளில் மாற்றமும் பயண நிலை அனுகூலமும் ஏற்படும். மனநிலை வளர்ச்சி காணப்படும். கல்வி, தொழில் நிலை சந்தோஷமாகத் தொடரும். சிம்மராசிக் காரரினால் உதவி இவ்வாரம் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள்: புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம்: இளமஞ்சள்; எண்: 6.
அதிஷ்ட திகதிகள்: 26, 30.

**கும்பம்:**
மனதில் அச்சமும் பயமும் காணப்படும். எடுத்த விடயங்களில் சுணக்கமும் பயண நிலைத் தேக்கமும் காணப்படுவதுடன் பணவிரயமும் ஏற்படும். எதிலும் கவனமாக இருந்தாலும் தோல்விகள் தொடர்ந்து வர சந்தர்ப்பம் உண்டு. அவிட்ட நட்சத்திரப் பெண்கள் அவமானமான தோல்விகள் ஏற்படப் பார்க்கும்.
அதிஷ்ட நாட்கள்: சனி, ஞாயிறு.
அதிஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு; எண்: 7.
அதிஷ்ட திகதிகள்: 26, 29.


**மீனம்:**
கல்வி உயர்வும், உயர்ந்த கௌரவ நிலையும் பெரியோர்களின் ஆசிர்வாதமும் கிட்டும். முயற்சிகளில் வெற்றிகிட்டும். பண நிலை வளர்ச்சியும் உண்டு. பெண்களுக்கு சந்தோஷமான நிலையும் காணப்படும். உத்திரட்டாதி நட்சத்திர பெண்களுக்கு திருமண வசதிகள் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : சனி, வெள்ளி.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண்: 5.
அதிஷ்ட திகதிகள் : 28, 30

## பெண்களுக்குப் பிடித்தவை

பெரும்பாலான பெண்களின் இதயம் கவர்ந்த கவர்ச்சியான ஆண்மகன் யார் தெரியுமா? ஸீன் கொனரி:

ஆம், நீங்கள் நினைப்பது சரிதான். அதே ஜேம்ஸ் பொண்ட் ஸீன் கொனரிதான். ஸீன் கொனரிதான் இந்த நூற்றாண்டில் அதிகமான பெண்கள் விரும்பிய கவர்ச்சியான ஆண்மகனாம்.

எல்லாப் பெண்களும் விரும்பும் இந்த முன்னாள் ஜேம்ஸ் பொண்டிற்கு வயது அதிகமில்லை. வெறும் 68 மட்டும்தான்.



ஸீன் கொனரிக்குப் பிறகு பெண்களுக்குப் பிடித்தமான வரிசையில் இரண்டாம் இடத்தைப் பிடித்தவர் பிரட் பிட் என்ற நடிகர். மூன்றாவது இடத்தைப் பிடித்தவர் மெல் கிப்ஸன், இவரும் ஹொலிவுட் நடிகரே.

சில மாதங்களுக்கு முன் நியூவுமன் (NEWWOMEN)என்ற ஆங்கிலப் பத்திரிகை நடத்திய வாக்கெடுப்புத்தான் இந்தத் தகவலைச் சொல்கிறது.

இதுமட்டுமா? வேறுபல விஷயங்களைப் பற்றியும் ஆராய்ச்சி நடத்தி இருக்கிறது இந்தப் பத்திரிகை. 16 ஆயிரம் வாசகர்களிடம் இந்த வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

உடலிலேயே முக்கியமான உறுப்பு இதயம்தான். இதற்கு 60 சதவீதமான வாக்குகள் கிடைத்தன. மூளைக்கு 25 சதவீத வாக்குகள். இதற்கடுத்து கண்களுக்குத்தான் அதிகமான வாக்குகள் கிடைத்தன.

பெண்களுற்கு ஆண்களிடம் பிடிக்காதவை, இவை:

1. ஆண்களின் அராஜகம்.
2. ஈகோ
3. சுயநலம்
4. திமிர்
5. மரியாதையின்மை

எந்தமாதிரியான ஆண்களைப் பெண்களுக்குப் பிடிக்கும் தெரியுமா?

நகைச்சுவை உணர்வு நிரம்பிய ஆண்களைப் பார்த்தால் பிடிக்குமாம். இந்த வாக்கெடுப்பில், அதிகமாக பெண்களுக்குப் பிடித்தவர்கள் டெனிம் ஜீன்ஸ் போட்ட ஆண்கள்தானாம். ஏனெனில் அவர்கள்தான் கவர்ச்சியானவர்கள் என்பது அவர்களின் கருத்து.

வேலைஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

# ஆரோக்கியமான குழந்தையின் அடையாளங்கள்

ஆரோக்கியமான குழந்தையின் முதல் பதினைந்து மாதங்கள்

### 1-வது மாதம்

குழந்தை தலையை நிமிர்த்தும். வாய் உதட்டை மடிக்கும். நெற்றியைச் சுருக்கும். அசையும், வெளிச்சத்தை அதன் கண்கள் பின் தொடர்ந்து செல்லும். 6வது வாரத்தில் குழந்தை புன்னகை செய்யும். சில குழந்தைகள்



2 மாதங்களுக்குப் பிறகுதான் புன்னகை செய்யும்.

### 2-வது மாதங்கள்

குழந்தை 'காகூ' என்று சத்தமிடும். உண்மையான கண்ணீர் விடும். சத்தம் வரும் இடத்தை நோக்கித் தலையைத் திருப்பும். கண்ணைத் திறந்து மூடும்.

### 3 வது மாதங்கள்

குழந்தை, புரளும், நழுவும், தடியோ வேறு பொருளோ கொடுத்தால் பற்றிப் பிடிக்கும்.

### 4-வது மாதங்கள்

இதுவரை மாறி மாறிச் சரிந்து வந்த தலை இப்போது உறுதியாகும். அதன் தசை நார்கள் முன்னிலும் பார்க்க முறுக்கேறும். பொருளை எடுக்க முயற்சிக்கும். உணவு உட்கொள்ளும் நேரத்தில் விளையாட விரும்பும், கால்களால் வேகமாக உதைக்கும்.

### 5-வது மாதங்கள்

பழக்கமான ஆட்களை குழந்தை அறிந்து கொள்ளும். கூச்சமும் கொள்ளும்.

### 6-11 மாதங்கள்

இக்காலத்தில் அதிக முன்னேற்றங்கள் காணப்படும். குழந்தை சிரிக்கும். கைக்கெட்டிய பொருள்களை அடித்து உடைக்கும். அடித்து உடைக்கும் சத்தம் எவ்வளவுக்குப் பெரிதோ அவ்வளவுக்கு சந்தோஷமடையும். தன் பாதங்களையும் பிடித்து விளையாடும். 8 மாதங்களில் அது உட்கார்ந்திருக்கும். சில நேரங்களில் தவழத் தொடங்கும்.

### 12-வது மாதங்கள்

இவ்வயதில் யாரையும் பிடித்துக் கொண்டு குழந்தை நிற்கும், பல வார்த்தைகளில் பேசும்.

### 15-வது மாதங்கள்

இப்போது குழந்தை தானாக நடக்கும். தானாக குடிக்கும். தன் பெயரையும் அறியும். பாரமான பிள்ளைகள் நிற்கவோ நடக்கவோ நாட் செல்லும். அவர்களை வில்லங்கமாய் நிறுத்தக்கூடாது. அப்படிச் செய்தால் அவர்களின் கால்கள் வளையக்கூடும்.

பல்முளைக்கும் காலம் வித்தியாசமாயிருக்கும். முதல் பற்கள் 6-9 மாதங்களில் அதிகமாக முளைக்கும். 21 வயது வந்ததும் முதல் வரிசையான 20 பற்களும் முளைத்து விடும்.

# அழகாக இருக்க ஆலோசனைகள்



உங்களுக்குப் பிடித்த உணவை நீங்கள் சாப்பிடலாம் ஆனால் அவற்றை அளவாகச் சாப்பிடுங்கள்.

பதார்த்தம் வீணாகிவிடும் என்று நினைக்காமல் விருந்தில் அளவை மீறாமல் சாப்பிடுங்கள்.

சாப்பாட்டுக்கு நடுவே நொறுக்குத் தீனி சாப்பிடும் வழக்கத்தைக் கைவிடுங்கள். அவை தேவையில்லாதவை. தொடர்ந்தும் உங்கள் ஜீரண உறுப்புக்களுக்கு வேலை கொடுப்பவை.

தினமும் தேகப்பயிற்சி அவசியம். காலையிலும் மாலையிலும் இரண்டு மைல் தூரம் காலாற நடக்கலாம். இது எந்த வயதிலும் மேற்கொள்ளகூடிய பயிற்சி.

கொழுப்புச்சத்து மிகுந்த உணவுப் பண்டங்களை உட்கொள்ளாதீர்கள். இனிப்பு வகைகள், கிழங்குகள் சேர்ந்த மசாலா எண்ணெயில் பொரித்த பண்டங்கள், வெண்ணெய், சீனி ஆகியவற்றில் செய்த 'கேக்' போன்றவை உங்களிடம் நீட்டப்படும்போது "வேண்டாம்!" என்று மறுத்துவிடுங்கள்.

பசி இல்லாதபோது சாப்பிடாதீர்கள். வேளா வேளைக்கு நேரம் தவறாமல் சாப்பிடுங்கள். சாப்பிடுவதை நிதானமாக ருசித்துச் சாப்பிடுங்கள். அப்போது சாப்பிடும் அளவும் குறையும்.

காலைச் சிற்றுண்டியை நன்கு சாப்பிடுங்கள். மதிய உணவை நன்றாகச் சாப்பிடுங்கள். இரவு நேரத்தில் குறையுங்கள்.

அடிக்கடி கோப்பி, பால் சேர்த்த பானத்தை அருந்தாமல் கீரை வகைகள், தக்காளி, கரட், வேகவைத்த கறிகாய் சாப்பிடுங்கள், தயிர், பால், பருப்பு, வகைகளைக் குறையுங்கள்.

பொதுவாக உடம்பை நோய் நொடி இல்லாமல் வைத்துக் கொள்ள முயலுங்கள். இரண்டு வேளையும் அழுக்குப் போகக் குளித்து சருமத்தை சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள்.

அழகாக இருக்க இதுதான் காரணம். இனிமேல் நீங்கள் எந்த வயதில் இருந்தாலும் அழகாகிவிடலாம்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்



மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** GV

பெயர்:....................

முகவரி:....................

....................

தொழில்:....................

கையொப்பம்:....................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 08-01-2000

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


வழங்குவது புவனா 19

# மோனிக்கா என் மோனிக்கா

மோனிக்காவின் இதயத்துடிப்பு அதிகரித்துக் கொண்டிருந்தது. சற்றுத் தூரத்தில் நின்று தன்னுடன் உரையாடிக் கொண்டிருந்த கிளின்ரன், மோனிக்காவைக் கண்டதும் தனது கண்களைச் சிமிட்டினார். மோனிக்கா புன்னகை புரிந்தாள். அந்தரங்க சேவை அதிகாரி லுயிஸ் ஃபொக்ஸ், ஜனாதிபதியின் அருகில் சென்றார். அவருடைய காதில் கிளின்ரன் ஏதோ குசுகுசுத்தார். லுயிஸ் ஒரு சலாம் போட்டு விட்டு கனவேகமாக நடந்தார்.

மெய்காப்பாளர்கள் நால்வர் ஆயுதங்களை ஏந்தியவர்களாக எட்டத்திலேயே நின்றனர். கிளின்ரன் இதோ மோனிக்காவின் முன்னிலையில் நின்றுகொண்டிருந்தார். அவருடைய முகத்தை நேருக்கு நேர் நிமிர்ந்து பார்க்க அப்போது மோனிக்காவால் முடியவில்லை. மெதுவாக வந்தனம் கூறிவிட்டு "நான் தான் மோனிக்கா லிவின்ஸ்கி வெள்ளை மாளிகைப் பயிற்சிப் பணியாளர்!" என்று தனது வலது கையை கிளின்ரன் முன் நீட்டினாள். கிளின்ரன், "எனக்குத்தான் உன்னை நன்றாகத் தெரியுமே! இரண்டாவது தவணையும் இங்கு பணிபுரியப் போகிறாய்! எனது வாழ்த்துக்கள்! லக்கி கேர்ள்!" என்று கூறிவிட்டு அவளுடைய இடது தோளின் பின்புறம் செல்லமாக இரு முறை தட்டினார்.

### ஏமாற்றம் ஒன்று

அதற்கு மேல் அவரால் அங்கு நிற்கமுடியவில்லை. மிக வேகமாக நடந்து மறைந்தார். மீண்டும் தன்பக்கம் திரும்புவார், கையை உயர்த்திக் காட்டலாம் என்று மோனிக்கா கருதினாள். ஏமாற்றம்தான். முன்புபோல் அவர் இம்முறை- ஒரு தடவைதானும் அவளைத் திரும்பிப் பார்க்காமல் போய் மறைந்துவிட்டார்.

# ஏமாற்றங்கள்



மோனிக்காவின் இதயம் வெடித்து விடும் போலிருந்தது. கிளின்ரனுக்கு தன்மீது நாட்டம் எதுவுமில்லை. என்று அவள் மனம் உறுத்தியது. 'தனிமையில் இருவரும் சந்திக்கக்கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி அவர் இன்னும் சிறிது நேரம் என்னுடன் உரையாடியிருக்கலாமே? அவருக்கு அக்கறையிருந்திருந்தால் அவ்வாறு செய்திருப்பார்! என்று எண்ணினாள்.

தன் உடல் அமைப்பின் மீதே அவளுக்கு வெறுப்பு ஏற்பட்டது. அவளுடைய வயிறு பழையபடி சற்றுப் பருத்துவிட்டது. அதேபோல் ஏனைய பாகங்களும் பருத்தே காணப்பட்டன. தன்னையே நொந்து கொண்டாள். கிளின்ரன் சற்று முன்னர் இரு பெண்களுடன் பேசிக் கொண்டு நின்றபோதே, அவர் அருகில் வரும் போது தனது வயிற்றை எக்கி உள்ளிழுத்து விடவேண்டும் என்று தனக்குள்ளாகவே திட்டமிட்டிருந்தாள். ஆனால் கிளின்ரன் அவளருகில் வந்ததும் அந்த எண்ணத்தையே மறந்து விட்டாள்.

தான் எதிர்பார்த்த அந்த அரிய சந்தர்ப்பம் பலனளியாமல் நழுவிவிட்டமைக்காக அவள் உள்ளம் வெதும்பியது. உடனடியாக அவள் எண்ணங்கள் அண்டி பிளேய்லரை நாடிப் பறந்தது. இந்த ஏமாற்றத்துக்கு உடனடி நிவாரணம் வேண்டுமானால், அதற்கு அவளுக்கு பிளேய்லரின் அரவணைப்புத்தான் தேவைப்பட்டது.

அப்போது மோனிக்காவுக்கு 22 வயது நடந்து கொண்டிருந்தது. தான் இன்னும் சிறுபிள்ளையல்ல; தனது எதிர்காலத்தையிட்டுத் தீர்க்கமான முடிவுக்கு வந்தாக வேண்டும் என்று தீர்மானித்தாள். பட்டமேற்படிப்பை மேற்கொள்வதற்காக 1995 ஒக்டோபர் மாதம் நடைபெறவிருந்த GRF பரீட்சைக்குத் தோற்றுவதற்கான ஏற்பாட்டைச் செய்தாள். இதற்காக வெள்ளை மாளிகையில் இரு வார விடுப்புப் பெற்றாள்.

இதற்கிடையில் பிளேய்லரின் எண்ணங்கள் அவளை வாட்டி வதைத்தன. அவனை எப்படியாவது ஒரு தடவை காண வேண்டும் என்று துடிப்பு அதிகரித்தது. ஒரேகனுக்குப் புறப்பட்டாள்.

### ஏமாற்றம் இரண்டு

அங்கு சென்றதும் அவள் இதயமே வெடித்து விடும் போலாயிற்று. ஆண்டி பிளேய்லர் முன்பு போல் மோனிக்காவுடன் நெருக்கமாகப் பழகத் தயங்கினான். "நான் மிக மோசமான குற்றம் புரிந்து விட்டேன்!" என்று அடிக்கடி கூறினான். வேறு ஏதோ மோசமான தவறு செய்து விட்டானோ என்று கருதிய மோனிக்கா அவனைத் தேற்ற நினைத்தாள். ஆனால் பிளெய்லர், மோனிக்காவுடன் ஏற்கனவே தொடர்பு வைத்துக் கொண்டதே தவறு என்று கூறத்தலைப்பட்டதும், மோனிக்கா துடிதுடித்துப் போனாள். கண்களிலிருந்து பெருக்கெடுத்த கண்ணீரை அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை.

தனது மனைவி பிள்ளைகளுடன் வாழவே தான் விரும்புவதாக அவன் மோனிக்காவிடம் கூறினான். பிளேய்லருக்கு போட்லண்ட் காண்டி உயர்நிலைப் பள்ளியில் வேலை கிடைத்திருந்தது. தனக்குத் தெரிந்த சிலரிடமிருந்து பெற்ற தகவலின்படி, பிளேய்லர் அப்பள்ளி உயர் வகுப்பு மாணவி, ஒருத்தியுடன் தொடர்பு வைத்திருப்பதாகத் தெரிய வந்தது.

மோனிக்காவின் வாழ்க்கையே அஸ்தமித்துவிட்டது போன்றிருந்தது. வாஷிங்டன் திரும்பு முன்னர், பிளேய்லர் பணிபுரிந்த உயர் நிலைப்பள்ளி சென்று, அவனுடன் தொடர்பு வைத்திருந்த அந்த மாணவியைக் கண்டாள். உண்மையில் அவள் மோனிக்காவைப் போலல்லாமல், மெலிந்த தோற்றமுடையவளாகவிருந்தாள். அழகாகவும் இருந்தாள். பிளேய்லர் தன்னை வெறுப்பதற்குக் காரணம் தனது உடலமைப்புத்தான் என்று தனக்குள்ளேயே முடிவு கட்டினாள். இதனால் மேலும் அவள் வேதனையடைந்தாள்.

நேராக பிளேய்லர் பணிபுரியும் பகுதிக்குச் சென்று அவனுடன் சிறிது நேரம் சாதாரணமாக உரையாடினாள். சிறிது சிறிதாக அவளுடைய வார்த்தைகள் சூடேறின. சற்று நேரத்தில் அந்தக் கட்டடமே அதிரும்படி கூக்குரலிட்டு பிளெய்லரைத் திட்டித் தீர்த்தாள். அவனுடைய சேட்டைப் பிடித்து உலுக்கினாள். பள்ளியிலுள்ள பலரும் வந்து அவளைக் கட்டுப்படுத்த முயன்றும் முடியவில்லை. பள்ளி அதிபர் பொலிசாரை அழைக்க முற்பட்டபோது, பிளேய்லர் மோனிக்காவை அணைத்துக் கொண்டு அக்கட்டடத்தை விட்டு வெளியேறினான்.

அன்று மாலையே மோனிக்கா வாஷிங்டன் புறப்பட்டு தாயாரின் வீட்டை அடைந்தாள். அப்போது அவளுக்கு அமைதி திரும்பியிருந்தது. தனது அறைக்குச் சென்று படுக்கையில் புரண்டு சிறிது நேரம் அழுது தீர்த்தாள்.

### முக்கியமான தகவல்

அடுத்த நாட்காலை எழுந்ததும் தனது தொலை பேசியுடன் இணைக்கப்பட்டிருந்த 'பேஜர்' என்ற தகவல் பதிவுக் கருவியை முடுக்கி விட்டாள். அவள் இல்லாத காலத்தில் அவளுக்கு வந்த தொலைபேசித் தகவல்களை அந்தச் சிறு சாதனம் பதிவு செய்து வைத்திருந்தது. அதிலடங்கியிருந்த செய்திகளில் பிரதானமான தகவல் ஒன்று பதிவாகியிருந்தது.

வெள்ளை மாளிகை ஊழியர்களுக்குப் பொறுப்பதிகாரியின் பிரத்தியேக உதவியாளரான ஜென்னிஃபர் பால்மியர் என்பவரிடமிருந்து அச் செய்தி வந்து பதிவாகியிருந்தது.

வெள்ளை மாளிகையில் இரண்டாவது தவணைப் பயிற்சிப் பணிக்காக மோனிக்கா தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டதாகவும், அரசியல் நிர்வாகப் பிரிவின் பிரதம இயக்குநரும் அதிபரின் சிறப்பு உதவியாளர்களில் ஒருவருமான ரிம் தீட்டிங் என்பவரிடம் மோனிக்காவின் பெயர் சிபார்சு செய்யப்பட்டிருப்பதாகவும் அத்தகவல் மேலும் தெரிவித்தது. வெள்ளை மாளிகை ஊழியர்களைத் தேர்ந்தெடுத்து வேலைக்கு அமர்த்தும் பொறுப்பில் அவர் இருந்தார். அதே போல் வேண்டப்படாதவரை உடனடியாக விலக்கி வைப்பதும் அவருடைய பணியாகும்.

(வருவாள்)

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
## கந்தப்பளை வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | திருமதி. எஸ். ரமணி, மே.பா/ மெதடிஸ்த த.ம. வித்தியாலயம், கந்தப்பளை. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


## அம்மன் ஜுவல்ஸ்-முரசு இணைந்து வழங்கும்

### வைரமோதிரப் போட்டியில் வெற்றிபெற்ற அதிஷ்டசாலி

சிவாஜினி மகாலிங்கம்
முகவரி: 88, மேய்ஃபீல்ட் தெரு,
கொழும்பு-13.

அதிஷ்டசாலியான சிவாஜினி மகாலிங்கம் அவர்களை அம்மன் ஜுவல்ஸ் மற்றும் முரசு வாசகர்கள் சார்பில் வாழ்த்துகிறோம்.





**சக்தி தனக்கே உரிமையாக்கு– அது**
**சக்திவந்து கோட்டைகட்டி வாழும்–**
**சித்தம்**
**சக்தி தனக்கே உரிமையாக்கு–அது**
**சக்தியருட் சித்திரத்தில் ஆழும்.**
**–சுப்பிரமணிய பாரதியார்.**

## பாப்பா முரசு சிறுகதை

# நல்ல தீர்ப்பு

ஓர் ஊரில் ஒரு பெரும் செல்வந்தர் இருந்தார். அவருக்கு ஒரு மகன் இருந்தான். ஆனால் அவன் சிறுவன்.

செல்வந்தருக்கு வயதாகி விட்டதால், தான் சேர்த்து வைத்திருந்த பத்தாயிரம் பொற்காசுகளைத் தனது நண்பரான நாராயணசாமியிடம் கொடுத்து,

"என் மகன் வளர்ந்து பெரியவனானதும் இந்தப் பணத்தில் உனக்கு விருப்பமானதை என் மகனிடம் கொடுத்து விடு," என்று சொன்னார். அதன்படி ஒரு பத்திரத்தையும் எழுதி அதை மகனிடம் கொடுத்தார்.

சில நாட்களின் பின் அந்த வயதான செல்வந்தர் இறந்துவிட்டார்.

பத்து ஆண்டுகள் சென்றதும் செல்வந்தரின் மகன் வளர்ந்து பெரியவனானான்.

தனது தந்தை இறப்பதற்கு முன் எழுதிக் கொடுத்த பத்திரத்தை எடுத்துக் கொண்டு நாராயணசாமியிடம் சென்றான் செல்வந்தரின் மகன்.

செல்வந்தரின் மகனைக் கண்ட நாராயணசாமி அவனை அழைத்து, ஒன்பதாயிரம் பொற்காசுகளைத் தன்னிடம் வைத்துக்கொண்டு மீதி ஆயிரம் பொற்காசுகளை செல்வந்தரின் மகனிடம் கொடுத்தார்.

"ஐயா! என் தந்தை உங்களிடம் பத்தாயிரம் பொற்காசுகளைத் தந்ததாகச் சொன்னார். நீங்கள் ஆயிரம் பொற்காசுகளை மட்டுமே எனக்குத் தருகிறீர்களே?" என்று கேட்டான் செல்வந்தரின் மகன்.

அதற்கு நாராயணசாமி,

"எனக்கு விருப்பமானதை மட்டும் உன்னிடம் கொடுக்கும்படி உன் தந்தை எனக்குச் சொன்னார். அப்படித்தான் பத்திரத்திலும் எழுதியிருக்கிறது. அதன்படி எனக்கு விருப்பமான ஆயிரம் பொற்காசுகளைக் கொடுத்து விட்டேன்!" என்றார்.

இதைக் கேட்டுக் கோபமடைந்த செல்வந்தரின் மகன் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தான்.



செல்வந்தரின் மகன் தன்னிடம் இருந்த பத்திரத்தை நீதிபதியிடம் கொடுத்து தன் பக்க நியாயங்களைக் கூறினான்.

நாராயணசாமியும் தன் பக்க நியாயங்களைக் கூறினார்.

சில நிமிடங்கள் யோசித்த நீதிபதி நாராயணசாமியிடம்,

"உமக்கு விருப்பமானதைத்தானே மகனிடம் கொடுக்கும்படி செல்வந்தர் சொன்னார்," என்று கேட்டார்.

"ஆமாம் அதில் என்ன சந்தேகம்? என்றார் நாராயணசாமி.

"அப்படியானால் உமக்கு விருப்பமான ஒன்பதினாயிரம் பொற்காசுகளைச் செல்வந்தரின் மகனிடம் ஒப்படைத்து விடும்!" என்று தீர்ப்புக் கூறினார் நீதிபதி.

வேறுவழியின்றி நாராயணசாமியும் ஒன்பதினாயிரம் பொற்காசுகளை நீதிபதியின் மகனிடம் ஒப்படைத்தார்.

## அதிசயம் – ஆனால் உண்மை!



இனிய குரலுக்கும் சத்துள்ள முட்டைக்கும் பிரசித்தி பெற்றது ஜப்பானிய கௌதாரி. தென்சீனாவில் உள்ள மக்கள் குளிருக்கு இதமாக இருக்க இப்பறவைகளைத் தமது உள்ளங்கைகளில் வைத்திருப்பார்கள்.



பல அடி நீளமாக இருக்கும் இப்பூவின் பெயர் நீர்க்கோழிப்பூ. இது உருவத்தில் நீர்கோழியைப் போன்று இருப்பதால்தான் இதற்கு இந்தப் பெயர்.

பிரேஸில் நாட்டில் உள்ள 'கோலாக் செனஸ் விட்டில்' என்ற வண்டு, எறும்புப் புற்றில் நுழைந்தால் இதற்கு அமோக மரியாதை. காரணம் இதன் மயிர் நிறைந்த இறகுகளின் ஒவ்வொரு மயிரில் இருந்தும் சுவையான தேன் கொட்டிக் கொண்டிருக்கும்.



## முதலில் தோன்றியது

கிறிஸ்தவ ஆலயங்களில் மெழுகுவர்த்தி ஏற்றி வைத்து வணங்கும் முறை முதன் முதலில் ஜெர்மனியில்தான் தோன்றியது.

ஜெர்மனியர்கள் தான் கிறிஸ்துமஸ் தினத்தன்றும், புத்தாண்டு தினத்தன்றும் மெழுகுவர்த்தி ஏற்றித் தேவாலயங்களில் வணங்கினார்கள்.

அதன் பின்னர்தான் எப்போது தேவாலயத்திற்குச் சென்றாலும் மெழுகுவர்த்தியுடன் செல்லும் பழக்கமாக உலகம் முழுவதும் மாறிவிட்டது.



## ஏன் தெரியுமா?



சளி பிடித்திருக்கும் போது எம்மால் பொருட்களின் மணங்களை நுகர முடிவதில்லை. இது ஏன் தெரியுமா?

சளி பிடித்திருக்கும் போது மூக்கில் உள்ள நுகர்ச்சிக் கலங்களின் மேலுள்ள சிலேட்டுமப் படலத்தின் மேல் சளி படிந்திருப்பதன் காரணமாக காற்றில் கலந்துள்ள மணம் கலங்களின் உணர்வுகளில் பதிவதில்லை.

இதன் காரணமாகத்தான் சளி பிடித்திருக்கும்போது எம்மால் பொருட்களின் மணத்தை நுகர முடிவதில்லை.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **08.01.2000.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **325**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 323

பரிசுக்குரியவர்:
பாத்திமா நுஸ்ஹா,
மட்/அறபா வித்தியாலயம், ஏறாவூர்.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| வை. சியாட்,<br>அநு/நேகம முஸ்லிம் மகா. வித்.,நேகம்பஹ. | தர்சனி தனகோபால்,<br>புனித அன்னம்மாள் ம.ம. வித்தியாலயம், கொழும்பு-13. |
| சியாமினி கந்தசாமி,<br>புனித அன்னம்மாள் த.ம.வி., விவேகானந்தா வீதி, கொழும்பு. | நவேந்திரன் விஜயலெட்சுமி,<br>சந்தை வீதி, கோட்டைக்கல்லாறு-01. |
| பா. அபராதிதன்,<br>மகிழவட்டவான் ம.வி., ஆயித்தியமலை, செங்கலடி. | கே.டி. ஸப்ரீன் மொஹமட்,<br>மஹவெல முல்ல முஸ்லிம் வித்தியாலயம், வெள்ளவாய. |
| தர்மிக்கா தர்மதாஸ்,<br>புனித சவேரியார் பெண்கள் கல்லூரி, மன்னார். | எம். சபான் ஜவாஹிர்,<br>ஸாஹிரா தேசிய பாடசாலை, மாத்தளை. |
| பாத்திமா நிஷ்மா நஜீம்,<br>ஒக்ஸ்போட் சர்வதேச பாடசாலை, பலாங்கொடை. | ஜனனிப்பிரியா மோகன்,<br>ஸ்ரீ முத்துமாரி அம்மன் தமிழ் வித்தியாலயம், கம்பளை. |

## விடுகதைகளும் விடைகளும்

1. விளக்கோடு பிறந்தவன், வெளிச்சத்தில் பறந்தான். அவன் யார்?
2. மஞ்சள் உறைக்குள் இருப்பவன், பசிக்கு அமுதாவான். அவன் யார்?
3. பச்சைப் புல்லில் துவண்டு வரும், பவளம் போல் உருண்டு வரும். அது என்ன?
4. நாக்கில்லாதவன் நாலு விஷயம் சொல்வான். அவன் யார்?
5. மரத்துக்கு மேலே பழம், பழத்துக்கு மேலே மரம். அது என்ன?
6. பூமியிலே பிறக்கும், புகையாகிப் போகும். அது என்ன?
7. வெள்ளைக்காரன் தொப்பி வெளுத்திருக்கும், அதிலே ஒரு செடி துளிர்த்திருக்கும். அது என்ன?
8. இருட்டு வீட்டுக்கு முரட்டுக் காவலாளி. அது என்ன?
9. பூட்டுச் சாவி இல்லாத பெட்டி, காசு கொடுத்து வாங்கும் பெட்டி. அது என்ன?
10. பார்த்தால் பச்சை, புசித்தால் கசப்பு. அது என்ன?

### விடைகள்

1. மின்மினிப்பூச்சி 2. வாழைப்பழம்
3. பனித்துளி 4. புத்தகம்
5. அன்னாசிப் பழம் 6. பெட்ரோல்
7. முள்ளங்கி 8. பூட்டு
9. தீப்பெட்டி 10. பாகற்காய்.

## பாடும் பறவைகள்



- வானம்பாடிகள் மற்ற எல்லாப் பறவைகளையும்விட நன்கு இசையெழுப்பிப் பாடவல்லது. ஜக்டாஸ், மேக்பீஸ் போன்ற பறவைகள் கிளிகளைப் போல் பேசிப் பாடக்கூடியவை.
- அமெரிக்காவில் உள்ள போலிமை பறவை பலகுரல் ராணியாகும். நாய், பூனை, கோழிக்குஞ்சு போல் குரலெழுப்பும்.
- தென் அமெரிக்கா, ஆபிரிக்காவில் வாழும் மணிப்பறவையின் பாட்டோசை மூன்று மைல் தூரத்திற்குக் கேட்கக் கூடியது.
- வட கடல் ஓரங்களில் காணப்படும் 'சிவப்பு மார்பு டைவர்' குழந்தை அழுவதைப் போல் குரலெழுப்பும்.
- ஐரோப்பிய தேன் சிட்டுக்களும், அவுஸ்திரேலிய லயர் பறவைகளும் பாட்டொலி எழுப்புகின்றன.


## தண்ணீர் சேமிப்பு



அவுஸ்திரேலியாவின் மலைப்பகுதிகளில் காணப்படும் ஒருவகை ஓணான்கள் தண்ணீர் பருகுவதே கிடையாது. இதன் தோலில் தேங்கியிருக்கும் நீரே இதன் தண்ணீர்த் தேவையைக் கவனித்துக் கொள்கிறது.



மடகாஸ்கர் தீவில் நம்மூரில் உள்ள பனைமரங்களைப் போன்ற சாயலில் ஒரு மரம் உள்ளது. இதன் பெயர் 'ட்ரவலர்ஸ் ட்ரீ'. இந்த மரத்தின் மட்டைக்கு ஒவ்வொரு உட்புறமும் உள்ள பொந்தில் தண்ணீர் சேமித்து வைக்கிறது. தேவையானபோது இந்த நீரை மரம் பயன்படுத்திக் கொள்கிறது.



ஒட்டகத்தால் பல நாட்கள் தண்ணீர் பருகாமல் இருக்க முடியும். ஏனென்றால் அதன் திமிலில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் கொழுப்பு, தண்ணீர் பருக முடியாத நேரங்களில் கரைந்து தண்ணீர் தேவையைக் கவனித்துக் கொள்கிறது.

## நல்ல மொழிகள்

- தற்பெருமை எங்கு முடிவடைகிறதோ, அங்குதான் ஒழுக்கம் தொடங்குகிறது.
- விவேகத்திற்குத் தந்தை; நினைவாற்றலுக்குத் தாய்.
- இலட்சியம் இல்லாத மனிதன் திசையறி கருவி இல்லாத கப்பலுக்கு ஒப்பானவன்.
- மரத்தின் தன்மை அதன் கனியைக் கொண்டுதான் அறியப்படுகிறது.
- எல்லோரையும் நேசிக்கலாம். ஆனால் ஒரு சிலரைத்தான் சிநேகிக்கலாம்.
- பழக்கங்களை நாம்தான் உண்டாக்கிக் கொள்கிறோம். ஆனால் அவை நம்மை அடிமையாக்கி விடுகின்றன.

## திக் திக் தொடர்

# சிகப்பு வணக்கம் 07

## க்ரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்

டாக்டர் பக்தவத்சலம் சொன்னதைக் கேட்டு, பொலிஸ் கமிஷனர் லட்சுமிபதி உள்ளுக்குள் கலவரப்பட்டுப் போனாலும் அதை வெளிக்காட்டிக்கொள்ளாமல் மெல்லச் சிரித்தார்.

"டாக்டர்...! இது மாதிரியான ஃபோன் மிரட்டல்களையெல்லாம் பொருட்படுத்தாதீர்கள். பொலிஸ்துறையைப் பதற்றப்பட வைக்க வேண்டும் என்கிற ஒரே ஒரு நோக்கத்திற்காகத்தான் இது மாதிரியான டெலிஃபோன் மிரட்டல்கள் செய்யப்படுகின்றன. கிரிக்கெட் போர்டு சேர்மன் ஆச்சார்யா எங்களுடைய கண்காணிப்பில் பொலிஸ் பாதுகாப்போடு பத்திரமாக இருக்கிறார்..."

"டெலிஃபோனில் வந்த கால், உண்மையான மிரட்டலோ வெத்து



மிரட்டலோ... அதைப்பத்தி எனக்குத் தெரியாது. பட், எனக்கு வந்த ஒரு விபரீதமான ஃபோன் காலைப் பற்றி உங்களுக்குத் தெரியப்படுத்த வேண்டியது என் கடமை இல்லையா?"

"ஷ்யூர்...ஷ்யூர்.. ஃபோன் காலை அசட்டை செய்யாமல் உடனடியாய் எனக்குத் தெரியப்படுத்தியமைக்கு மிக்க நன்றி...!" லட்சுமிபதி பேசிவிட்டு, கார்ட்லஸ் ஃபோனை அணைத்து பக்கத்தில் காத்திருந்த அஸிஸ்டண்ட் பொலிஸ் கமிஷனரிடம் கொடுத்தார்.

"மிஸ்டர் கோவிந்த்."

"ஸார்..."

"ஏர்போர்ட் லௌஞ்சுக்குள் சந்தேகத்துக்கு இடமளிக்கும் வகையில் யாராவது சுற்றிக் கொண்டிருந்தால் உடனடியாக அரெஸ்ட் செய்து வேனுக்குக் கொண்டுபோய் விடுங்கள். இந்த விமான நிலையத்தை நாம் முதலிலேயே நம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருக்க வேண்டும். தவறி விட்டோம். இனிமேலாவது கூடுதல் கண்காணிப்பைத் தீவிரப் படுத்தி தப்பான ஆட்களை மோப்பம் பிடிக்க வேண்டும்..."

"எஸ்...ஸார்...!"-அஸிஸ்டண்ட் கமிஷனர் சல்யூட் ஒன்றைக் கொடுத்துவிட்டு, வேக வேகமாய் நகர்ந்துபோக, லட்சுமிபதி ஆச்சார்யாவிடம் திரும்பினார்.

"வாருங்கள்... நாம் ஏர்போர்ட்டில் இருக்கும் பொலிஸ் செல்லுக்குப் போய் விடுவோம். பாதுகாப்பான இடம் அது தான்..."

"மிஸ்டர் கமிஷனர்! அளவுக்கு மீறி நீங்கள் பயப்படுகிறீர்கள். எங்கேயோ ஒரு டெலிஃபோன் பூத்தில் ஒளிந்து கொண்டு ஒரு ரூபாய் நாணயத்தை உபயோகப்படுத்தி ஒருவன் உளறிய உளறலுக்கு நாம் இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியது இல்லை.."

"இருந்தாலும்..."

"லுக் மிஸ்டர் லட்சுமிபதி. கிரிக்கெட் வீரர்களைக் கொல்வதற்காக ஒரு பெண் நிருபர் மனித வெடிகுண்டாய் மாறி, ப்ரஸ் மீட்டுக்குள் இருப்பதாகத் தகவல் வந்தது. ஆனால் கடைசியில் என்னாயிற்று...? அது பொய் என்று தெரிந்தது..."

"மே..பி....ஸார்..பட்... ஓர் ஆண் பெண் நிருபராய் மாறி வந்திருப்பது விபரீதமான செயல்தானே....? தகவல் எப்படியிருந்தாலும் ஆபத்து ஆபத்துதானே?"

"சரி... நான் இப்போது பொலிஸ் செல்லுக்கு வர வேண்டும் அவ்வளவுதானே?"

"ஆமாம்!"

"வாருங்கள். போகலாம்.."

லௌஞ்சின் மார்பிள் படிகளில் ஏறி முதல் மாடியில் இருந்த பொலிஸ் செல்லை நோக்கிப் போனார்கள்.

ஏர்போர்ட் முழுக்க இப்போது எல்லாத் திசைகளிலும் காக்கி யூனிஃபார்ம்கள் முளைத்திருந்தன.

டெலிஃபோன் முணுமுணுத்தது.

அந்த முணுமுணுப்புக்காகவே காத்திருந்த முரளி, பாய்ந்து ரிஸீவரை அள்ளி காதுக்கு அப்பி, பதற்றமாய்க் குரல் கொடுத்தான்.

"யாரு...?"

"நான் கஜா...!"

"என்ன கஜா...? ஏர்போர்ட்டுக்குள்ளே போனியா..?"

"ம்... போனேன்..."

"பைரவியைப் பார்த்தியா..?"

"பார்க்க முடியலை."

"ஏன்...?"

"ப்ரஸ் மீட் நடந்த வி.ஐ.பி. ஹாலை பொலிஸ் ரெண்டு லேயரா ரவுண்ட் அப் பண்ணி பயங்கர பாதுகாப்பு கொடுத்திருக்காங்க."

"கிரிக்கெட்டியர்ஸ்...?"

"எல்லாரும் போயிட்டாங்க. கும்பலும் போயிடுச்சு. ப்ரஸ் ரிப்போர்ட்டர்ஸ்ல ஆண்கள் மட்டும் லாபியில் வெயிட் பண்ணிட்டிருக்காங்க..."

"பெண் ரிப்போர்ட்டர்ஸ்?"

"வி.ஐ.பி. அறைக்கு உள்ளே இருக்காங்க..."

"நீங்க சொல்றதைப் பார்த்தா... பைரவி மாட்டிக்கிட்டான்னு சொல்லு."

"அப்படியும் தெரியலை..."

"பின்னே...?"

"மனித வெடிகுண்டா எந்தப் பெண்ணும் வரலைன்னு பொலிஸ் தரப்புல சொல்லிகிட்டிருக்காங்க. பைரவி பொலிஸ்ல மாட்டிக்கிற மாதிரி இருந்திருந்தா பொத்தானைத் தட்டி டைனமெட்டை வெடிக்க பண்ணியிருப்பா... அவ ப்ரஸ்மீட்டுக்குள்ளேயே போகலைன்னு நினைக்கிறேன்."

"ஒரே குழப்பமாயிருக்கே கஜா...?"

"சரி... நான் இப்போ என்ன பண்றது...? ரொம்ப நேரத்துக்கு ஏர்போர்ட்டுக்கு வெளியே தனியா நின்னுட்டிருக்க முடியாது. பொலிஸோட பாதுகாப்பு ஏற்பாடுகள் இங்கே திடீர்னு அதிகமாயிடுச்சு. எந்தப் பொலிஸ்காரன் கண்ணையாவது நான் உறுத்திட்டா மாட்டிக்க வேண்டியதுதான். நான் கிளம்பி நம்ம இடத்துக்கு வந்துடட்டுமா...?"

"சரி வந்துடு...!"

முரளி ரிஸீவரை லொட்டென்று வைத்து விட்டு, உஷ்ணப் பெருமூச்சோடு நிமிர, பக்கத்தில் இருந்த பீட்டர் சிகரெட், புகை கசியும் வாயோடு சிரித்தான்.

"என்ன முரளி..! பைரவி காரியத்தையே கவுத்துட்டா போலிருக்கு...?"

"ஆமா பீட்டர்...! நாம எதிர்பார்த்தபடி வாணவேடிக்கை நடக்கலை..."

"இதுக்குத்தான் நான் ஆரம்பத்திலேயே ஒரு பொட்டச்சிகிட்ட இவ்வளவு பெரிய வேலையைக் கொடுக்க வேண்டாம்னு சொன்னேன். நீ கேட்கலை. இப்பப்பாரு... செய்ய வேண்டிய வேலையை விட்டுட்டு எங்கேயோ ஊர் சுத்தப் போயிட்டா..."

"அப்படிச் சொல்லாதே பீட்டர்."

"பின்னே வேற எப்படிச் சொல்றது...?"

"பைரவிக்கு வேற ஏதோ இக்கட்டான நிலை ஏற்பட்டிருக்கலாம்..."

"ஃபோன் பண்ண முடியாத நிலைமை ஏற்பட்டிருந்தா?"

"முரளி! நீ பைரவிக்காக இப்படி சப்பைக்கட்டு கட்டும் வேலை வேண்டாம். அவளால் நம் இயக்கமே வெகுவிரைவில் பொலிஸ் கையில் மாட்டிக்கொள்ளப் போகிறது."

பீட்டர் ஆவேசப்பட்டுக் கத்திய விநாடி டெலிஃபோன் கூப்பிட்டது.

முரளி புன்னகைத்தான்.

"இது பைரவிதான்...!" சொன்னவன் ரிஸீவரை எடுத்து "ஹலோ!" என்றான்.

மறுமுனையில் ஓர் ஆண் குரல் கேட்டது.

"முரளி...?"

"ஹோல்டிங்...

"என்ன பைரவிக்காக வெயிட் பண்ணிட்டிருக்கியா...?"

முரளி ஜாக்கிரதையாக நிதானத்துக்கு வந்தான்.

"நீ...நீங்க யாரு...?"

"ஓர் இந்தியக் குடிமகன்தான்..."

முரளி ஒன்றும் பேசாமல் சில விநாடிகள் மௌனிக்க, குரல் சிரித்தது...

"என்ன பேச்சையே காணோம்...?"

"இந்த எகத்தாளமெல்லாம் வேண்டாம். மொதல்ல நீ யார்ன்னு சொல்லு..."

"உனக்கு இப்போ எது முக்கியம்? என்னோட பேரா... இல்லை பைரவியா...? என்னோட பேரை மட்டும் தெரிஞ்சுக்க ஆசைப்பட்டியனா அதை மட்டும் சொல்லிட்டு ரிஸீவரை வெச்சிடுவேன். அதுக்கப்புறம் பைரவியைப் பத்தி எதுவும் சொல்லமாட்டேன். உனக்கு எது வசதி...?"

"சரி...! பைரவியைப் பத்திச் சொல்லு."

"இது புத்திசாலித்தனம். பைரவி இப்போ என்னோட கஸ்ட்டியில்தான் இருக்கா. பாவம்! நல்ல பொண்ணு. ஒட்டியாணம் போட வேண்டிய இடுப்புல வெடிகுண்டைக் கட்டி விடலாமா? இது என்ன நியாயம் முரளி...? இனிமே இந்தத் தப்பெல்லாம் பண்ண மாட்டேன்னு வாக்குறுதி கொடுத்தா பைரவி உனக்கு கிடைப்பா. இல்லேன்னா நானே வெச்சுக்குவேன். நீ என்ன சொல்றே?"

"எனக்கு பைரவி வேணும்..."

"இனிமே அவ இடுப்புக்கு வெடிகுண்டு மாட்டமாட்டியே...?"

"மாட்டேன்"

"அரசியல்வாதிமாதிரி வாக்குறுதியைக் காத்துல பறக்க விடமாட்டியே?"

"மாட்டேன்."

"சரி..! அட்ரஸை நோட் பண்ணிக்க... நெம்பர் இருபத்தியாறு ஆர்யமாலா தெரு, வளசரவாக்கம்."

"உடனே புறப்பட்டு வர்றேன்..."

"வா...!" மறுமுனையில் ரிஸீவர் வைக்கப்பட்டுவிட, முரளி வியர்வை துளிர்த்த முகத்தோடு பீட்டரையும் மற்றத் தன் சகாக்களையும் பார்த்தான்.

தயக்கமாய் அவர்களிடம் விஷயத்தைச் சொல்ல அவர்கள் இருண்டுபோன முகங்களோடு மிரண்டார்கள்.

பீட்டர் உதட்டில் சிக்கியிருந்த சிகரெட்டை உமிழ்ந்துவிட்டு தீர்க்கமாய்த் தலையாட்டினான்.

"முரளி! ஃபோன்ல பேசினவனோட பேச்சை நாம நம்பக்கூடாது. இதுல ஏதோ சதித்திட்டம் இருக்கு. அவன் கொடுத்த அட்ரஸ் ஒரு பொய்யான அட்ரஸாத்தான் இருக்கும்..."

"போய்ப் பார்த்தா என்ன?"

"அவசரப்படாதே..!"

"பீட்டர்..! பைரவி அவன் கையில் மாட்டியிருக்கா..."

"அது எப்படி உனக்குத் தெரியும்... அவன் பொய் சொல்லியிருந்தா..?"

பீட்டர் கேட்க, முரளி தலையாட்டி மறுத்தான்.

"இல்ல பீட்டர்... அவன் பேசற தோரணையைப் பார்த்தா அது பொய் மாதிரி தெரியலை. ஏதோ ஒரு காரணத்துக்காக பைரவி அவன் கிட்டத்தான் மாட்டியிருக்கணும். நீங்க மூணு பேரும் இங்கேயே இருங்க. நான் மட்டும்போய் அந்த வளசரவாக்கம் அட்ரஸ்ல யார் இருக்காங்கன்னு பார்த்துட்டு வர்றேன்."

"வேண்டாம் முரளி... நீ மட்டும் போகாதே. அந்த அட்ரஸுக்கு எல்லாருமே சேர்ந்து போவோம். அப்படிப் போனாத்தான் ஏதாவது ஒரு ஆபத்து வந்தாலும்கூட சமாளிக்க முடியும்..."

முரளி கையமர்த்தினான்.

"எதிரி யார்ன்னு தெரியாமே கூட்டமாப் போறது சரியில்லை... இந்த விஷயத்துல எவ்வளவு ஆழம் இருக்குன்னு தெரிஞ்சிக்க நான் மொதல்ல காலை விட்டுப் பார்க்கிறேன். ஏதாவது ஆபத்துன்னா அது என்னோடவே போகட்டும்.."

"முரளி! இது விஷப்பரீட்சை. நாம யோசனை பண்ணித்தான் காரியத்துல இறங்கியாகணும்."

"பரீட்சைன்னு வந்தாச்சு! எழுதித்தான் ஆகணும். நான் அந்த அட்ரஸுக்குப் போய்ப் பார்த்துட்டு வர்றேன்."

முரளி சுவர் அலமாரிக்குப் போய் பைக் சாவியை எடுத்துக்கொண்டு ஒரு புயல் மாதிரி வெளியேறிப் போனான்.

**(தொடர்ந்து வரும்)**

---

## நிஜ தரிசனம்

**'சிறை', 'தர்மயுத்தம்' போன்ற வெற்றிப்படங்களை இயக்கியவர் ஆர். சி.சக்தி. அவரது சூடும் சுவையும் கலந்த அனுபவங்கள் இங்கு தொடராகின்றன.**


# தர்ம யுத்தம் 17

வேலை தேடி அலைந்த அந்த இளைஞர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. வேலை தேடித் தரும் அலுவலகத்தில் தங்களின் பெயர்களைப் பதிவு செய்து கொண்டார்கள். அதனால் எந்தப்பயனும் இல்லை. இந்தியாவில் எத்தனை கோடி இளைஞர்கள் வேலை தேடி அலைகிறார்கள் என்ற புள்ளிவிவரக் கணக்கில் அவர்களின் பேரும் சேர்ந்து கொண்டதே தவிர, ஆசைக்கு ஒரு இன்டர்வியூ கார்டுகூட வரவில்லை.

மனம் நிறைந்த கனவுகளோடு அவர்களைப் படிக்க வைத்து வீட்டுப் பெரியவர்களும் கொஞ்சம் கொஞ்சமாக அந்த இளைஞர்களை ஒரு சுமையாகக் கருதத் தொடங்கினார்கள்.

### தண்டச்சோறு


குழந்தைப் பருவத்தில் சாப்பிட மறுத்த போதெல்லாம் வேடிக்கை காட்டி, விளையாட்டாகப் பூச்சாண்டியை வரவழைத்து, அதட்டி, உருட்டி, அம்புலிமாமா கதை சொல்லி ஊட்டிவிட்டவர்களின் கண்களுக்கு, இன்று அந்த இளைஞர்கள் உதவாக்கரைகளாகத்



தோன்றினர். அவர்களுக்குப் பெயரே 'தண்டச் சோறு' என்றாகிவிட்டது.

வீட்டிலே உட்கார்ந்திருந்தால், "இப்படி தின்னுட்டு, தின்னுட்டு சோம்பேறியா படுத்துக் கிடந்தா எப்படிடா? வெளியே தெருவில போயி நாலு இடத்துல முயற்சி பண்ணாத்தானே வேலை கிடைக்கும். எருமை மாடு மாதிரி வளர்ந்திருக்கியே தவிர, கொஞ்சமாவது பொறுப்பு இருக்கா!"

இந்த மாதிரியான அர்ச்சனைகளைக் கேட்க மனமில்லாமல், வீட்டில் தங்குவது ஒரு தண்டனையாக மாறிவிட்ட நேரத்தில் வெளியில் கிளம்பி, நான்கு நண்பர்களைப் பார்த்துப் பேசி, ஒருவருக்கொருவர் மனக்கவலைகளைப் பரிமாறிக்கொண்டு வீட்டிற்கு வந்தால், மீண்டும் அதே அர்ச்சனைதான்.



"ஊர் சுத்தி கழுதை, காலையில போயிட்டு எப்ப வர்றான் பாரு? பெரிய கலெக்டர் உத்தியோகம் பார்த்துட்டு வர்றாரு, இவருக்கு ஒரு தட்டுல சாப்பாட்டை எடுத்து வெச்சிக்கிட்டு காத்துக்கிட்டிருக்கணும். போடா, போயி கொட்டிக்கிட்டு தூங்கு!"

செலவுக்குப் பணம் கேட்டால், "எதுக்கு? சிகரெட்டு குடிக்கவா... இல்லை, சினிமாவுக்குப் போகவா? இரண்டு கழுதை வயசாகுது, காலணா காசு சம்பாதிக்கத் துப்பில்லை, கைச் செலவுக்கு வீட்ல காசு கேக்கறான், வெக்கமாயில்லைடா? ஒன்ன மாதிரி பசங்களெல்லாம், ஒழுங்காப் படிச்சு, வேலைக்குப் போயி, தாய், தகப்பனாரை காப்பாத்திக்கிட்டிருக்காங்க..."

இவையெல்லாம் அடிக்கடி அந்த இளைஞர்களின் வீடுகளில் நடக்கற விஷயங்கள்.

அவர்களில் ஓர் இளைஞன் இரவு 10 மணிக்கு தன் வீட்டிற்கு வந்தபோது கதவு பூட்டியிருந்தது. விளக்கும் எரியவில்லை. நீண்ட நேரம் கதவைத் தட்டி சத்தம் போட்ட பிறகு விளக்கு எரிந்தது. வெளியில் யாரும் வரவில்லை. ஜன்னலைத் திறந்து பார்த்து அப்பா கேட்டார்:

"ஏண்டா, இவ்வளவு நேரம்?"

இளைஞன் தயங்கியபடியே சொன்னான், "சினிமாவுக்குப் போயிட்டு வந்தேன்."

### எல்லாமே ஓசிதானா?

"ஓ... காலையில ஸ்டாம்ப்புக்குப் பணம் வேணுனும்னு என்கிட்ட கேட்டே... இப்ப சினிமாவுக்குக் காசு எங்கிருந்து வந்தது?"

"கதவைத் திறப்பா, சொல்றேன். வாசலிலேயே நிக்க வச்சு இத்தனை கேள்வி கேக்கணுமா?"

"நான் கேக்கற கேள்விக்கு பதில் சொல்லிட்டு உள்ளே வா! சினிமாவுக்குப் போக ஏது காசு?"

"என்ன ஃப்ரெண்டு கூட்டிக்கிட்டு போனாம்பா!"

"ஓ... அதுவும் ஓ.சி.தானா? தின்கிற சோறு ஓ.சி. போட்டுக்கிற துணியும் ஓ.சி. சினிமாவும் ஓ.சி. போடா, போயி, சினிமாவுக்குக் கூட்டிக்கிட்டுப் போனானே அவன் கிட்டே போயி சாப்பாடு வாங்கிக் கொடுக்கச் சொல்லிட்டு, எங்கேயாவது ஒழிஞ்சி போ... இனிமே, இந்த வீட்டுக்குள்ளேயே வராதே!" ஜன்னலும் சாத்தப்பட்டது.

இதற்கிடையில் சத்தம் கேட்டு பக்கத்து வீட்டுக்காரர்கள் லைட்டைப்போட்டு வேடிக்கை பார்க்க ஆரம்பித்தனர்.

ஜதிப்பிரஷ்டம் கேள்விப்பட்டிருக்கிறோம். நாடு கடத்துவது தெரிந்த விஷயம்தான். ஆனால், இங்கு ஓர் இளைஞன் தங்களுடைய எதிர்பார்ப்பின்படி சம்பாதித்துப் போடவில்லை என்ற காரணத்திற்காக குடும்பப்பிரஷ்டம் செய்யப்பட்டான்.

வேலை தேடும் முயற்சிகள் வெற்றி பெறவில்லை என்பதற்கு அவன் எப்படிப் பொறுப்பாவான்? இந்த நாட்டில் வேலைகள் தரத்தின் அடிப்படையிலோ, தகுதியின் அடிப்படையிலோ தரப்படுகின்றனவா?

பிறப்பு முதல் இறப்புவரை வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் லஞ்சம் கொடுத்தால்தான் காரியம் நடக்கும் என்று ஒரு கேவலமான சமுதாயத்தில், கைச்செலவுக்கே காசில்லாத அந்த இளைஞன் எப்படி வேலை பெறமுடியும்?

இந்த நியாயம் அந்தக் குடும்பத்தாருக்குத் தெரியாமல் இல்லை. என்றாலும், அவனது படிப்பை வைத்து, அவனுக்குக் கிடைக்கப்போகும் வேலையை வைத்து, அந்த வீட்டின் வரவு, செலவு கணக்குகளைத் தங்களது மனக்கணக்கு நோட்டில் எழுதி வைத்ததெல்லாம் பொய்யாகிப் போனதில் ஏற்பட்ட கோபம்.

### ஆசை இருக்கு

'மற்ற இளைஞர்களைப் போல தானும் வேலைக்குச் சென்று, உழைத்துச் சம்பாதித்து, தன்னைப் பெற்று, வளர்த்து, ஆளாக்கிய குடும்பத்திற்கு உதவியாக இருக்க வேண்டும் என்று ஆசை தனக்கு இல்லையா?

தன்னுடைய இயலாமையை, நடைமுறை வாழ்க்கையோடு போட்டி போட்டு ஜெயிக்க முடியாத பரிதாப நிலைமையை ஏன் ஒரு சமூகக் குற்றமாகக் கருதுகிறார்கள்?'... நினைக்க நினைக்க அவனுக்குக் கோபம் வந்தது.

பக்கத்து வீட்டுக்காரர்கள் பார்ப்பதை உணர்ந்ததும் வெட்கமாக இருந்தது. தன்னுடைய கோபத்தை, திறக்கப்படாத தன் வீட்டின் கதவுகளின்மீது காட்டினான். உச்சஸ்தாயியில் குரல் எடுத்து, "இப்ப, கதவு திறக்கப் போறீங்களா, இல்ல உடைக்கட்டுமா?" என்றான்.

வீட்டினுள் பரபரப்பு. ஏதேதோ சத்தம் கேட்டது. முடிவில் கதவு திறக்கப்பட்டது. அவன் உள்ளே நுழைய முயன்றபோது, அவனது நெஞ்சிலே கையை வைத்து வெளியே தள்ளியபடியே வந்தது ஒரு உருவம். அது அவனது அக்காவின் கணவர். அக்காளும், அத்தானும் விருந்திற்கு வந்திருந்தனர்.

(அனுபவங்கள் தொடரும்)

**ஐரிஷ் விடுதலைப் போராட்டம் 750 வருடங்களுக்கு மேற்பட்ட நீண்ட நெடிய வரலாறு கொண்டது! 1900ம் ஆண்டு ஆரம்பம் வரை ஐரிஷ் மிதவாதத் தலைவர்கள் பிரித்தாளும் பிரித்தானியரால் ஏமாற்றப்பட்டனர். இந்நிலையில் 1913ம் ஆண்டு ஆயுதம் தாங்கிய ஐரிஷ் தொண்டர் படை உருவானது. இதுவே பிற்காலத்தில்– 1919 ல் ஐரிஷ் குடியரசு இராணுவமானது. ஐரிஷ் தொண்டர் படையின் வீரன் தான் பிரீன். மனதை உலுக்கும் எழுச்சிமிகு உண்மை வரலாறு இது.**

# வீரன் தான் பிரீன்

**14**

தர்லஸ் பொலிஸ் நிலையத்தை தாக்கி அதிலிருந்து ஹோகனை மீட்பது நடக்க முடியாத காரியம். ஏனெனில் ஏராளமான பொலிசும் பட்டாளமும் எந்த நேரத்திலும் தயாராய் வைக்கப்பட்டிருந்தன. பொலிஸ் நிலையத்தைச் சுற்றிலும் பெரிய கோட்டை ஒன்று இருந்தது. பொலிஸார் இமைகொட்டாது பாராக் கொடுத்து வந்தனர். புரட்சிக்காரருடைய வேலைகள் அவர்களுக்கு மிக நன்றாய்த் தெரியும். அதிலும் வெடிமருந்து வழக்கில் சம்பந்தப்பட்ட ஹோகன் அவர்களிடம் கைதியாக இருக்கும்பொழுது அவர்கள் அதிக எச்சரிக்கையாயிருந்தது ஆச்சரியமில்லை.

பொலிஸ் நிலையத்தைத் தாக்க முடியாவிட்டால் வேறு என்ன செய்வது? இதைப் பற்றித் தான் பிரீன் தீவிரமாக யோசித்து ஒரு முடிவு செய்தான். அக்காலத்தில் கைதிகளை 'ரிமாண்டு வாங்குவதற்கும் ஆரம்ப விசாரணை செய்வதற்கும் இரண்டொரு நாள்தான் பொலிஸ் நிலையத்தில் வைப்பது வழக்கம். பிறகு அவர்கள் மவுண்ட் ஜாய், கார்க், மேரிபரோ, டண்டாக், பெல்பாஸ்டு முதலிய பெரிய சிறைச்சாலைகளில் ஒன்றுக்கு மாற்றப்படுவது வழக்கம்.

திப்பெரரிக் கைதிகளை கார்க் நகர ஜெயிலுக்கு கொண்டு போவார்கள். எனவே ஹோகன் தர்லஸ் நிலையத்திலிருந்து ரயிலில் கார்க்குக்கே கொண்டு போகப்படுவான் என்று தான்பிரீன் ஊகித்தான்.

அதற்குத் தக்கபடி திட்டம் அமைத்தான். எமிலி என்ற ஸ்டேஷனுக்குப்போய், அங்கு ரயில் வந்தவுடன் உள்ளே பாராக்காரர்களைச் சுட்டுவிட்டு, ஹோகனை மீட்க வேண்டும் என்பது அவன் யோசனை. எமிலி சிறிய ஸ்டேஷன். அங்கு பட்டாளம் கிடையாது. ஆனால் ரயிலை நிறுத்திக் கைதியை மீட்பது மூன்று பேர் செய்யக்கூடிய காரியமில்லை. ஆதலால், தான் பிரீன் உதவியாட்கள் வேண்டுமென்று திப்பெரரி நகரிலிருந்த தனது படைக்குத் தகவல் சொல்லிவிட்டான். திப்பெரரியில் இருந்து எமிலி ஏழாவது மைலில் இருந்தது.

முன்னேற்பாடுகள் யாவும் செய்யப்பட்டு முடிந்தன. 1919 மே மாதம் 12ஆம் திகதி தான் பிரீனும் நண்பர்களும் தங்களுடைய சைக்கிள்களை எடுத்துக்கொண்டு எமிலியை நோக்கிப் புறப்பட்டனர். கோபத்தினாலும், ஆத்திரத்தாலும், கவலையாலும் அவர்களுடைய உதிரம் கொதித்துக் கொண்டிருந்தது.

நேர்பாதையிலே சென்றால், எமிலி முப்பது மைல் தூரத்தில்தான் இருந்தது. ஆனால் நேர் பாதையிலே பொலிஸ் தோழர்கள் அடிக்கடி நடமாடிக் கொண்டிருப்பார்கள் அல்லவா? காட்டுப் பாதையில் ஐம்பது மைல் பிரயாணம் செய்ய வேண்டியிருந்தது.

பாதையோ சீர்கெட்டது. எங்கு பார்த்தாலும் மேடும், பள்ளமும் குழியும், கல்லுமாயிருந்தது. சைக்கிள்களில் அவர்களுடைய உடல் இருந்தனவேயன்றி, உறக்க மயக்கத்தால் மூவருடைய தலைகளும் நாலு பக்கத்திலும் ஆடிக்கொண்டேயிருந்தன. நண்பனை மீட்க வேண்டும் என்ற ஆர்வம் மட்டுமே அவர்களையும் சைக்கிள்களையும் தள்ளிக்கொண்டு சென்றது.

இடையிலே ஸீன் டிரீஸி வழக்கம்போல் கதைகள் சொல்ல ஆரம்பித்தான். வழியிலிருந்த ஊர்களின் சரித்திரங்களையும் அவற்றில் வசித்த வீரர்களைப் பற்றியும் அவன் விரிவாக எடுத்துச் சொன்னான்.

திடீரென்று ஏதோ வீழ்வதாகச் சத்தங் கேட்டது. டிரீஸியும், தான் பிரீனும் பின்னால் திரும்பிப் பார்த்தனர். ரொபின்ஸன் சைக்கிளிலிருந்து தூங்கிக் கீழே விழுந்து விட்டான்! விழுந்தவன் எழுந்திராமல், மறுபடி சைக்கிளைக் கட்டிக்கொண்டே வீதியில் உறங்குவதைக் கண்டனர். அவன் உடலில் அவ்வளவு களைப்பு இருந்தது. அவர்கள் அவனைத் தட்டி எழுப்பி அழைத்துக் கொண்டு சென்று, மே மாதம் 13 ஆம் திகதி காலை எமிலியை அடைந்தனர்.

தான்பிரீன் கூட்டத்தார் காலை 3.30 மணிக்கே எமிலியை அடைந்தனர். முதல் ரயில் மதியத்தில்தான் வரும் என்று தெரிந்துகொண்டு அவர்கள் திப்பெரரியிலிருந்து உதவியாட்கள் வருவதை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

திப்பெரரி வீதியில் வழிமேல் விழிவைத்துப் பார்த்துக்கொண்டேயிருந்தனர். ஒருவரும் வரக்காணோம். வழியில் என்ன நேர்ந்ததோ என்று கவலையுற்றனர். மணி பதினொன்று அடித்தது. ஒவ்வொரு நிமிஷமும் ஒரு நாளாகத் தோன்றிற்று. எந்த ஆசாமியும் வரக் காணோம்.

ரயில் வரக் கூடிய நேரம் நெருங்கி விட்டது.

உதவிக்கு நண்பர்கள் வந்தால் என்ன, வராவிட்டால் என்ன? ஸீன் ஹோகன் பகைவர்கள் கையில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் போது, அவனுடைய நண்பர் சும்மா இருப்பதா? அது நட்புக்குத் துரோகம் அல்லவா? இவ்வாறெல்லாம் தான் பிரீன் எண்ணமிட்டான். எப்படியாவது முயற்சி செய்து பார்த்துவிடவேண்டியது தங்கள் கடமை என்று தீர்மானித்தான்.

ஹோகனுக்குப் பாதுகாப்பாகச் சுமார் நான்கு முதல் எட்டுப் பொலிஸார் தக்க ஆயுதங்களுடன் வரக்கூடும். அதே ரயிலில் வேறு பொலிஸாரும் ஒருவேளை வரக் கூடும். ஆனால் அவைகளையெல்லாம் பற்றி யோசிக்க அந்தத் தொண்டர்களுக்கு மனமில்லை. 'ஹோகனை மீட்க வேண்டும் அல்லது அவனுக்காகத் தங்கள் உயிரைப் பலியிட வேண்டும்! வருவது வரட்டும்!' என்று அவர்கள் துணிந்து நின்றனர். சரியாகப் பன்னிரண்டு மணிக்கு ரயில் வந்து விட்டது. உடனே மூவரும் ஸ்டேஷனுக்குள்ளே பாய்ந்தனர்.

"உள்ளே பாய்ந்த வேகத்தில் தான் பிரீன் ஒரு கிழவியை இடித்துத் தள்ளிவிட்டான்; தானும் கீழே விழுந்தான். கிழவியைத் திரும்பிப் பாராமலே துள்ளி எழுந்து ரயிலடிக்கு ஓடினான். ஒவ்வொரு நிமிஷமும் அவனுடைய கைவிரல் சட்டைக்குள் மறைந்திருந்த றிவோல்வரின் குதிரையைப் பிடித்த வண்ணம் தயாராக இருந்தது.

ரயில் வந்ததேயொழிய அதில் ஒரு கைதியையும் காணோம்! மூவரும் ஏமாற்றமடைந்து திகைத்தனர்.

ஆனால் அதுவும் நல்லதுதான் என்று கொஞ்சம் சந்தோஷமும் அடைந்தனர். ஏனெனில் ஹோகன் அடுத்த ரயிலில் கொண்டு வரப்பட்டால், அதற்குள் திப்பெரரி ஆட்கள் வந்துவிடக்கூடும் என்று அவர்கள் நமபினார்கள்.

அடுத்த ரயில் வரும்வரை காத்திருப்பது தான் மிகவும் கஷ்டமாயிருந்தது. போராட்டத்தில் தீவிரமாய்க் குதிப்பது எளிது. ஆனால் எதையும் எதிர்பார்த்துக் காத்திருப்பதுதான் கஷ்டம்.

திப்பெரரி நண்பர்கள் ஆபத்துக்கு உதவத் தவறிவிட்டனர். தான் பிரீன் வேறு எங்கிருந்து உதவி பெறலாமெனச் சிந்தித்தான். பக்கத்து மாவட்டங்களிலிருந்த கால்ட்டீ தொண்டர் படைக்குத் தகவல் கொடுத்தால் பல வீரமுள்ள வாலிபர்கள் உடனே உதவி செய்வார்கள் என்று கருதினான். அவ்வண்ணமே அவர்களுக்குச் செய்தி அனுப்பி உதவிக்கு வரும்படி வேண்டினான். கால்ட்டீ வீரர்கள் தகவல் கிடைத்த மறுநிமிஷமே ஐந்து பேர்களை அனுப்பி வைத்தனர்.

கால்ட்டீ தொண்டர்களுடைய பெயர்களாவன: இமன் ஒபி ரியன், ஜேம்ஸ் கான்லன், ஜே.ஜே. ஓபிரியன், ஸீன் லிஞ்ச், மார்ட்டின் போலீ.

அந்த வாலிபர்கள் அன்றைய தினம் நடந்த போராட்டத்தில் கலந்து கொண்ட காரணத்தால் அவர்களில் மார்ட்டின் போலீ என்பவன் பின்னால் பொலிஸாரால் பிடிக்கப்பட்டு, இரண்டு வருஷங்கள் கழித்து மவுண்ட் ஜாய் சிறையில் தூக்கிலிடப்பட்டான். அவன் மட்டுமல்ல, அந்தப் போராட்டத்தில்



எவ்வித சம்பந்தமும் இல்லாத மாஹெர் என்னும் வாலிபனும் குற்றஞ் செய்ததாகப் பொய்க்காரணம் சொல்லி தூக்கிலிடப்பட்டு மடிய நேர்ந்தது. அந்த இரு வாலிபர்களும் அயர்லாந்துக்காகச் சிரித்த முகத்துடன் உயிரைப் பலி கொடுத்தனர்.

கால்ட்டீ துணைவர்களைச் சேர்த்து தான் பிரீன் படையில் மொத்தம் எட்டுப் பேர்கள் இருந்தனர். ஐந்து பேர்களுக்கு ஆயுதங்கள் இருந்தன; மூவர் நிராயுதபாணிகள். எல்லோரும் கூடி ஆலோசித்ததில் முன்போட்ட திட்டம் சிறிது மாற்றப்பட்டது. ஸீன் டிரீஸியும், ஸீமஸ் ரொபின்ஸனும், தான் பிரீனும் அடுத்த ஸ்டேஷனான நாக்லாங்குக்கு சைக்கிள்களிற் சென்றனர்.

## தமிழில் ப.ராமஸ்வாமி

நாக்லாங் எமிலியிலிருந்து மூன்றாவது மைலில் இருந்தது. மற்ற ஸ்டேஷன்களில் எப்பொழுதும் பொலிஸாரும் பட்டாளத்தாரும் தங்கியிருப்பார்கள் என்பதால் நாக்லாங் ஸ்டேஷனுக்கே செல்ல வேண்டும் என்று அவர்கள் புறப்பட்டார்கள். அதன் பக்கத்தில் இரண்டு மைல்களுக்கு இடையில் பொலிஸ் நிலையமே கிடையாது. நாக்லாங்கிலும் காரியம் பலிக்கவில்லையானால், அடுத்த ஸ்டேஷனான பிளார்னிக்கு மோட்டாரில் செல்வது என்று அவர்கள் தீர்மானித்திருந்தனர்; மற்ற நால்வரும் எமிலிக்குச் சென்றனர்.

அவர்கள் அங்கு ரயிலில் வந்தவுடன் அதில் ஏறிக்கொண்டு யாரும் சந்தேகிக்காதபடி ஹோகனிருந்த இடத்திற்குப் பக்கத்தில் அமர்ந்துகொள்ள வேண்டும் என்றும், நாக்லாங் வந்தவுடன் அங்கு காத்திருந்த தான் பிரீன் முதலானவர்களுக்கு அந்த வண்டியை அடையாளம் காட்ட வேண்டும் என்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தான் பிரீனும் நண்பர் இருவரும் நாக்லாங் ஸ்டேஷனை அடையும்பொழுது முதல் மணி அடிக்கப்பட்டது. ரயில் எமிலியை விட்டுப் புறப்பட்டுவிட்டது என்பதை அது அறிவித்தது.

தொண்டர்கள் ரயில் நிற்கக்கூடிய மேடைக்குச் சென்று உலாவிக் கொண்டிருந்தனர். அவர்கள் சாதாணர மனிதர்கள் போலவே காணப்பட்டார்கள். அனால் அவர்களுடைய கைகள் மட்டும் சட்டைப் பைக்குள் றிவோல்வரைப் பற்றிய வண்ணமாயிருந்தன.

தூரத்தில் எஞ்சினுடைய புகை ஆகாயத்தில் தெரிந்தது. அடுத்த நிமிஷத்தில் வண்டி ஸ்டேஷனில் வந்து நின்றது. அதே சமயத்தில் கார்க் நகரிலிருந்து வேறொரு வண்டியும் வந்து அடுத்த தண்டவாளத்தில் நின்றது. அந்த வண்டியில் ஏராளமான பட்டாளத்தார்கள் இருந்தனர் என்பது தொண்டர்களுக்கு மறுநாள்தான் தெரியவந்தது.

அன்று நடந்த குழப்பத்தில் எக்காரணத்தாலோ பட்டாளத்தார் கீழே இறங்கிக் கலந்துகொள்ளவில்லை. ஒருவேளை அவர்களுக்குத் தகவல் கிடைப்பதற்கு முன்னரே கலகம் முடிந்துவிட்டது போலும்.

ரயில் தண்டவாளத்தில் நிற்குமுன்பே வண்டியிலிருந்த தோழர்கள் ஆசாமி இருக்குமிடத்தைச் சுட்டிக்காட்டினார்கள். ரயில் ஒரு நிமிஷம்தான் நிற்கும். அதற்கு மேல் நிற்கவேண்டுமானால் எஞ்சின் ஓட்டியவர்களைச் சுட வேண்டியிருக்கும். அதற்கு அவசியமில்லாமல், அந்த ஒரு நிமிஷத்திற்குள் காரியத்தை முடித்து விட வேண்டுமென்று தான் பிரீன் தீர்மானித்தான்.

(பயணம் ...தொடரும்)

---

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர்.**

**39**

# அரங்கம் அந்தரங்கம்

**இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!**

**அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.**

**இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!**

**நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.**

**இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.**

~கண்ணதாசன்~

"நீ மானங்கெட்டவள் என்று அப்போதே எனக்குத் தெரியும்."

"மனைவி என்று அழைத்து வந்து, மற்றவர்களைப் பழக்கப்படுத்தி வைப்பவர்களைவிடவா, நாங்கள் மானங்கெட்டவர்கள்?"

"அவ்வளவு வந்து விட்டாயா? ஒரு சேலை நகையைத் தொடக்கூடாது. போ வெளியே! இனி உன்னை இந்திரகுமார் எப்படி ரசிக்கிறான் என்று பார்ப்போம்?" என்று அவளது கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளத் தொடங்கினான் குமாரசாமி.

லலிதா திமிறினாள். அவன் கைகளைக் கடித்தாள். "இது உங்கள் வீடல்ல; ஜாக்கிரதை!" என்றாள்.

அவனைப் பிடித்துத் தள்ளிவிட்டுப் படுக்கை அறைக்குள் நுழைந்தாள் கதவைத் தாழிட்டாள்.

இந்திரகுமாருக்கு டெலி:போன் செய்தாள்.

"நான் உடனே உங்களைப் பார்க்க வேண்டும்!" என்றாள்.

"நான் கார் அனுப்புகிறேன். நீ வந்து விடு!" என்றார் அவர்.

டெலி:போனை வைத்துவிட்டுக் கதவைத் திறந்து பார்த்தாள் லலிதா.

குமாரசாமி பணம், நகை, பெட்டி, படுக்கை, தன்னுடைய சேலை அனைத்தையும் எடுத்துக்கொண்டு வெளியேறுவதைக் கவனித்தாள்.

மீண்டும் படுக்கை அறைக்குள் திரும்பினாள். இந்திரகுமாருக்கு டெலி:போன் செய்து. "நான் அங்கே வந்தால் கூட்டம் அதிகம் இருக்கும். நீங்களே இங்கு வாருங்கள்!" என்றாள்.

அவள் டெலி:போனை வைத்த கொஞ்ச நேரத்தில் கதவு தட்டும் சத்தம் கேட்டது.

இந்திரகுமாரை எதிர்பார்த்துக் கதவைத் திறந்தாள் லலிதா.

☎

வெட்டியில் சோறு போட்டுச் சாப்பிடும் போது குழந்தைகள் சுற்றிலும் நிற்கின்றன.

பூனை மேஜையிலே வந்து உட்காருகிறது. நாய் காலடியிலே அமர்கிறது.

அதுவே திறந்த வெளியாக இருந்தால், பிச்சைக்காரர்கள் கையை நீட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

வசதி வந்துவிட்டது என்று தெரிந்தால் மாமனாருக்கு மாமியாரின் ஒன்றுவிட்ட சகோதரி என்று சொல்லிக் கொண்டு கூடச் சில சொந்தங்களும் பந்தங்களும் ஓடிவரும்.

வசதி இல்லையென்று ஆகிவிட்டால் பெற்றெடுத்த பிள்ளைகளே கூட, "சனியனே, சும்மா இரு!" என்பார்கள்...

பூத்துக் கிடக்கும் புஷ்பச் சோலைக்கு வண்டுகள் அழைப்பில்லாமலே வருகின்றன.

தண்ணீர் நிறைந்த ஏரிக்கு, நாரைகள் கூட்டங் கூட்டமாக வந்து அங்கேதான் சிநேகம் பிடிக்கின்றன.

மீன்களுக்கு மட்டும் பறக்கும் சக்தி இருக்குமானால், தண்ணீர் வற்றும்போது அவையும் பறந்து விடக்கூடும்.

காடு கருகிப் போய் விட்டதென்றால், விலங்குகளும் வெளியேறத் தொடங்குகின்றன.

கொண்டு வந்து போடப்பட்ட பிணத்தின் கையில் ஒரு மோதிரம் இருக்குமானால், கொள்ளி வைத்து விட்ட உறவினர்கள் போன பிற்பாடுகூட வெட்டியான் பந்த பாசத்தோடு அங்கேயே காத்துக் கொண்டு நிற்பான்.

கண்மாய்களுக்குப் பக்கத்திலே பாம்புப் புற்றுகள் ஏராளமாக இருக்கும். காரணம் தவளைகள் இடத்திலே உள்ள கருணை.

தஞ்சாவூர் நிலத்தைப் பட்டா போடுவதில் ஜமீன்தார்களுக்கும், சாதாரணப் பணக்காரர்களுக்குமே போட்டி வருகிறது.

சகாரா பாலைவனத்தை இலவசமாகக் கொடுத்தால் கூட யார் வாங்கிக் கொள்ளப்போகிறார்கள்?



வீதியில் நிற்கும் பிச்சைக்காரன் சொந்த மைத்துனனாக இருந்தாலும், "இவன் என் மைத்துனன்!" என்று சொல்லக் கூடியவர்கள் எத்தனை பேர்?

உலக நடப்பே இதுதான் என்றால், நாராயணசாமி வீட்டு நடப்பு வித்தியாசமாகவா இருக்கும்?

கற்பகத்தைக் கைது செய்ய வாரண்டு வந்திருக்கிறது என்றவுடனேயே விருந்தாளிகள் அனைவரும் சொல்லிக் கொள்ளாமலேயே நடந்தார்கள்.

தவறு. அவர்கள் சொல்லிக் கொண்டார்கள், போலீசாரிடம்.

அடுத்தவனுக்கு வாரண்டு என்றால், தனக்கு இல்லை என்பதில் தானே மற்றவர்களுக்கு நிம்மதி!

போலீசார் வாரண்டை நீட்டியபோது, கற்பகத்தின் தலையில் இடி விழுந்தது போலிருந்தது. ஆனால் அவளுக்குக் காரணம் புரிந்தது. நாராயணசாமிக்கு அதுவும் புரியவில்லை.

"ராஜசேகரன் கொலை சம்பந்தமாக..." என்றபோதுதான், அவருக்கு, ஏதாவது நடந்திருக்குமோ என்று ஐயம் வந்தது.

இப்போது அவர் ஒரு பாராளுமன்ற உறுப்பினர். ஆனால் உறுப்பினர்கள் தலையிடக்கூடிய விஷயமல்லவே இது...!

## கவியரசு கண்ணதாசன்

கற்பகத்தைப் போலீஸ் வண்டியில் ஏற்றிக் கொண்டு போனபோது நாராயணசாமி கண்கலங்கி விட்டார். கமலா கதறிக் கதறி அழுதுவிட்டாள்.

ஆனாலும், அப்போது வந்த போலீஸ் அதிகாரிகள் மரியாதையானவர்கள்.

(அந்தரங்கம் வரும்)

# காத்திமா

காத்திமாவின் காதுகள் தாமாகவே இரைந்தன. ஏசி பூட்டிய வீட்டுக்குள் உடம்பை ஊசி என குத்திற்று குளிர்.

புதிதாய்த்தான் மத்திய கிழக்கு நாடொன்றுக்கு இலங்கையிலிருந்து பணிப்பெண்ணாய் வந்துசேர்ந்தாள். புதிய சூழலில் புதிய வாழ்க்கைக்காய் அவளது இருதயம் ஓடத்தொடங்கியபோது, மனசுக்குள் ஒரு நிம்மதியின் ஒளிக்கீற்று பளீரெனத் தோன்றியது.



நிம்மதியில்லாமல் வாழுகின்ற வாழ்வில் துயரங்கள் எல்லாம் புதுப்புது வடிவில் துவட்டும்போது, மனசு அலைக்கழிக்கப்படுமே, அதுபோல சோளகக் காற்றே தொடர்ந்து வீசிற்று.

பச்சை இலைகள் தன்னை நோக்கி வசந்த காலமாய் அரும்பும் நேரம் வெகு தொலைவில் இல்லை என்ற நம்பிக்கை இன்று மத்திய கிழக்கில் வாழ அவளை வைத்திருக்கிறது.

கட்டிய புருஷன் வேலைவெட்டியில்லாமல் வீட்டிலிருக்கும்போது, "காணி வாங்கிவா, காசி வாங்கிவா!" என மாமியார் படுத்தும் வேதனைகள், விடியும் முதலே எழும்பி மாமியாருக்கு தேனீர் ஊற்றிக் கொடுப்பதில் இருந்து இரவில் ஊர்விளக்கெல்லாம் அணைந்த பிறகும் வீட்டுக் கதவை மூடுவதுவரை இயந்திரமாய் நச்சரிப்புக்குள் வாழ்ந்த வாழ்வை இப்பொழுது எண்ண ஒரு சொட்டுக் கண்ணீர் விழுந்தது மடியில்.

தன் அம்மா அப்பாக்களோடு அவ்வளவாக அண்டாத குழந்தையை நினைக்கும் போது மீண்டும் கனத்தது. 'தொண்டை கனமில்லாமலிருந்த குழந்தைக்கு சளி மருந்து அம்மா கொடுத்தாவோ என்னவோ!' சிந்தனை ஓட்டம் இப்பொழுது மாஜி கணவனின்மீது சென்றது. அவனது உருவை எண்ணும்போதே அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

அவன் ஒரு ரச மண்டி. சுயநலத்தால் சீதனத்தை ஓங்கி எடுத்த கருமி. சில சில்லறைச் சிம்மாசனத்துக்காய் சாக்குத் துண்டுகளோடு சரசம் வைத்து தாம்பத்திய ஒன்றுகூடலில் தவறிப் பிரிந்த இதயம். காலம் காலமாய் கட்டிக் காக்க வேண்டியவளை தெருக்களில் அலைய விட நினைத்தவன் எப்படிப்பட்டவன்?

ஆறுதல் அடையாமலேயே செயலிழந்து போனது இந்தப் பிணைப்பின் விவாகரத்து. திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்டால் விவாகரத்தையும் விதவைக் கோலத்தையும் எங்கே நிச்சயிக்கிறார்கள் என்பதே இவளுக்குள் ஏற்படும் இன்றைய கேள்வி.

ஆம்! இப்பொழுதுதான் நிதானத்திற்கும், வாழ்விற்கும் மீண்டு வந்திருக்கிறாள். விசாரமும், விவேகமும் கூடி தனக்குள்ளும் ஒரு புதுமைப் பெண்ணைக் காண நீண்டு விழைகிறாள்.

**உவைஸ்கனி**

அரபியில் வணக்கம் சொல்லவே கஷ்டப்பட்டவள் இன்று அரேபியா எங்கும் தனியே சுற்றித் திரியுமளவிற்கு (சுற்ற முடியாவிட்டாலும்) பாஷையின் ஆட்சி வியாபித்திருந்தது.

காத்திமா இன்று கஸ்தூரி விற்கும் கோடீஸ்வரன் வீட்டில் பணிப்பெண் அல்ல. அவனுடைய பெண்.

இலங்கையில் இருக்கும் வயதான அப்பாவும் அம்மாவும் ஏசி வீட்டில் வாழ்வதாகவும், தம் பொக்கை வாய்களுக்கு பல் செட் (கிடைக்கிடை பவுண் நிறத்திலும்) கட்டியிருப்பதாக கேள்விப்பட்டேன். காத்திமாவின் தற்போதைய பெயர் எனக்குத் தெரியாது. ஆனாலும் மகன் நன்றாய் கொழுத்திருப்பதாக அறிகிறேன்.

# மனித வலு

'சி'ல தினங்களில் மனைவி, பிள்ளையைப் பார்க்கப் போகிறோம்' என்ற மகிழ்ச்சி எம்மை வியாபித்திருந்தாலும் எமது எதிர்பார்ப்புக்கள் ஏமாற்றமானதன் வலி வேதனையைக் கொடுத்துக் கொண்டிருந்தது.

அந்நிய மண்ணில் இரண்டு வருடங்களைத் தொலைத்துவிட்டு மீண்டும் தாய் மண்ணில் காலடி பதிக்கப்போவது தரும் மகிழ்ச்சி எங்கள் முகத்தில் உதித்திருக்கவில்லை.

கட்டார் நாட்டின் தலைநகர் டோகாவில் நானும் எனது நண்பன் சுரேஸும் வேலை செய்து கொண்டிருக்கும் கம்பனியின் வரவேற்பறையில் விடுமுறைக்கு ஊர் சென்று வருவதற்கான விமானச் சீட்டைப் பெறுவதற்காகவே காத்திருந்தோம்.

மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்று உழைப்பதன் மூலம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும் என்ற கனவுடன் இங்கு வருபவர்களைப் போலவே நாம் கற்பனைக் கோட்டைகளைச் சுமந்து கொண்டுதான் கட்டாருக்கு வந்தோம். ஆனால் எம் எதிர்பார்ப்பு ஏமாற்றமாகிய நிலையில் ஊர் திரும்புகிறோமே என்ற தாக்கமே எம் மன உறுத்தலுக்கு விதையானது.

அறுபதாயிரம் ரூபாவை முகவருக்குக் கொடுத்து கொழும்பு வர-யாழ்ப்பாணத்து இன்றைய நிலை செலவை எண்பதாயிரம் வரை கொண்டு சென்றிருந்தது. இவற்றில் சில ஆயிரங்களே நான் ஊரில் வியர்வை சிந்தி உழைத்துப் பெற்றவை. மிகுதி வட்டிக்குப் பெற்ற கடன் மூலமே செலவுகளை ஈடு செய்திருந்தேன்.

இங்கு வந்து சேர்ந்த இரண்டாவது நாளே எழுதப்பட்ட உடன்படிக்கை மூலம் சம்பளத்தை தெரிந்து கொண்டதும் சந்தோசம் கரை புரண்டது. பட்டகடனை ஒரு வருடத்துக்குள் அடைத்து விட்டால், அடுத்த ஒரு வருடத்துக்குள் சிறு தொகையாவது சேமிக்க முடியும் என்ற நம்பிக்கை கொடுத்த மகிழ்ச்சிக்கு சில நிமிட ஆயுள்கூட இருக்கவில்லை.

"என்ன தம்பிமார் சாப்பாடு ஆச்சா!" என்றவாறே எமது அறைக்கு வந்த மலையாளி நபர் "இண்டைக்கு பக்கத்துக் கடையிலை சாப்பிடுங்க. நாளையிலிருந்து நீங்களே சமைத்துச் சாப்பிட்டா செலவு குறையும்!" என்ற வார்த்தைகள்தான் எம் மகிழ்ச்சியைச் சாகடித்திருந்தது.

"என்ன அண்ணா, சாப்பாடும், ரூமும் கம்பனி தருமெண்டுதானே ஏஜென்சி சொன்னான்!" என்றேன்.

"தம்பிகளா! ஏஜென்சி சொல்லுறதைப் போல எல்லாக் கம்பனிகளும் இங்கை செய்யிறதில்லை. சில கம்பனிகள்தான் அப்படிச் செய்யுது!" என்றார் அவர்.

இது எங்கள் எதிர்பார்ப்புக்கு விழுந்த முதல் அடி. இவ்வாறு அடிக்குமேல் அடியாக விழத்தொடங்கியது.

குடும்பத்தைப் பிரிந்த கவலை, வேலைப் பழு, மொழிப்பிரச்சனை என எல்லாவற்றையும் சமாளித்துக்கொண்டு ஒரு மாதத்தை அடைந்திருந்த போதிலும் சம்பளம் தருவதாய்க் காணவில்லை.

அங்கு சென்றதிலிருந்து எங்களுக்கு ஆதரவுக்கரம் நீட்டும் அந்த மலையாளிச் சகோதரரிடமே சென்றோம்.

"இங்கை எல்லாக் கம்பனிகளும் இரண்டு, மூன்று மாதச் சம்பளங்களை நிலுவையாய் வைத்துக் கொண்டுதான் சம்பளத்தைக் கொடுக்கத் தொடங்குவார்கள். அதே போலதான் நம்ம கம்பனியும் முதல் மாதத்துக்குரியதை நிலுவையாய் வைத்துக் கொண்டு இரண்டாம் மாதத்திலிருந்துதான் சம்பளத்தைக் கொடுக்கத் தொடங்கும்!"



என அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போது வேதனையால் எழுந்த கோபந்தான் எம்முன் நின்றது.

"காலை ஐந்து மணிக்கு எழும்பி, ஆறு மணிக்குத் தொடங்குகிற வேலைக்குப் போய், நாலரைக்கு வேலை முடியும்வரை மனிசனைக் கசக்கிப் பிழியுறாங்கள். மாதச் சம்பளத்தை மாதம் முடிய தந்தாலும் மனதுக்கு ஆறுதலாக இருக்கும். இங்க நடக்கிறதுகளைப்பார்த்தா நாட்டுக்கே திரும்பிடலாம் போல இருக்குது மச்சான்!" என சுரேஸ் கொதித்தான். ஆனால் "என்ன செய்யிறது? கடனை அடைக்குமட்டுமாவது கொஞ்சம் பொறுப்பம்!" என நான் அவனைச் சமாதானப்படுத்தினேன்.

"என்னத்தைப் பொறுக்கிறது. காலையிலை குடிக்கிற ரீயோடை பத்துமணிவரை வேலை. பத்து மணிக்கு சாப்பிட்டா பின்னேரம் நாலரைவரை வேலை. பிறகு ரூமுக்குப் போய் சமைச்சுச் சாப்பிட இரவு எட்டுமணி ஆகிவிடும். இப்பிடிச் சாப்பிட்டு வாற நாம், ஊருக்குப் போகும்போது வருத்தக்காரராத்தான் போவோம்!" என சுரேஸ் வெடித்துக் கொண்டிருந்தான்.

வாரமொன்றில் அறுபது மணிநேரம் வேலை வழங்குவதற்கு அவர்கள் கொடுக்கும் சம்பளத்திற்கு பன்மடங்கு பயனை எம்மிடம் பெறுவதை உணருவதற்கு எங்களுக்கு அதிக காலம் தேவைப்படவில்லை.

இதே மனிதவலுவை ஊரில் நாம் பயன்படுத்தினால்கூட எம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியிருக்க முடியும். இங்கு மனித வலுவைக் கொடுப்பதால் பயன்பெறுவது நாங்களல்ல. அவர்களே!

'மருத்துவ பரிசோதனையும் இலவசம்'. உடன்படிக்கையில் குறித்திருந்தார்கள். ஆனால் அரச மருத்துவமனையில் மருத்துவரைச் சந்திக்கவே ஐந்து றியால்கள் கொடுபட வேண்டும். மருந்து மாத்திரைக்கு வேறு தனியாக பணம் கொடுபடவேண்டும். இதற்குரிய பணத்தைக் கம்பனியிடம் கேட்டால் 'வந்தவுடன் இங்கு செய்யப்படும் மருத்துவ சோதனை மட்டுமே இலவசம்' என்பார்கள். விடுமுறைக்கு மருத்துவர் எழுதிக் கொடுத்தால் மட்டுமே சம்பளத்துடன் விடுமுறை அனுமதிக்கப்படும். இல்லாவிடில் ஒருநாள் விடுமுறைக்கு இரு நாள் சம்பளம் வெட்டப்படும்.

**மு.கலை**

கஷ்டங்களையும் இடையூறுகளையும் சமாளித்துக் கொண்டு வருடம் இரண்டை பூர்த்தி செய்திருந்தபோது, கையில் சேமிப்பு எதுவும் இல்லை. கடனும் அதற்கான வட்டியும், இலங்கைப் பிரச்சனை தந்த பணவீக்கத்தினால் விலையேற்றமும் சேர்ந்து உழைத்த காசைக் கரைத்திருந்தன.

மேலும் இரு வருடங்கள் உழைத்துச் சேமித்துக்கொண்டு போகவே நினைத்தாலும் முடியவில்லை. எனது மகள் பிறந்து நாற்பத்தைந்து நாட்களுக்குள் நான் இங்கு வந்து விட்டேன்.

வளர்ந்து அவள் செய்யும் குறும்புகள், சுட்டித்தனங்கள் பற்றி மனைவி எழுதுவாள். அவளது மழலைத்தமிழ், சுட்டித்தனங்கள் இரசித்து அனுபவிக்க வேண்டியவை. அதனை நான் இழந்து கொண்டிருப்பது தனக்கு வேதனை தருவதாக ஒவ்வொரு கடிதத்திலும் எழுதுவாள். அதுதான் ஊர் சென்று வர என்னைத் தூண்டியிருந்தது.

ஊர் சென்று வருவதற்கான விமானச் சீட்டை கம்பனி தருவதால் செலவின்றி மனைவி, பிள்ளையைப் பார்த்துவிட்டு வந்து, மீண்டும் இரண்டு வருடங்கள் இங்கு உழைத்துச் சேமித்துக் கொண்டு திரும்ப வேண்டும். இனி ஊரிலேயே நின்று உழைத்து முன்னேற வேண்டும் என்ற உறுதியான முடிவில் என்னுடன் சுரேஸும் அங்கிருந்தான்.

கம்பனியின் முகாமையாளர் வந்ததும் எம்மை அழைத்தார். அவர் முன் நின்றோம்.

"இந்த வருடத்திலிருந்து எமது கம்பனி புதிய உடன்படிக்கை தயார் பண்ணியுள்ளது. அதன்படி நீங்க ஊர் போவதற்கான விமானச்சீட்டு மட்டுமே எங்களால் தரப்படும். திரும்ப வருவதற்கான விமானச்சீட்டை நீங்கதான் உங்க செலவில் பெற்றுவர வேண்டும்!" என ஆங்கிலத்தில் சொன்னவாறே நாட்டுக்குச் செல்வதற்கான விமானச் சீட்டை வைத்தார்.

ஆத்திரமும் அழுகையும் பொங்கி வர, திரும்ப வருவதற்கான விமானச்சீட்டையும் பெற்றுத்தருமாறு கெஞ்சிக் கேட்டும் தோற்றுப் போனோம்.

விமானச்சீட்டை திரும்ப வரும்போது பெறுவதற்கு மீண்டும் கடன்தான் பெற வேண்டும். அதை வட்டியுடன் தீர்ப்பதற்கே மேலும் பலகாலம் உழைக்க வேண்டி வரும். இதனால் வந்த நோக்கம் நிறைவேறாமலேயே காலத்தையும் ஆசாபாசங்களையும் இழந்து உடலை வருத்த வேண்டியே வரும் என்பது எங்கள் மனதில் உதித்தது.

"எங்களது விடுமுறையை இரத்துச் செய்யுங்கள். இன்னும் இரண்டு வருடம் வேலை செய்த பின்னர் ஊர் போகிறோம்!" எனக் கூறிவிட்டு வெளியே வந்தோம். சேமிப்பு இன்றி ஊர் போவதில் பயனில்லையே! எம் கண்கள் கல்லெறிந்த குளமாகக் கலங்கியிருந்தன.

அன்றிலிருந்து மீண்டும், செக்கில் பூட்டிய மாடுகளாய்ச் சுழன்று கொண்டிருக்கிறோம்.

# மனிதன்

அந்தக் கடை வாசலில் அவன் செத்துக் கிடந்தான். இலேசாக மழை தூறிக் கொண்டிருந்தது... அவனது தலையை அப்படியும் இப்படியும் தூக்கி ஆள்மாறி.. ஆள்மாறி 'அடையாளம்' காண முற்பட்டுக் கொண்டிருந்தனர். சிலர்-செத்த எலியைக் கம்பாலே தூக்கிப் பார்க்கிற மாதிரி' தோள் மறைத்த ஆள் முறைத்த படி நகர.. தலையை நீட்டினேன் நான்.

அவனுக்கு முப்பத்தைந்து வயதுக்குள் தான் இருக்கும். இருந்தாலும் இருபது வயது இளைஞன் மாதிரி இருந்தான். நல்ல சிவப்பு நிறம்- வெள்ளைக்காரன் மாதிரி...

அவன் உடுத்தியிருந்த ஆடைகளைத் தவிர அவனிடம் வேறு ஒன்றுமே இல்லை- உயிரும்தான்.

யாரோ... தூக்கிப் பார்த்து விட்டுப் போட்ட தலை மெதுவாகச் சரிந்து கொண்டிருந்தது தரையை நோக்கி.

அவன் செத்துக் கிடந்தான்...

பக்கத்து ரெகோர்டிங் பாரிலிருந்து... 'முக்காலா... முக்கா புல்லா...' உச்சஸ்தாயியில்.. ஒலித்துக் கொண்டிருந்தது, முன்கடை மரக்கறிக்காரனையும் ஆட வைத்து.

செத்துக் கிடப்பவன்-ஒரு மனிதன். ரெகோர்டிங் பார்... மரக்கறிக் கடை... பஸ் தரிப்பிடம்... எங்கும் மனிதர்கள்.. நானும்தான்!

"ஊ... மெரிலா!" (அவன் செத்துட்டான்) கசிப்பு நாற்றமடித்தது. திரும்பினேன். 'மிளகாய் மில்காரன்' அழகாய்ச் சிரித்தான். உடம்பெங்கும் உறைத்தது எனக்கு. அவனை முறைத்துப் பார்த்தேன். 'சே... என்ன மனிதர்கள் இவர்கள்...?'

"ஆள் 'குடு' காரன் போல....!" என்றான் ஒருவன், இறுதி 'தம்'மை உள்ளிழுத்து பீடித்துண்டை வீசி எறிந்து விட்டு.

"கவ்த.. பீலாத...?" (யாரது.... குடிச்சா?) என்றபடி சனம் விலக்கிப் பார்க்க வந்த பஸ் கண்டக்டரும் கொஞ்சம் போட்டிருந்தான்... ஞான பானம்.

என்ன உலகமடி... இவர்<br>
என்ன மனிதரடி...?

செத்துக் கிடக்கும் இந்த மனிதன் யார்...? வசதியான வம்சத்து வாரிசோ... இல்லாவிட்டால் என்னை மாதிரி ஏழையோ... ஏதாவது யூனிவர்சிட்டி மாணவனோ... அல்லது மணமானவனோ... எப்படியானவனோ...? நல்லவனோ... கெட்டவனோ... யாரோ...?

செத்துக் கிடப்பவன்-ஒரு மனிதன். சுற்றிவர நின்று அவனைக் குடிகாரன் என்றும் குடுகாரன் என்றும் கூறிக் கொண்டிருப்பவர்களும் மனிதர்கள்தான்.

'பாவம்' எனப் பாவம் காட்டி நகர்ந்தவர்கள் எத்தனை பேர்..?

எங்கள் தெருப்பக்கம் யாருக்கும் தெரியாத ஒருவன்தான் செத்தவன் என்பதில் யாருக்குமே சந்தேகம் கிடையாது.

புத்தகக் கடைக்குள் நுழைந்தேன். "யாரது வாசலில் செத்துக் கிடப்பது..?" சிங்களத்தில் கேட்டேன் கடையில் வேலை செய்யும் இளைஞனிடம்.

"யாருக்குத் தெரியும்...!" என்றவன், "கொட்டி த தன்னே நே!" (புலியோ தெரியாது) என்றான், தானொரு சிங்களத்தாய் வயிற்றில் பிறந்த மகன் என்னும் இறுமாப்பில்

"முஞ்சியைப் பார்த்தா 'பொக்கற் காரன்' மாதிரித் தெரியுது.." என்றாள் ஒரு தடிச்சி.

"கையில்... நெஞ்சில்... பச்சை குத்தியிருந்தாலாவது பெயர் பார்த்தறியலாம்... அவன் தமிழா சிங்களமா?" என்று.

"எந்த ஊரோ... என்ன பேரோ...?"

"மொனவத ஓநே..? (என்ன வேணும்?)

புல்ஸ்கெப்தாள் பத்துக் கேட்டேன். தடிச்சி எண்ணி எடுத்துச்சுருட்டிக் கட்டிக் கையில் கொடுக்கும்வரை.. செத்தவனைச் சுற்றியதென் சிந்தை.

காதல் தோல்வியாக இருக்குமோ... கடன் தொல்லையோ... தொழில் இல்லையோ... தற்கொலையா இல்லாவிட்டால் இயற்கை மரணமா... இந்த வயதிலா..?

கண்ணதாசனின் கவிதை வரிகள் என் நினைவுக்கு வந்தன.

சாலையில் போவதோ...<br>
தனி வழிப் பயணம்...<br>
சாலையின் முடிவில்...<br>
சந்திப்பு மரணம்...

பாவம் அவன்!<br>
பசியோடு செத்திருப்பானோ...?



**கிண்ணியா அமீரலி**

என்ன கஷ்டமோ...?

முதுமையை முந்திக் கொண்டு மரணம் வந்துவிடுகிறதே... உண்மைதான்! 'மெய்யென்று மேனியை யார் சொன்னது? வாழ்வே மாயம்தான்!'

தலை சுற்றி மயங்கி விழுந்து கடை வாசற்படியில் அடிபட்டுச் செத்ததாய்.. சந்தியில்... அந்தியில் கண்ட சனமெல்லாம் சாட்சி.

ஆகவே, திடீர் விபத்து மரணமெனத் தீர்ப்பு வரலாம்... ஆனாலும்-ஃபோன் பண்ணியும் இன்னும் வந்து சேரவில்லை போலீசு.

'இது பெரிய வம்பிலே போய் முடியும்' என்ற பயத்தில் மெல்ல விலகியது சனம்.

கடைக்குள் இருந்து வெளியே வந்தேன்.

போவோர் வருவோர் எல்லோரும் செத்துக் கிடந்தவனை ஒரு தரம் எட்டிப் பார்த்து விட்டே நகர்ந்தனர்.

மாலை ஆறு மணிவரை.. குளிரில் நடுநடுங்கியபடி கடையோரம்... படியில் சாய்ந்திருந்தானாம்.

நோயாளியா...? மன நோயாளியா...? தெரியவில்லை. அது என்னமோ தெரியவில்லை... அவனது சாவு கண்ட என் இதயத்துள் இலேசான நோவு....

ஏனிது...?

இது நாள் வரை நான் காணாத சாவா..? என் அடிநெஞ்சை விட்டும் அகலாத அகால மரணங்கள் அநேகம்... ஆரம்பகாலப் பள்ளி வயதில் பக்கத்து வீட்டு நஜ்முன் தாத்தாவின் சின்னக் குழந்தை 'நதீர்' ஆற்றிலே மிதந்து வந்தானே... அந்தப் பாலகனின் பரிதாப மரணத்தை என்னால் மறக்கவே முடியாது. மின் விசிறியில் மோதி... அடிபட்டு... என் கவிதைத் தாள்மீது துடிதுடித்துச் செத்தது ஓர் ஊர்க்குருவி இந்த அஃறிணையின் சாவும்கூட... இன்னும் வலிக்கிறதென் மனசுக்குள்...

இப்பொழுது... இவனது சாவு... செத்துப் போய்க் கிடக்கும் இவன்... நானாக இருந்தால்? என்ற சிந்தனை வந்தபோதுதான் என்மேனி இலேசாக நடுங்கியது.

'என்னை 'அடையாளம் ' தெரிந்தோர் மத்தியிலே மரணிக்கச்செய்து விடு யா! அல்லாஹ்...' என்று மனதுக்குள் பிரார்த்தித்து நடந்தேன்.

'பொக்கற்'றில் என் அடையாள அட்டை பத்திரமாக இருக்கிறதா? என்று தடவிப் பார்த்துக் கொண்டேன்.

புத்தகக் கடையை இழுத்து மூடிக் கொண்டிருந்தார்கள்.

"போலீஸ்... கோர்ட்... என்று அலைய வேண்டி வருமோ...?" என்ற பயமோ... என்ற எனது யோசனைக்குப் பதில் வந்து காதில் விழுந்தது இப்படி.

"முதலாளியின் சின்ன மகள் செல்லமாக வளர்த்த நாய்க்குட்டி கார்மோதிச் செத்துப் போச்சு... அதுதான் நேரத்தோடு கடையைப் பூட்டி விட்டு வீட்டுக்குப் போகிறோம்...!" பாவம்... முதலாளி வீட்டு நாய்க்குட்டி. நன்றியுள்ள மனிதர்கள்!

எவனோ ஒரு அநாதைப் பயல் செத்துப் போய்விட்டான் என்று எதற்காக அழவேண்டும் நாம்? மரணித்தவன் என்ன நம்... மாமனா... மச்சானா...?

நல்ல மனிதர்கள்!

நாய்க்குட்டி செத்ததற்காய்க் கடைமூடும் மனிதாபிமான மிக்கவர்கள். 'வாழ்க நம் நன்றி மிக்க நாய்கள் உள்ள நாடு!"

இரவு.. போலீஸ் வந்திருக்கும்... அவனை இழுத்துக் கொண்டு போய் புதைத்திருக்கும்.

பாவம் அவன்...!

அநாதைப் பிணம்!

இரவு முழுவதும் எனக்குத் தூக்கம் வரவில்லை. அவன்தான் வந்து கொண்டிருந்தான்!

ஒரு வெள்ளைத் தாளில்-எனது பெயர், விலாசம். எழுதி-எனது அடையாள அட்டைக் கவருக்குள் மிகவும் பத்திரமாக மடித்து வைத்தேன்...

யாருக்கும் மரணம் தத்தம் வீட்டுக்குள் நிகழ வேண்டும். யா அல்லாஹ்...!

எனக்கும் மரணம் வரும்.<br>
வந்தால்...<br>
எனது உடலை என்வீட்டுக்கு<br>
முழுதாகச் சேர்த்து விடு!<br>
என்னை அடையாளம் காட்டக்கூடிய<br>
எவரேனும் ஒருவர் இருக்கும் இடத்திலே...<br>
என்னை மரணிக்கச் செய்து விடு!<br>
நாட்டை விட்டுப் பிரிந்தாலும்...<br>
ஊரை விட்டுப் பிரிந்தாலும்...<br>
வீட்டை விட்டுப் பிரிந்தாலும்...<br>
மனிதன் மரணித்தால்-<br>
வீடு போய்ச் சேர்ந்த பின்தான்...<br>
காடு போய்ச் சேர வேண்டும்...!

# தணியாத தாபம்



"அகல்யா! உறுப்புகள் கரைந்து உடல் குறுகித் தேய்ந்து செல்லும் நோயாளர்களைப் பார்த்திருக்கிறாயா?"

"யாரைச் சொல்கிறாய் மாயா, தொழுநோயாளர்களையா?"

"ஆமாம், அவர்களைப் போல் எனக்கும் அங்கங்கள் இற்று விழுந்து விடாதா என்று தோன்றுகிறது... உடலின் ஒவ்வொரு அணுவும் என்னைப் பாடாய்ப் படுத்துகின்றன. பீஷ்மருக்குக் கிடைத்தது போல் பாணங்களினால் செய்யப்பட்ட படுக்கை... அங்கமிழந்தவனின் அம்புகளைத் தாங்க முடியவில்லை இந்த உடலுக்கு.. என் உயிரால் சுமக்க முடியவில்லை இந்தக் கூட்டை...!"

புலம்ப ஆரம்பித்துவிட்ட மாயாவை அகல்யா வியப்போடு பார்த்தாள்.

"உனக்கு என்ன நேர்ந்துவிட்டது? நீ ஏன் புலம்புகிறாய்? உன்னால் வருத்தமுறுகிற ஒருவரை நானறிவேன். உன் கண், இடை, தனம், முறுவல் என்று ஒவ்வொரு அங்கமும் அவரைக் கொல்ல வந்த கூற்றத்தின் இங்கரர்கள் என அவரல்லவா துடித்துக் கொண்டிருக்கிறார். நீயும் உன் அங்கங்களை வெறுக்கிறாய்... அவருக்காகவா தோழி?" கைத்த புன்னகையை இதழ்க் கடையில் வழிய விட்டாள்.

"அவரையும் வாட்டுகின்றன என்றால் இந்த அங்கங்கள் இருப்பதற்கு என்ன தேவை இருக்கிறது? அவரையும் கொன்று என்னையும் கொன்று... சித்திரவதை செய்கிற இந்த உடல் சிதைந்தழிந்து போக வேண்டாமா..?"

"அவரைக் கொல்கிறது என்றா உன் அங்கங்களை நீ வெறுக்கிறாய் தோழி?"

"இல்லை, இந்த உடல் என் உயிருக்குச் செய்யும் வாதையையும் பொறுக்க முடியவில்லை... பற்றி எரிந்து கொண்டிருக்கும் உடல் நெருப்பின் உள்ளே உயிர் கிடந்து அல்லாடுவதை தாங்க முடியவில்லையடி!"

"பல்லுயிர் பருகும் பகுவாய்க் கூற்றம் என்றும் கோமகளுருவமாய்க் கூற்றம் போந்தது என்றும் ஆண் புலவர்கள் பாடியதை அறிந்திருக்கிறேன். பெண்ணே தன் உடலை எமனாகக் காண்பதை நீ சொல்லித்தான் அறிகிறேன் தோழி... அவரைச் சேர்ந்துவிட்டால் உன் நோய் தணிந்துவிடும். அதற்கு ஆவன செய்கிறேன் பொறு!"

அகல்யாவிடமிருந்து விலகி மாறனை நோக்கி ஓடியது மாயாவின் நினைவு.

அவன் கைகளில் தாங்கும் படைக்கலங்கள் எதிரிகளுக்கு வேண்டுமானால் பயத்தை உண்டு பண்ணலாம். ஆனால் எனக்கு அச்சந்தரும் கொலைக் கருவி அவன் முகத்திலிருக்கிறது. என் உயிரை உண்ணும் அவன் முறுவல், அதிலும் ஊடலில் தோற்றுவிட்டால், அவன் கண்களும் இதழ்களும் கூட்டணி அமைத்துக் கொண்டு காட்டும் கோலம் இருக்கிறதே... மாயாவுக்கு நினைக்கிறபோதே உயிருக்குள் சிலிர்ப்பு ஓடியது. மூளைக்குள் தேன் சுரந்தது.

தன் முரட்டு இதழ்களால் பொருதிய வலியை நீக்க உதவுவதுபோல் விரல்களால் உதடுகளை மெல்லத் தடவுவான். கண்களால் ஒத்தடக் கதிர்களைப் பாய்ச்சுவான். அவளுக்கு அழுகை வந்துவிடும். சிணுங்கலும் விம்மலுமாக அவனுள் புதைந்து கொள்வாள்.

அதன்பின் விரல்களால் அவள் உடலின் நாதத்தை வெளிப்படுத்துவான். வீணையென அவள் மேனி நாதசுகம் மிழற்றும். சுகம் மீட்டுகிறவனுக்கு மட்டுமல்ல; வீணைக்கும்தான். அந்த சுக மீட்டலில்-

வீணையின் நரம்புகளிடையே அவன் கவிதைகளைக் கண்டுபிடிப்பான்.

அவளிடமிருந்து அவன் எடுத்த கவிதைகளை அவன் படிக்க அவள் சுகிப்பாள்.

சுகம் உடலுக்குள் இருக்கிறதா? உயிருக்குள் இருக்கிறதா? உயிரின் நினைவுக்கும் சுகித்தல் உண்டு. காமச் சுவை மனதுக்குள்தான் மறைந்திருக்கிறது. ஆனால் உடல் இல்லாவிட்டால் அது உற்பத்தியாகுமா?

ஆனந்த மிகுதியில் அவள் கண்ணில் நீர் துளிர்த்தது. அதன் உப்புச் சுவையை நாக்கில் ருசித்தபடி சொன்னான்:

"அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்...?"

"ஹ்ம்.. எங்கே...?"

"இதோ, அடைத்து வைக்க முடியாத அன்பு உன் கண்களின் வழியே வெளிப்படுகிறது."

"இல்லை, அன்பிற்கு உண்டு அடைக்கும் தாழ்ப்பாள்...!"

"என்ன?"

"ஆமாம்! உங்களை என் இதயத்தினுள் அடைத்து வைத்திருக்கிறேன், வெளியேற முடியாதபடி..." சிரிப்பில் சில பூக்களை மலர்வித்தாள்.

"சிரிக்காதே. களவாணிப் பயல்கள் கண்டால் இந்த முத்துக்களைக் களவாடிச் சென்றுவிடுவார்கள்... மீறிச் சிரித்தாயானால் என் உதடுகளால் அடைத்து விடுவேன்!"

"நீங்கள்தான் மகா கள்வராயிற்றே.."

காற்றுக்கும் கேட்டுவிடக்கூடாது என்ற கவனத்தோடு அவள் காதுக்குள் என்னவோ உதடசைத்தான்.

அவன் இரகசியம் அவள் முகத்தில் நாணம் அள்ளிப் பூசியது. அவன் மார்பிற்குள் அதை மறைத்தாள்.

"கலைகளின் பணி மனதை மலர்விப்பது என்றால், கலைகளில் எல்லாம் உயர்ந்த கலை இந்த நாணம்தான் கண்ணே...!"

முகம் திருப்பினாள். மதர்த்த விழிக் கடலின் சுழலுக்குள் அவனை இழுத்தாள். திசை, நிலை, காலம் தடம் தெரியாமல் இழுத்துச் செல்லப்பட்டான்.

ஊழியின் முடிவு எத்தனை வருடங்களில் ஆகும்?

கண்களில் தொலைந்ததை கன்ன ஸ்பரிஸத்தில் மீட்டுக் கொண்டான்.

அவள் கன்னம் தெரிந்தது அவன் கண்களுக்கு. முத்தச் சூட்டில்

எழுதுவது

முழடில்ஸ்யன்

நாணத்தின் சாயை கரைந்திருந்தது. அவனது மூச்சின் பேரோசையில் அவளுக்கு விழிப்பு வந்தது.

விரல்களால் கன்னம் திருப்பி, "முத்துக்கள் பத்திரமாய் உள்ளதா, பரிசோதிக்க வேண்டும்..." என்றான்.

"ச்சீ.. விடுங்கள்!" என்றாள்.

"என்னடி மாயா கனவு?" என்று உலுக்கினாள் அகல்யா.

அந்திச் சிவப்பை முகம் வாங்கியது.

"உலகில் சிறந்த கலை எது அகல்யா?"

## இலக்கிய நயம்

"உன் மாறாட்டக் குணங்களுக்கெல்லாம் நான் ஏதேதோ காரணங்களைக் கண்டு பிடித்து உனது தாயாரிடம் சொல்லிக் கொண்டிருக்கிறேனே.. அந்த நடிப்புத்தான்."

"பொல்லாத கள்வரடி!"

"ஏய் மாயா, சுயநினைவுக்கு வா. வெளியே போயிருக்கும் உன் அம்மா திரும்பி வந்துவிடப் போகிறார்கள்..."

"ஔவை ஒரே இரவில் முதுமை அடைந்தது உண்மைதானா அகல்யா?"

"உண்மைதான், ஏனடி?"

"இந்த அம்மாவும் அப்படித்தான் ஆனவளா? என் போல இளையவளாய் இருக்காது ஒரே நாளில் முதியவளாகி விட்டாளா?"

"ஏன் கேட்கிறாய்... 'ஈதல் அறம், தீவினை விட்டு ஈட்டல் பொருள், எஞ்ஞான்றும் காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம், பரனை நினைந்து இம்மூன்றும் விட்டதே பேரின்ப வீடு...' என்று பாடுகிறாளா உன் அன்னை?"

"அவ்வாறிருந்தால்தான் பரவாயில்லையே.. காதலர் கருத்தொருமித்து ஆதரவு பட்ட இன்பத்தை அறிந்திருக்கிறாளே என்று மகிழ்ச்சி கொள்ளலாம். இவள், காதலரைக் கண்ணால் கூடப் பார்க்கக்கூடாது என்று கடிகிறாளே... இளமைப் பருவத்தை என்போன்ற அவஸ்தைகளுடன் கடந்துதானே என் தாயும் முதியவளாய் வளர்ந்திருக்க வேண்டும். என் பருவத்து உணர்ச்சிகளையும் வேதனையையும் இவள் அறியாமலே வளர்ந்திருப்பாளா? இல்லையே.. எப்படி இவள் என் மாறனைக் கண்கொண்டு பார்க்காதே என்ற உத்தரவிட மனங் கொண்டாள்! இளையவளாய் இருக்காமல் திடீரென்று மூத்தவளா என் தாய்.. சொல்லடி என் தோழி?"

**வளையவாய் நீண்ட தோள்**
**வாட்கணாய்! அன்னை**
**இளையளாய் மூத்திலள்**
**கொல்லோர்!-தளையவிழ்தார்**
**மண்கொண்ட தானை**
**மறங்கனல் வேல் மாறனைக்**
**கண்கொண்டு நோக்கல் என்**
**பாள்!**

**-முத்தொள்ளாயிரம்**

## சிந்தியா பதில்கள்

**✪ இந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் எதிர்த்து வாக்களித்திருந்தாலும், இதற்கு முந்தைய ஜனாதிபதித் தேர்தலில் தீர்வைக் கொண்டு வரும்படிதான் சந்திரிக்காவுக்கு வாக்களித்திருந்தார்கள். எனவே தீர்வைக் கொண்டுவர வேண்டிய கடப்பாடு சந்திரிக்கா அம்மையாருக்கு தமிழ் மக்கள் ஆணைப்படியும் உள்ளதாக சில தமிழ்த் தரப்பினர் கருத்துத் தெரிவிப்பது பற்றி...?**

எஸ். சுதர்சன், வவுனியா

தமிழர்களா, கொக்கா? நீ கலக்காவிட்டால் என்ன உன் அப்பன் கலக்கியிருப்பான். தாத்தா கலக்கியிருப்பான் என்று பாய்ந்து குரல்வலையைப் பிடித்துவிட மாட்டோமா, என்ன?

❑❋

**✪ டியர் சிந்தியா உங்களுக்குப் பிடித்த நடிகர் யார்?**

கே. கவிமதி, யாழ்ப்பாணம்.

ப: சிவாஜி கணேசன் என்று சொன்னால் ஐம்பதுக்கு மேல் வயதையும், கமல்ஹாசன் என்று சொன்னால் முப்பதுக்குமேல் வயதையும் சிந்தியாவுக்குக் கணக்கிட்டுக் கொள்ளலாம் என்று முயல்கிறீர்களா? முடியாது அம்மணி. எனக்குப் பிடித்தவர் அஜித்.

❑❋

**✪ செத்தும் கொடுத்த சீதக்காதி என்று யாரைச் சொல்வீர்கள்?**

எம்.எஸ். பாரூக், கல்முனை.

இலகுவான வெற்றியை உறுதிப்படுத்திய தற்கொலைக் குண்டுதாரியை இன்றைய ஜனாதிபதி சொல்லலாம்.

என்னைப் பொறுத்தவரையில் செத்தும் கொடுத்தவர்களை என்ன யோசித்தும் சட்டென்று ஞாபகத்திற்கு கொண்டுவர முடியவில்லை. செத்தும் கெடுக்க நினைத்த ஒரு கதை கேள்விப்பட்டிருக்கிறேன். அந்தப் பணக்காரப் பெண்மணி, ஓர் ஓவியரை வரவழைத்து தன்னுடைய உருவப் படத்தை வரையச் சொன்னாள்.

படத்தை வரைந்து முடித்துவிட்டு, "எப்படி இருக்கிறது இந்தப் படம், உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?" என்று அம்மையாரிடம் கேட்டார் ஓவியர்.

"மிகவும் நன்றாக இருக்கிறது." என்று கூறிய அந்த அம்மையார், "ஆனால் அந்தப் படத்தில் என்னுடைய இரண்டு கைகளிலும் இரண்டு தங்க வளையல்களை நீ வரைய வேண்டும் என்று நான் விரும்புகிறேன். மேலும் கழுத்தில் ஒரு முத்துமாலை, காதுகளில் மாணிக்கக் கம்மல் ஜொலிக்க வேண்டும் என்றும் விரும்புகிறேன். அதுமட்டுமில்லை. ஒவ்வொரு விரலிலும் ஒரு வைர மோதிரம் ஜொலிக்க வேண்டும்...!" என்று மேலும் மேலும் அடுக்கிக்கொண்டே போனாள். இதைக் கேட்டுத் தடுமாறிப்போன ஓவியர், அவளிடம் கேட்டார்: "ஏன் அப்படியெல்லாம் நகைகளைப் போட்டு நல்ல படத்தைப் பாழடிக்க விரும்புகிறீர்கள்?"

"என் கணவன் ஓர் இளவயதுச் சிறுக்கியுடன் சுற்றிக் கொண்டிருக்கிறான். நான் இறந்த பிறகு என் உடம்பிலுள்ள அந்த நகைகளை அவள் தேடிப்பார்த்து, அதனால் அவளுக்குப் பைத்தியம், பிடிக்க வேண்டும்!" என்றாள் அந்த அம்மையார்.

❑❋

**✪ சிந்தியா! இன்றைய திரைப்பாடல்கள்...?**


எஸ். சுஜிதரன், கொழும்பு-06.

"கொடுங்கண் வலையால் உயிர் கொல்வான் நுந்தை நெடுங்கண் வலையால் உயிர்கொல்வை மன்நீயும்." என்று இளங்கோ வடிகள் எழுதுகிறார்.

"படைவீரர்கள் தத்தம் கத்திகளால் கொல்கிறார்கள். பெண்கள் தத்தம் கண்களால் கொல்கிறார்கள்." என்றான் பிறமொழிக் கவிஞன் ஒருவன்.

'உயிருண்ணும் கண்களை' கம்பராமாயணத்திலும் படிக்கிறோம். 'கயல்விழிச் சிறு மானினைக் காண காமனம்புகள் என்னுயிர் கண்டவே' என்கிறான் பாரதி. 'வேல் விழியால் எந்தன் விலாப்புறத்தில் கொத்தாதே!' என்று பதறுகிறார் பாரதிதாசன்.

இப்போது புதிய திரைப்பாடல் வரியொன்றைப் பாருங்கள்: "ரத்தம் வராமல் கண்களால் என்னைத் துண்டாடினாள்..."



அஜித் குமார்

❑❋

**✪ மூத்தோர் வார்த்தையும் முழுநெல்லிக் கனியும் முன்னால் கசக்கும் பின்பு இனிக்கும் எப்படி?**

எம். கதிர், பாசறை.

மூத்தோர் அறிவுரைகள் எனக்கு ஒரு போதும் கசப்பதில்லை. பெரியவர்களிடம் ஆலோசனை என்பதெல்லாம் நாம் நினைப்பவற்றைச் சரியென்று நிறுவுவதற்குத் தானே...

❑❋

**✪ தமிழ்க் கட்சிகள் ஒற்றுமைப்பட வாய்ப்பே இல்லையா?**

பா. ராஜேஷ், மூதூர்.

தமிழ்க்கட்சிகள் தலைவர்கள் ஒவ்வொருவரையும் பற்றி தமிழ் மக்கள் உண்மையாக என்ன அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள் என்பதை உள்ளபடியே இவர்கள் அறிந்துகொள்ள நேர்ந்தால் ஒருவேளை அந்த வாய்ப்பு உண்டாகலாம்.

தமிழ் மக்கள் பயமின்றி வாயைத் திறப்பதற்கு விடவேண்டும்.

❑❋

**✪ இரண்டாயிரமாம் ஆண்டிலாவது இங்கே அமைதி கிட்டுமா?**

ம. வரலட்சுமி, கண்டி.

ம்ம்ம்....

❑❋

**✪ உங்களுக்குத் தெரிந்த தற்காப்புக் கலை?**

எம்.எம். நியாஸா, கொழும்பு-06

ஓட்டம்.

❑❋

**✪ மரங்கள் பேசுமானால்...?**

என். சார்ள்ஸ், வத்தளை.

நீட்டோலை வாசியாது நிற்பவன் மனிதன்.

❑❋

**✪ பிடித்த பொன்மொழி ஒன்று?**

எஸ். தயானந்தன், புத்தளம்.

ஒன்றல்ல இரண்டு சொல்லலாம்.

"எல்லாமே சொல்லப்பட்டுவிட்டன"- அதைச் சொன்னவர் பைரன்.

"எல்லாம் எப்போதோ முடிந்த காரியம்." இதைச் சொன்னவர் யோகர் சுவாமிகள்.

# திருமறை தரும் பொது நெறி

## புதிய ஆகமம் 29

ஆண்டவருடைய விருப்பமே தன்னுடைய விருப்பம் என்றும் ஆண்டவரின் ஆணைப்படியே தன்னுடைய வார்த்தைகளும் செயல்களும் அமைகின்றன என்றும் தமது சீடர்களிடமும், தமது அருளுரைகளைக் கேட்பதற்காகக் கூடும் மக்களிடமும் இயேசுபிரான் கூறிவந்தார்.

இயேசுபிரான் கூறும் எல்லா வார்த்தைகளுமே அவருடைய சீடர்களுக்கு முழுமையாகப் புரிந்து விடுவதுமில்லை. ஆகவே அவர்களிடம் இயேசுபிரான், தனது வார்த்தைகளை விளங்கிக்கொள்ள முடியாதவர்கள், அதற்கான உரிய வேளைவரும்போது புரிந்துகொள்வார்கள் என்று கூறினார்.

இயேசு பெருமான் தனது தந்தையாகிய ஆண்டவரிடம் போகும் காலம் நெருங்கிவிட்டதை ஏற்கனவே அறிந்துகொண்டார். தன்னுடன் நெருக்கமாக இருந்த சீடர்கள்மீது அளவற்ற அன்பு கொண்டவராக இருந்தார்.


இரவு உணவுக்காகச் சகல ஆயத்தங்களும் செய்யப்பட்டு, சீடர்கள் அனைவரும் மேசையைச் சுற்றி அமர்ந்திருந்தனர். பாஸ்கா விழா தொடங்கியிருந்த வேளை அது.

தமது இருக்கைவிட்டு எழுந்திருந்த இயேசுபிரான் தனது மேலாடையைக் கழற்றினார். ஒரு துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டார். ஒரு பாத்திரத்தில் தண்ணீரை எடுத்து, தமது சீடர்களின் கால்களைக் கழுவினார். தமது இடையில் கட்டிய துண்டை

# "வழியும் உண்மையும் வாழ்வும் நானே!"

எடுத்து அவர்களுடைய கால்களைத் துடைத்தார்.

இவ்வாறு ஒவ்வொருவருடைய கால்களையும் இயேசுபிரான் கழுவிக்கொண்டு வரும்



வேளை, சீமோன் பேதுருவின் கால்களைக் கழுவ முற்பட்டபோது, அவர் மறுப்புத் தெரிவித்தார். "ஆண்டவரே! நீர் என் கால்களைக் கழுவுவதற்கு நான் அனுமதிக்க மாட்டேன்!" என்றார். இயேசுபிரான் "நான் உன் காலடிகளைக் கழுவாவிட்டால் உனக்கு என்னோடு பங்கு இல்லை என்றாகிவிடும்!" என்றார்.

சீமோன் பேதுரு: "அப்படியானால் ஆண்டவரே! என் கால்களை மட்டுமல்ல, என் கைகளையும் கழுவிவிடும், என்றார். இயேசுபெருமான் அவரிடம்: "ஏற்கனவே குளித்து விட்டவர் கால்களை மட்டும் கழுவினால் போதும். அவர் தூய்மையாகி விடுவார். நீங்களும் தூய்மையாகி இருக்கிறீர்கள். ஆனாலும் அனைவரும் தூய்மையாக இல்லை!" என்றார்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டது, தன்னைக் காட்டிக்கொடுப்பதற்காக குருக்களிடம் பணம் பெற்றுக்கொண்டவனான யூதாசு இஸ்காரியோத்து அங்கே அமர்ந்திருப்பதை அறிந்திருந்தமையினால்தான். கால்களைக் கழுவி முடிந்தபின் தனது மேலாடையை அணிந்துகொண்டு தமது இருக்கையில் அமர்ந்துகொண்டார். தமது சீடர்களைப் பார்த்து இயேசுபிரான்:

### "இருக்கிறவர் நானே!"

"நான் உங்களுக்குச் செய்தது என்னவென்று உங்களுக்குப் புரிந்ததா? நீங்கள் என்னைப் 'போதகர்' என்றும் 'ஆண்டவர்' என்றும் அழைக்கிறீர்கள். நீங்கள் அவ்வாறு கூப்பிடுவது முறையே. நான் போதகர்தான், ஆண்டவர்தான். ஆகவே ஆண்டவரும் போதகருமான நான் உங்கள் காலடிகளைக் கழுவினேன் என்றால் நீங்களும் ஒருவர் மற்றவருடைய காலடிகளைக் கழுவக் கடமைப்பட்டிருக்கிறீர்கள்.

நான் செய்தது போல நீங்களும் செய்யுமாறு நான் உங்களுக்கு முன்மாதிரி காட்டினேன். பணியாளர் தலைவரைவிடப் பெரியவர் அல்ல; தூது அனுப்பப்பட்டவரும் அவரை அனுப்பியவரை விடப் பெரியவர் அல்ல என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். இவற்றை நீங்கள் அறிந்து அதன்படி நடப்பீர்கள் என்றால் நீங்கள் பேறுபெற்றவர்கள்.

உங்கள் அனைவரையும்பற்றி நான் பேசவில்லை. நான் தேர்ந்துகொண்டவர்கள் யாரென எனக்குத் தெரியும். எனினும்,

"என்னோடு உண்பவனே
என்மேல் பாய்ந்தான்"

என்னும் மறைநூல் வாக்கு நிறைவேறியாக வேண்டும். அது நிறைவேறும்போது, 'இருக்கிறவர் நானே' என்று நீங்கள் நம்புமாறு இப்போதே, அது நிறைவேறுமுன்பே, அது பற்றி உங்களுக்குச் சொல்லி வைக்கிறேன்.

நான் அனுப்புகிறவரை ஏற்றுக்கொள்பவர் என்னையே ஏற்றுக்கொள்கிறார். என்னை ஏற்றுக்கொள்பவர் என்னை அனுப்பியவரையே ஏற்றுக்கொள்கிறார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்."

### காட்டிக்கொடுப்பவன்...

சீடர்களுடன் இவ்வாறு உரையாடிக் கொண்டிருந்த இயேசுபிரான் சற்றுக் கலக்கமடைந்தவராகக் காணப்பட்டார். அவர் தமது சீடர்கள் அனைவரையும் உற்று நோக்கியவராக "உங்களில் ஒருவனே என்னைக் காட்டிக் கொடுப்பான்!" என்றார்.

எவரையும் தனியாகக் குறிப்பிடாமல், பொதுவாக அவர் கூறியதும் அவர்கள் துணுக்குற்றனர். குழப்பமடைந்தவர்களாக ஒருவரை ஒருவர் நோக்கினார்கள். சீமோன் பேதுரு, இயேசுபிரானின் அருகிலேயே அவர்மீது சாய்ந்துகொண்டிருந்த மற்றொரு சீடனைப் பார்த்து, "யாரைப் பற்றிக் கூறுகிறார் என்று கேள்!" என்றார். அவரும் "ஆண்டவரே! யாரைப் பற்றிக் குறிப்பிடுகிறீர்கள்?" என்று வினவினார்.

## இராஜகுமாரன்

"யாருக்கு நான் அப்பத்துண்டைத் தோய்த்துக் கொடுக்கிறேனோ, அவன்தான்!" என்று கூறியபடி அப்பத்தில் ஒரு துண்டைத் தோய்த்து சீமோன் இஸ்காரியோத்தின் மகனான யூதாசிடம் கொடுத்தார். அவனிடம் "நீ செய்ய விருப்பதை விரைவில் செய்!" என்றார்.

இச்சம்பவம் நடைபெற்றபோதும், ஏனைய சீடர்களுக்கு எதுவுமே புரியவில்லை. குழப்ப நிலையில்தான் இருந்தார்கள். திருவிழா காலம்; அதேவேளை யூதாசிடம் பணப் பையும் இருந்தது. தேவையான பொருட்களை வாங்குவதற்காகவோ, ஏழைகளுக்குக் கொடுப்பதற்காகவோ அவ்வாறு இயேசுபிரான் கூறியிருக்கலாம் என்று அவர்கள் கருதினார்கள். யூதாசு இயேசுபிரானுடன் அப்பத்துண்டைப் பெற்றுக் கொண்டதும் அங்கிருந்து வெளியேறினான்.

### புதிய கட்டளை

அவன் வெளியே போனபின் இயேசு, "இப்போது மானிடமகன் மாட்சி பெற்றுள்ளார். அவர் வழியாகக் கடவுளும் மாட்சி பெற்றுள்ளார். கடவுள் அவர் வழியாக மாட்சி பெற்றாரானால் கடவுளும் தம் வழியாய் அவரை மாட்சிப்படுத்துவார். பிள்ளைகளே, இன்னும் சிறிது காலமே உங்களோடு இருப்பேன். நீங்கள் என்னைத் தேடுவீர்கள். ஆனால் நான் போகும் இடத்திற்கு உங்களால் வர இயலாது. இதையே யூதர்களுக்குச் சொன்னேன்; இப்போது உங்களுக்குச் சொல்கிறேன். 'ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்' என்னும் புதிய கட்டளையை நான் உங்களுக்குக் கொடுக்கிறேன். நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல் நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள். நீங்கள் ஒருவர் மற்றவருக்குச் செலுத்தும் அன்பிலிருந்து நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லாரும் அறிந்துகொள்வர்" என்றார்.

### முன்னறிவித்தல்

சீமோன் பேதுரு இயேசுவிடம், "ஆண்டவரே நீர் எங்கே போகிறீர்?" என்று கேட்டார். "நான் போகுமிடத்திற்கு என்னைப் பின்தொடர்ந்து வர இப்போது உன்னால் இயலாது; பின்னரே என்னைப் பின்தொடர்வாய்!" என்றார். பேதுரு அவரிடம் "ஆண்டவரே ஏன் இப்போது நான் உம்மைப் பின் தொடர இயலாது? உமக்காக என் உயிரையும் கொடுப்பேன்" என்றார். இயேசு அவரைப் பார்த்து, "எனக்காக உயிரையும் கொடுப்பாயோ? நீ மும்முறை என்னை மறுதலிக்குமுன் சேவல் கூவாது என உறுதியாக உனக்குச் சொல்கிறேன்." என்றார்.

"நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம். கடவுளிடம் நம்பிக்கைகொள்ளுங்கள். என்னிடமும் நம்பிக்கை கொள்ளுங்கள். என் தந்தை வாழும் இடத்தில் உறைவிடங்கள் பல உள்ளன. அப்படி இல்லையெனில், 'உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்யப்போகிறேன்.' என்று சொல்லியிருப்பேனா? நான் போய் உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்த பின் திரும்பிவந்து உங்களை என்னிடம் அழைத்துக் கொள்வேன். அப்போது நான் இருக்கும் இடத்திலேயே நீங்களும் இருப்பீர்கள். நான் போகுமிடத்துக்கு வழி உங்களுக்குத் தெரியும். வழியும் உண்மையும் வாழ்வும் நானே. என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை.

நீங்கள் என்னை அறிந்திருந்தால் என் தந்தையையும் அறிந்திருப்பீர்கள். அவரைக் கண்டுமிருக்கிறீர்கள்."

பிலிப்புக்கு இயேசுபெருமான் கூறிய வார்த்தைகள் சரியாகப் புரியவில்லை. அவர் இயேசுபெருமானை நோக்கி, "ஆண்டவரே! தந்தையை எங்களுக்குக் காட்டும். அதுவே போதும்!" என்றார். இயேசு பெருமான் பேதுருவிடம் இவ்வாறு கூறினார்.

"பிலிப்பே, இவ்வளவு காலம் நான் உங்களோடு இருந்தும் நீ என்னை அறிந்து கொள்ளவில்லையா? என்னைக் காண்பது தந்தையைக் காண்பது ஆகும். அப்படியிருக்க, 'தந்தையை எங்களுக்கு காட்டும்' என்று நீ எப்படிக் கேட்கலாம்? நான் தந்தையினுள்ளும் தந்தை என்னுள்ளும் இருப்பதை நீ நம்புவதில்லையா?

நான் உங்களுக்குக் கூறியவற்றை நானாகக் கூறவில்லை. என்னுள் இருந்துகொண்டு செயலாற்றுபவர் தந்தையே. நான் தந்தையுள் இருக்கிறேன்; தந்தை என்னுள் இருக்கிறார். நான் சொல்வதை நம்புங்கள்; என் வார்த்தையின் பொருட்டு நம்பாவிட்டால் என் செயல்களின் பொருட்டாவது நம்புங்கள். நான் செய்யும் செயல்களை என்னிடம் நம்பிக்கை கொள்பவரும் செய்வார்; ஏன், அவற்றைவிடப் பெரியவற்றையும் செய்வார்.

ஏனெனில் நான் தந்தையிடம் போகிறேன் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் என் பெயரால் கேட்பதையெல்லாம் நான் செய்வேன். இவ்வாறு தந்தை மகன் வழியாய் மாட்சி பெறுவார். நீங்கள் என் பெயரால் எதைக் கேட்டாலும் செய்வேன். நீங்கள் என்மீது அன்புகொண்டிருந்தால் என் கட்டளைகளைக் கடைப்பிடிப்பீர்கள்.

உங்களோடு என்றும் இருக்கும்படி மற்றொரு துணையாளரை உங்களுக்குத் தருமாறு நான் தந்தையிடம் கேட்பேன். அவரே உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார். உலகம் அவரை ஏற்றுக்கொள்ள இயலாது. ஏனெனில் அது அவரைக் காண்பதுமில்லை, அறிவதுமில்லை.

(தொடர்ந்து வரும்)

**திருமறை [பு.ஆ] 26 விடை:** ☛ திருடர் அல்லது கொள்ளையர்

**பரிசு பெறுவோர்:**

1. **கே. மயில்வாகனம்,** செல்வா நகர்-02, ஆரையம்பதி.
2. **எம். எஸ். நிஹாரா,** 125, நூர் புற, கூ/பாணகமுவ.
3. **நா. விஸ்வநாத்,** 10ம் கல் வீதி, கொம்மாதுறை.
4. **து. பரிமளாதேவி,** 43/1, திகன-பத்தனை, கலஹா.
5. **ப. சங்கீதா,** 50/3, கன்னாரைத் தெரு, கொழும்பு-13.

**திருமறை [பு.ஆ] 29 வினா :-** யூதாசு இஸ்காரியோத்துக்கு இறுதியாக இயேசு என்ன கொடுத்தார்?

ஜனவரி 08 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டியமுகவரி:
**திருமறை–பு.ஆ.29–தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**




## ஏடா கூடமான பதில்கள்

பெர்னாட்ஷோவின் வீட்டிற்கு ஒரு பெண் வந்தாள்.

அவள் பெர்னாட்ஷோவின் அறையைப் பார்த்துவிட்டு,

"செடிகொடிகள் மீதும், மிருகங்கள் மீதும் நீங்கள் கருணை கொண்டவர் என்று சொல்கிறார்கள். ஆனால் உங்கள் வீட்டில் ஒரு பூச்செடியோ, ஒரு வளர்ப்பு மிருகமோ இல்லையே ஏன்?" என்று கேட்டாள்.

அதற்கு பெர்னாட்ஷோ,

"எனக்குக் குழந்தைகளை மிகவும் பிடிக்கும். அதற்காகக் குழந்தைகளின் கால்களை முறித்துத் தொட்டிகளில் வைக்க முடியுமா?" என்று சிரித்தபடி கேட்டார்.

கேள்வி கேட்ட பெண் 'கப்சிப்' ஆகி விட்டாள். ■



அதிஷ்டத்தை அள்ளித் தரும் அதிசயக் கற்கள்

Accredited by National Gem & Jewellery Authority

அருள் ARUL JEWELLERS

3, Sea Street, Colombo - 11. Tel: 436331

Branch: 105, Galle Road, Colombo 6. Tel: 580230




## அதிகம்

← ஜெர்மன் நாட்டவரான மைக்கேல் ஸ்குமாச்சர் அந்நாட்டின் ஃபோர்மூலா சாரதிகளில் அதிக வருமானம் பெறுபவராகக் கணக்கிடப்பட்டுள்ளார்.

1996ம் ஆண்டு ஃபெராரியின் ஃபோர்மூலா அணிக்காக சாரதியாகப் பணிபுரிந்ததில் மிக உச்சக்கட்டமாக 2 1/2 கோடி டொலர் சம்பாதித்துள்ளார். அடுத்த வருடம்-1997ல் இவர் பெற்ற வருமானம் 3 1/2 கோடி டொலர். சம்பளம், போட்டி வெற்றி மற்றும் ஆதரவு வழங்கும் நிறுவனங்களின் கொடைகள் மூலம் இத்தொகை மைக்கேலுக்குக் கிடைத்திருக்கிறது.




ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11

5 செட்டியார் தெரு, கொழும்பு 11

323657


↓ இந்தியாவில் மும்பையைச் சேர்ந்த இந்தச் சின்னப்பூவின் வயது இரண்டே இரண்டு. இந்தப்பூ, இடை வெளியின்றி ஒரு மணி நேரத்திற்கும் மேலாக கடலில் நீந்தி சாதனை புரிந்திருக்கிறாள்.

தன் அபாரத் திறமையால் மற்றவர்களை மலைக்கவைத்த இந்தச் சின்னஞ்சிறு பெண்ணின் பெயர் ஹிமாத்ரி. 'ஹிமாத்ரி' என்றால் மலை என்று அர்த்தம்.

அசுர சாதனை நிகழ்த்தியிருந்தாலும் இதை 'கின்னஸ்' நிறுவனம் அங்கீகரிக்க மறுத்து விட்டதாம்.


காரணம்- விதிமுறைகள்.

நீச்சல் சாதனையைப் பொறுத்த மட்டில் வேகமும், தூரமும் மட்டும்தான் கருத்திற்கொள்ளப் படுமாம்.

வயது பற்றிக் கவலையில்லையாம்.



## மலை



## விளையாட்டுப் பேசி

↑ ஜப்பானின் பிரபலமான செல்லிடப் பேசி தொலைபேசி நிறுவனமான NTT டொக்கோமோ நிறுவனம், அதே தொலைபேசியுடன் ஒரு கணனி விளையாட்டுச்சாதனம் ஒன்றையும் இணைத்து சந்தைப்படுத்துகிறது. இப் புதிய சாதனத்தை அந்நிறுவனத்தில் பணிபுரியும் பெண்ணொருத்தி அறிமுகப்படுத்துகிறார்.

(பட உதவி: ஏ.எம்.ர.பியுமன், கட்டார்.)

↘ சிலந்திகளில் பலவகை உண்டு. படத்தில் காணப்படுவது தென் அமெரிக்காவின் வடகிழக்குக் காடுகளில் காணப்படும் பெரிய அளவிலான சிலந்தி வகையைச் சேர்ந்தவை. இதனை 'கோலியத்-பறவைகளை உண்ணும் சிலந்தி' என்று கூறுகிறார்கள். இவை உண்மையில் பறவைகளைப் பிடித்துத் தின்னுமா என்பது தெரியாது. இருப்பினும் சாதாரண சிலந்திகளைவிட இவை சற்றுப் பெரியவைதான்.

இவற்றின் கால்களை நீட்ட வைத்து அளந்து பார்த்தால் சுமார் 28 சென்டி மீட்டர் (11 அங்குலம்) நீளம் உள்ளது.

பார்க்கும்போது நம் நாட்டில் காணப்படும் புலிமுகச் சிலந்திபோல் காட்சி தருகிறதல்லவா?



## பெரியவர்

## 1வது பிறந்தநாள் வாழ்த்து 02.01.2000



### செல்வன் கெவின் விஸ்வந்த் (Kevin Wishvanth)

தட்சணாமூர்த்தி-புஷ்பலோஜனி தம்பதியினரின் செல்வப் புதல்வன் 'கெவின் விஸ்வந்த்' தனது முதலாவது பிறந்த தினத்தை மிலேனியம் வருட ஜனவரி மாதம் இரண்டாம் திகதி Canada Scarboroughஇல் உள்ள தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, மகாதேவன் பெரியப்பா, கீதா பெரியம்மா, முருகேஷ் மாமா, மனோன்மணி மாமி, சிவநாதன் மாமா, தவமணிமாமி, ரவிமாமா, புஷ்பமலர் மாமி, நாதன் சித்தப்பா, மோகன் சித்தப்பா, சரஸ்வதி சித்தி, சிவராச சித்தப்பா, கவிதா சித்தி, மதன்மாமா, வினோமாமா, திஷாந்தனி மாமி, பெரிய அம்மம்மா, அண்ணன்மார், நிருஷன், கபில், அக்காமார் தர்ஷிகா, சநீரா, மச்சான்மார் சபேஷ், திவா, கௌசிகன், மச்சாள்மார் ஜனனி, தர்மிதா, சுதீரா, மற்றும் விளி, யாமினி, மதி ஆகியோர் அனைவரும் ஸ்ரீ ராகவேந்திரன் அருள்பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்: அப்பா மூர்த்தி, கனடா.

↓ மைதானத்தில் விளையாடப்படும் உதைப்பந்தாட்டப் போட்டியைக் கண்டு களித்திருப்பீர்கள். இது நீருக்கடியில் விளையாடப்படும் உதைப்பந்தாட்டம். சுவாச வாயுக் குழாய்மூலம் சுவாசித்துக்கொண்டு கண்ணுக்குள் நீர் செல்வதைத் தடுத்துக் கண்ணாடி அணிந்து கொண்டு உதைபந்து விளையாடுகிறார்கள். 1999 அக்டோபர் 26ம் திகதி தென்கொரிய தலைநகரான சியோல் ஒலிம்பிக் பாக் மைதானத்தில் உள்ள நீர்த்தடாகத்தில் இப்போட்டி நடைபெற்றது. இதில் கொரிய (சிகப்பு ஆடை) அணியும், ஜப்பான் (நீல ஆடை) அணியும் மோதின.

தரையில் விளையாடப்படும் உதைபந்து போலவே இந்த நீர்ப்பந்துப் போட்டி விதிகளும் உள்ளன. வருகின்ற ஒலிம்பிக் போட்டியில் இந்த நீர்ப்பந்துப் போட்டியும் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளதாம்.

(பட உதவி: அஸாம் அலி-அகமட நியாஸ்)



## நீர்ப்பந்து